Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8+IV

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 2

ஞாயிற்றுக்கிழமை 27 ஓகஸ்ட் 2023

ஆவணி 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## ஐ.நா. வில் ரணில்!

கொழும்பு, ஓக. 27
ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தொடரில்கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த »15

## கோழி இறைச்சி விலை குறைப்பு

கொழும்பு, ஓக. 27
ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைக்க அகில இலங்கை »15



## கஜேந்திரகுமாருக்கு முடிவுகட்டவேண்டும்

### அவரின் வீட்டுக்கு முன்பாக கம்மன்பில நேற்றுப் போராட்டம்

கொழும்பு, ஓக. 27
இனவாதம் கக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தி அவரின் கொழும்பு இல்லம் அமைந்துள்ள வீதியில் நேற்று இரண்டாவது »15

## யாழ்ப்பாணமெங்கும் ஆங்கில ஆக்கிரமிப்பு

### பட்டிமன்றம் ராஜா கவலை

யாழ்ப்பாணம், ஓக. 27
யாழ்ப்பாணத்தில் கடந்த 6 ஆண்டுகளில் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதைக் காண முடிந்ததாக உலகப் புகழ் பெற்ற பட்டிமன்றப் பேச்சாளர் ஏ.ராஜா தெரிவித்தார். »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

### தமிழர் தாயகத்தில்

# 238 சிங்களவர்களுக்காக 23 விகாரைகள் அமைப்பு

திருகோணமலை, ஓகஸ்ட் 27
திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசத்தில் 10 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் 238 சிங்களவர்களுக்கு 23 பௌத்த விகாரைகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தலா 10 சிங்களவர்களுக்கு ஒரு விகாரை என்ற அடிப்படையில் இவை அமைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. »15

### திருகோணமலையில்

## இந்தியாவுக்குப் போட்டியாக சீனாவும் கால்பதிக்கின்றது

திருகோணமலை, ஓக. 27
கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மையப்படுத்தி இந்தியா படகுச் சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதுடன், அதற்கான பேச்சுகளும் முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளதாக அறிய முடிகிறது. »15

## ஈ.பி.எப்., ஈ.ரி.எப். நிதியில் கைவைக்கவேண்டாம்

### யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 27
உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு ஈ.பி.எப்., ஈ.ரி.எப்., நிதியங்களைப் பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்ப்பாணத்திலுள்ள 9 தொழிற் சங்கங்கள் இணைந்து யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நாளை திங்கட்கிழமை மதியம் 12 மணியிலிருந்து ஒரு மணி வரையில் »15

### ஆளுநரின் முயற்சியால்

## மாநகரசபைக் கட்டடத்துக்கு ரூ.500 மில்லியன் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மாநகர சபைக்கு அமைக்கப்படும் புதிய கட்டடத்துக்கு இந்த ஆண்டுக்குரிய 500 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மாநகரசபையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நல்லாட்சி காலத்தில் நடுகை செய்யப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் கொரோனா, »15

## தவறான நியமனத்தால் அதிபரின்றி பாடசாலை

யாழ்ப்பாணம், ஓக. 27
மன்னார், வங்காலை சென்.ஆன்ஸ் பாடசாலை அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது. பாடசாலைக்கு அதிபரை நியமிக்குமாறு பாடசாலைச் சமூகம் கல்வி அமைச்சை வலியுறுத்தியுள்ளது. இருப்பினும் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட தவறான நியமன நடைமுறை காரணமாக புதிய அதிபரை நியமிக்க »15

## நாளை திங்கள் முதல் நலன்புரிக் கொடுப்பனவு

கொழும்பு, ஓக. 27
நலன்புரி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. »15

## குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
தேவாலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தவரை குளவி கொட்டியதில் அவர் உயிரிழந்துள்ளார். »14

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட்டி வீதங்களைக் குறைக்க மத்திய வங்கி எதிர்பார்ப்பு



கொழும்பு, ஓக.27

**கடன் வட்டி வீதங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் குறைந்தபட்சம் 3 சதவீதமாகக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

வட்டி வீதக் குறைப்பு நாணயக் கொள்கை தளர்வில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாணயசபையின் முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை வட்டி வீதம் குறைக்கப்படும் முறை நிதிக் கொள்கை முன்னேற்றத்துக்கமைய சந்தை வட்டி வீதத்தையும் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றம் ஏற்படாவிட்டால் ஏதாவது ஒரு ஒழுங்கு முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என முன்னர் குறிப்பிடப்பட்டது.

வட்டி வீதம் ஓரளவு குறைந்திருந்தமை தொடர்பில் கடந்த நாணயசபைக் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது. ஆயினும் சந்தை வட்டி வீதங்கள் குறைவடையும் வேகம் போதுமானதாக இல்லை என்பதுடன். கொள்கை வட்டி வீதத்தை குறைப்பதற்கு முன்னர் இதுவரையில் குறைக்கப்பட்ட வட்டிவீதம் மற்றும் ஏனைய வருவாய் அதிகரிப்பினூடாக கிடைத்த அனுகூலங்கள் பொது மக்களுக்கு வழங்க வேண்டும்.

2023ஆம் ஆண்டில் இலங்கை பணியாளர்களின் ஊடாக ஈட்டும் வெளிநாட்டுப் பண அனுப்பல் 6 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாத்துறையின் வருமானம் 2.3 பில்லியனை விடவும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



*மாற்றுத்திறனாளி நடத்திவந்த*

## வர்த்தக நிலையத்துக்கு தீ வைத்த விஷமிகள்!

*சந்தேகநபரொருவர் கைது*

முல்லைத்தீவு, ஓக. 27

முல்லைத்தீவு மல்லாவி பாலிநகர்ப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்று இனந்தெரியாத விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விசேட தேவையுடைய ஒருவரால் நடத்தப்பட்டு வந்த வர்த்தக நிலையமே விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளாரெனவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)





## யாழ்.ஆலயங்களில் வரலட்சுமி உற்சவம்!

தமிழர் தாயகத்தில் உள்ள பல ஆலயங்களில் வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ மகாலட்சுமிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பின் வரலட்சுமி விரத நூல் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. (ச-ரி- 27-17)

## யானை - மொட்டு ஆட்சியில் சஜித் பிரதமராக மாட்டார்!

*அடித்துச் சொல்கிறது ஐ.ம.ச.*

கொழும்பு, ஓக. 27

தற்போதைய ஆட்சியின்கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒருபோதும் பிரதமர் பதவியை ஏற்கமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் எனவும், சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது எனவும் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'இந்த ஆட்சியின்கீழ் இவ்வாறு எதுவும் நடக்காது. சஜித்தை கைவிட்டுச் செல்வதற்கு நாம் தயாரில்லை. அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் சில நல்ல திட்டங்களை வரவேற்கின்றோம். அதற்காக அரசுக்கு ஆதரவு என அர்த்தப்படாது. எதிரணி பலமாகவுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பலமடையும். ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்கான முயற்சியில்தான் தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது. 13 பற்றிப் பேசப்படுவதும் இதன் ஓர் 'அங்கமாகும்' எனவும் ஹெக்டர் அப்புஹாமி குறிப்பிட்டார். (ஓ-44)



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

உதயா ஜுவல்லர்ஸ்

இல. 79G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4434, 021 221 6877



## நல்லூரான் சிறப்பம்சம்

### முறையுடனருளு வீரே

பன்னிரு தோள்களோடு
பார்வதி மைந்தா கந்தா
எண்ணிலா படைகள் கொண்ட
எதிரியாம் அசுரன் தன்னை
உன்னரும் வேலினாலே
ஒழித்துமே இன்று நல்லூர்
முன்றலில் வீற்றிருந்தே
முறையுடனருளு வீரே

ஆ. த. குணத்திலகம்,
சில்லாலை



## நல்லைக்குமரன் மலர் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஓக. 27

நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழுவால் வெளியிடப்படும் 'நல்லைக்குமரன்' மலரின் 31 ஆவது இதழ் வெளியீடும் யாழ். விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.சுதர்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவிக்கும் விருதான யாழ். விருது, இந்த வருடம் இணுவில் தர்ம சாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ.தாணுநாதக் குருக்கள் மகாதேவக் குருக்களுக்கு வழங்கப்பட்டது. (ச-ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது

சம்பத் வங்கியிடமிருந்து
நிலையான வைப்பிற்கு
நிகரற்ற
அதிகூடிய வட்டி

மூன்று மற்றும்
நான்கு மாதங்களுக்கு
12.5%
03 மாதங்களுக்கு (வ.வ.வீ. 13.10%)
04 மாதங்களுக்கு (வ.வ.வீ. 13.03%)

ஒரு மாதம்,
ஏழு மாதங்கள்
மற்றும் 300 நாட்களுக்கு
11.5%
01 மாதத்திற்கு (வ.வ.வீ. 12.13%)
07 மாதங்களுக்கு (வ.வ.வீ. 11.77%)
300 நாட்களுக்கு (வ.வ.வீ. 11.61%)

பதின்மூன்று
மாதங்களுக்கு
10.5%
(வ.வ.வீ. 10.46%)

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடுங்கள்.

Sampath Bank PLC- Company PQ 144 Sampath Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

1332 www.sampath.lk Sampath Bank Fitch Ratings 'A(lka)'/RWN *நிபந்தனைகள் உண்டு.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்




உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
20.08.1998

## செல்வன் முருகேஸ் முரளிகாந்

மறைவு
23.08.2023

ஓட்டுமடம் மானிப்பாய் வீதியை பிறப்பிடமாகவும் பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் முருகேஸ் முரளிகாந் அவர்கள் கடந்த (23.08.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேஸ் நிரஞ்சனா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் கமலாதேவி தம்பதியரின் அன்புப் பேரனும், முரளிதரன், முகுந்தன், முகிலன், ககஸ்ரிகா, முகிந்திரன் ஆகியோரின் ஆசைத் தம்பியும், நளாயினி - இராஜேந்திரன், வாசுகி - விஜயகுமார், சியாமினி - சுகந்தன் ஆகியோரின் பெறா மகனும், வேணுஜா, ஸ்ரீஸ்கந்தராஜா, அகிலா ஆகியோரின் மைத்துனரும், மதுவர்ஷாவின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.55, பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 0333 393

(CS 26102) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேருந்துத்தரிப்பிடம் பளையில் திறப்பு

பளை, ஓக. 27

பளை இந்திராபுரம் சந்தி ஏ-9 வீதியில் அமைக்கப்பட்ட பயணிகள் பேருந்துத் தரிப்பிடம் நேற்று சனிக்கிழமை மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது. வல்லிபுரம் கந்தையா மற்றும் கந் தையா இரஞ்சிதமலர் ஆகியோரின் நினைவாக இந்தத் தரிப்பிடம் அமைத் துக் கொடுக்கப்பட்டது. நிகழ்வில் பளை பிரதேச செயலக நிர்வாக அலுவலர் திருமதி சி.சயந்தினி பங்கேற்று கட்ட டத்தை திறந்துவைத்தார். (ச-ரி-9)


விற்பனை பிரதிநிதி வேலைவாய்ப்பு

பிரசித்திபெற்ற ப்பிளாஸ்டிக் நிறுவனமொன்றுக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மட்டக்களப்பு பிரதேசத்தை சார்ந்தவர்கள், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உடையவர்கள்.

நேர்முகத் தேர்வு 31/08/2023 01/09/2023

0740 125 902


# பிரமிட் மோசடிகள் அவதானம் தேவை

## மத்திய வங்கி எச்சரிப்பு



கொழும்பு, ஓக. 27

**பிரமிட் திட்டங்கள் தமது சட்டபூர்வத்தன் மையை நிரூபிக்கும் நோக்கில் வெளியிடும் கூற்றுக்களில் எந்தவித உண்மையும் இல்லை. அவற்றை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் என்று இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் மத்திய வங்கி தெரிவித் ததாவது: -

இணையத்தளங்கள் ஊடாகத் தொழிற் படுகின்ற சில பிரமிட் திட்டங்கள், சட்ட பூர்வமானவை என நியாயப்படுத்துவது போல சில விடயங்களைக்கூறி, இந்தத் திட்டங்களில் பணத்தை முதலீடு செய் யுமாறு மக்களை பிழையாக வழிநடத் துகின்றன என பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மத்திய வங்கியின் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்தத் திட்டம் முதலீட்டாளர்க ளின் நிதியங்களைப் பாதுகாக்கின்றது, நிதியங்களை மீளப்பெறும் பொருட்டு இந்தத் திட்டத்தில் பங்கேற்பவர்கள் தமது நிதியங்களிலிருந்து தனிப்பட்ட வருமான வரியை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தவேண்டும். இல் லையேல் அவர்களது நிதியங்கள் மத் திய வங்கியினால் முடக்கப்படும். தமது திட்டத்தை நியாயப்படுத்துவதற்காக சில பிரமிட் திட்ட ஏற்பாட்டாளர்களால் கூறப்படும் கூற்றுக்களில் எவ்வித உண்மையும் இல்லை. இத்தகைய திட் டங்கள் தொடர்பில் மிகுந்த அவதானத் துடனும் விழிப்புடனும் மக்கள் செயற் படவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# 14 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துச் சேவையில்லை

## நடவடிக்கை எடுக்குமாறு கரைதுறைபற்று மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 27.

முல்லைத்தீவு கரைதுறைபற்று - மாத்த ளன் வழித்தட பேருந்துசேவை கடந்த 14 ஆண்டுகளாக நடத்தப்படாததால் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றோம் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் கூறுகையில்,

பல வருடங்களுக்கு மேலாக முல்லைத் தீவு கரைதுறைபற்றின் அம்பலவன் பொக்கணை, மாத்தளன், வலைஞர் மடம் ஆகிய கிராமங்கள் பேருந்துச் சேவை இன்றி அல்லற்படுகின்றன. 2009 ஆம் ஆண்டின் பின்னர் இந்தக் கிராமங்களுக்கான பேருந்து சேவை கள் நடைபெறுவதில்லை.

இங்குள்ள மக்கள் முல்லைத்தீவு பொது மருத்துவமனை, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை மற்றும் பிற தேவைகளுக்காக செல்வதற்கு பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் முல்லைத்தீவு, புதுக்குடியி ருப்பு நகரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைக ளுக்குச் செல்வதற்கு பேருந்து சேவை யின்றி நெருக்கடிக்குள்ளாகுகின்றனர். முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்திலும் கரைதுறைபற்று பிரதேச செயலகத்தி லும் இடம்பெறும் கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பில் மக்களால் தொடர்ச் சியாக சுட்டிக்காட்டப்படுகிறது. முல் லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் இந்தக் கிராமங்களுக்கான பேருந்து சேவைகளை நடத்துவதற்கு ஆக்கபூர் வமான நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது கிராமங்களுக்கான பேருந்து சேவையை நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டும் - என்றனர். (ச-13)









தம்பசிட்டி மாயக்கை பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் தற் போது நடைபெற்றுவரும் நிலையில், ஆலய வளாகம் காண்போரின் கண் களை மயக்கும் வகையில் பல வர்ண மின்விளக்குகளால் ஒளிரச் செய்யப்பட் டுள்ளது. மஹோற்சவத்தின் தேர்த்திரு விழா எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெ றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 01 . 1963



மறைவு 15 . 08 . 2023

## சின்னராசா சர்வேந்திரராஜா

யாழ். வசாவிளானைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Lüdenscheid, கனடா Mississauga ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னராசா சர்வேந்திரராஜா அவர்கள் கடந்த (15.08.2023) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னராசா, வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், சபாரத்தினம் ராணியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தினி அவர்களின் அன்புக் கணவரும், பிரியங்கா அவர்களின் பாசமிகு தந்தையும், சிந்தாதேவி (இலங்கை), சற்குணதேவி (இலங்கை), சரோஜினிதேவி (இலங்கை), செல்வேந்திரதேவி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 555 4886

(CS 26100) A-1

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் பாலச்சந்திரன்

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானை சொந்த இடமாகவும், ஜேர்மனை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பாலச்சந்திரன் அவர்கள் (23.08.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகரத்தினம் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி) தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற செல்லத்துரை - அரியமணி (இரத்தினபுரம், கிளிநொச்சி) தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி அவர்களின் அன்புக் கணவரும், திருநிறைச்செல்வி (கொழும்பு), திருயோகசெல்வராணி (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர், கல்வி அமைச்சு, வ.மா.யாழ்ப்பாணம்), இரவிச்சந்திரன் (ஓய்வுபெற்ற மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குணரட்ணம் (வர்த்தகர்), சண்முகராசா (ஆசிரியர், கிளிநொச்சி) மற்றும் சரதாம்பாள் (ஆசிரியை, திருவையாறு ம.வி) ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரது இறுதிச்சடங்குகள் 30.08.2023 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 28009) A-1

# மரண அறிவித்தல்



## சின்னக்குட்டி தர்மரத்தினம்

(முத்தையா)

அந்திரான் கரணவாய் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி தர்மரத்தினம் (முத்தையா) அவர்கள் நேற்றுமுன்தினம் (25.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்திமாலாவின் பாசமிகு கணவரும் கமலாதேவி, கமலரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சங்கரகுமாரன், காவேரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகா, செந்தூரன், ஹார்மிகா ஆகியோரின் அன்பு பேரனும் கிருஸ்ணசாமி (ஜேர்மன்), அரியரத்தினம், கிருஷ்ணரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரியமலர், சகுந்தலாதேவி, வசீகரன், பாஸ்கரன், பவளமலர், பிரேமா, தீபன், தீபா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நாகம்மாவின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரம்திட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு
16.02.1960

இறப்பு
25.08.2023

அந்திரான்,
கரணவாய் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
ச.செந்தூரன் 076 4385283

(CR 40030) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

"நம்பிக்கை ஒரு சக்திவாய்ந்த ஆயுதம், அதை உங்களிடமிருந்து பறிக்கக்கூடிய சக்தி இந்தப் பூமியில் யாரிடமும் இல்லை."

- நெல்சன் மண்டேலா

## நாமும் நமக்கென்றோர் அரசுடையோம்

நெதர்லாந்தின் (முன்னைய ஒல்லாந்து) கலாசார ஊடக இராஜாங்க அமைச்சர் கனே உஸ்லு தலைமையிலான கலாசார தூதுக்குழு இன்று இலங்கை வருகிறது. ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் சென்ற இலங்கையின் பாரம்பரிய மரபுரிமைச்சின்னங்களை சிறிலங்காவிடம் மீள ஒப்படைப்பதற்காகவே இக்குழு இலங்கைக்கு விஜயம் செய்கிறது. பீரங்கி, தங்கம், வெள்ளி போன்ற உலோகக் கைபிடி போட்ட வாள்கள், சிங்களக் கத்தி என்பன போன்ற சிங்கள பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை நாளையதினம் ஒல்லாந்து அரசாங்கம் சிறிலங்காவிடம் மீளக் கையளிக்கப்போகிறது. ஒல்லாந்தர் இலங்கை முழுவதையும் கைப்பற்றவில்லை. கோட்டை இராஜ்ஜியத்தையும் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தையுமே போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றியிருந்தனர். கண்டி இராஜ்ஜியத்தை ஒல்லாந்தரால் கைப்பற்ற முடியவில்லை. கோட்டை, யாழ்ப்பாண இராஜ்ஜியங்களை கைப்பற்றிய போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இரண்டு பகுதிகளையும் தனித்தனி நிர்வாகப் பிரிவுகளாகவே இரண்டு ஆளுநர்களை நியமித்து இறுதி வரை ஆட்சி செய்து வந்தனர்.

யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் ஆளுநர் யாழ்ப்பாண கோட்டைக்குள் இருந்தார். கோட்டை இராஜ்ஜியத்தை நிர்வகித்த ஆளுநர் காலியில் இருந்த கோட்டைக்குள் இருந்தார். யாழ்ப்பாணத்தை நிர்வகித்த கடைசி ஒல்லாந்த ஆளுநராக அல்லது தளபதியாக அந்தோனி மோயார்ட் காணப்படுகிறார்.

ஒல்லாந்தர் கட்டிய யாழ்ப்பாணக் கோட்டை கிழக்காசியாவிலேயே பெரிய கோட்டையாக விளங்கியதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். 2010 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிந்த கையுடன் யாழ்ப்பாணக் கோட்டையின் புனரமைப்புக்கென நெதர்லாந்து அரசாங்கம் நூறு மில்லியன் ரூபாவை சிறிலங்கா அரசாங்கத்திடம் வழங்கியிருந்தது. இப்போது யாழ்ப்பாணத்தவர்களிடையே பாவனை இல்லாமல் போய் விட்ட உரல், அம்மி, ஆட்டுக்கல், திரிகை போன்ற பொருட்களை நெதர்லாந்து மக்கள் இப்போதும் தமது வீடுகளில் பாதுகாத்து வருவதாக அங்கு அகதியாகத் தஞ்சம் புகுந்துள்ள யாழ்ப்பாணத்தவர் ஒருவர் சொன்னார். தமது மூதாதையர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றபோது யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு சென்ற நினைவுச்சின்னங்களாக இவற்றை நெதர்லாந்து மக்கள் பேணி வருகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு சென்ற பொருள்கள் நெதர்லாந்தில் சாதாரணமாக வீடுகளிலேயே காணப்படுகின்றன என்றால், அந்நாட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து எவ்வளவு பொருள்களை அள்ளிக்கொண்டுபோய் தம் நாட்டு அருங்காட்சியகங்களில் வைத்திருப்பார்கள் என்பது சொல்லித்தெரியவேண்டியதில்லை.

ஒல்லாந்தர் போர்த்துக்கீசரிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது போல், பிரித்தானியார் போர் புரிந்து ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றவில்லை. ஒல்லாந்தர், பிரிட்டனுடன் சமாதான உடன்படிக்கை மூலமே இலங்கையைக் கையளித்தனர். எனவே ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்திலிருந்து விலகியபோது சாவகாசமாக தமது பொருள்களை எடுத்துச்சென்றிருப்பர். இவற்றினுள் நிச்சயமாக யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் மரபுரிமைச்சின்னங்களும் இருந்திருக்கும். இப்போது சிங்கள மரபுரிமைச் சின்னங்களை நெதர்லாந்து மீளக்கையளிக்கவிருக்கும் இந்தத் தருணத்தில், ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்சென்ற மரபுரிமைச் சின்னங்களை திரும்ப ஒப்படைக்குமாறு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் யாராவது கோரிக்கை விடுப்பார்களா? ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்சென்ற மரபுரிமைச்சின்னங்களை மீள எடுத்து வந்து யாழ்ப்பாண கோட்டையினுள் பாதுகாப்பாக வைப்பதற்கும், கோட்டையை மையப்படுத்திய தான அருங்காட்சியகம் ஒன்றை அமைத்து அதனூடாக யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் தொன்மையை எதிர்கால சந்ததிக்கு சொல்வதற்கு தமிழ் அரசியல்வாதிகள் யாராவது முயற்சிப்பார்களா?

சிறிலங்கா அரசாங்கமோ, நெதர்லாந்து அரசாங்கமோ இந்தக் கோரிக்கைக்கு சம்மதிக்காமல் விடலாம். ஆனால், கோரிக்கையொன்றை முன்வைப்பதில் எதுவிதத் தவறும் இல்லையே. மரபுரிமையின் பெயரால், தமிழ் நிலப்பரப்பை சிங்கள–பௌத்த பேரினவாதம் விழுங்க முற்படும் இந்தச் சூழமைவில், அதே மரபுரிமை மூலம் 'நாமும் நமகென்றோர் அரசுடையோம்' என்பதை நிரூபிப்பதற்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பம். இங்கிருந்து கொண்டுசெல்லப்பட்ட யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் இருப்பை மீள விஞ்ஞானபூர்வமாக நிறுவுவதன் மூலம், குறைந்த பட்சம் யாழ்ப்பாண இராஜ்ஜியத்துக்குள் அடங்கியிருந்த பகுதிகள் மீதான தமிழர்களின் பூர்வீக உரிமையை நிலைநாட்டலாம். தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் கொஞ்சம் கரிசனை கொள்வார்களா?



# இலங்கை – இந்தியா இடையிலான தரைவழித் தொடர்பை விரிவாக்க ஆராய்வு

கொழும்பு, ஓக. 27

**இந்திய - இலங்கை இடையிலான தரைவழித் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில், இந்திய வீதிப்போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி மற்றும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.**

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இந்த இருதரப்புச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்றும், இதன்போதே இரு நாடுகளுக்கும் இடையிலான தரைவழித் தொடர்புகள் தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டுள்ளன என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

போக்குவரத்துத்துறையில் திரவ எரிபொருளுக்குப் பதிலாக மின் எரிபொருள் அல்லது உயிரியல் எரிபொருள் போன்றவற்றை ஊக்குவிப்பதில் இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியாவின் அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு பதிலீட்டு எரிபொருள்கள் குறித்து தூதுவர் மிலிந்த மொரகொடவிடம் எடுத்துரைத்த அமைச்சர் நிதின் கட்காரி, இவ்விடயத்தில் அவசியமான நிபுணத்துவ ஒத்துழைப்புகளை இலங்கைக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். (ம)

## 780 மருத்துவர்கள் வெளியேறத் தயார்

கொழும்பு, ஓக. 27

780 மருத்துவர்கள் அடுத்த சில மாதங்களில் நாட்டிலிருந்து வெளியேற உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் வரிக்கொள்கையில் உள்ள அதிருப்தியாலும் மருத்துவ நெருக்கடி காரணமாகவும் பல மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலையிலேயே மேலும் 780 மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தயாராகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மயக்க மருந்தும் நாட்டில் இல்லை

### சத்திரசிகிச்சைகள் நிறுத்தம் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 27

மருத்துவமனைகளில் மயக்க மருந்து உள்ளிட்ட பல மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதனால் சத்திரசிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டு வருகின்றன. மக்களின் உயிரோடு அரசாங்கம் விளையாடாது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மருத்துவமனைகளில் மயக்க மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அதனால் நோயாளிகளுக்கு மேற்கொள்ள வேண்டிய சத்திரசிகிச்சைகள் இடைநிறுத்தப்படுகின்றன. இதுதொடர்பாக சுகாதார அமைச்சிடம் கேள்விகளை கேட்டால் அதற்கு கால அவகாசம் தேவையெனக் கூறப்படுகிறது. நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் மக்களின் உயிரோடு விளையாடுகிறது - என்றார். (ச-இ)

நாளை 28.08.2023 திங்கட்கிழமை ஆவணி 11

சுபநேரம் : 12.05 - 01.35

ராகுகாலம் : 07.35 - 09.05

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கொள்ளையர் தாக்குதல்;

# உண்மைக் குற்றவாளிகளை கண்டறிந்து தண்டியுங்கள்

யாழ். கடற்றொழிலாளர் சமாசம் காட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 27

**வடக்கு - தமிழ்நாட்டு மீனவர்களின் மோதலைத் தூண்டிவிடும் சதிச் செயலே காரைக்கால் மீனவர்கள் மீதான தாக்குதல். இந்த ஈனத்தமான செயலை இரு நாட்டு அரசுகளும் முறையாக விசாரணை நடத்தி குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

- இவ்வாறு யாழ்ப்பாணம் வட மராட்சி ஊடக இல்லத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:- காரைக்கால் மீனவர்கள் மீது இனம்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி அவர்களது உடமைகளையும் பறித்துச் சென்றுள்ளனர். இந்தத் தாக்குதலை யார் செய்தாலும் அது தவறு. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குறித்த தாக்குதல் சம்பவம் வடக்கு மீனவர்களையும் தமிழ்நாட்டு மீனவர்களையும்மோதவிட்டுவேடிக்கை பார்க்கும் செயலாகும். தீர்வு காணப்படாத பிரச்சினையாக மீனவர் பிரச்சினையை நீடிக்கச்செய்து குளிர்காய முற்படும் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்துக்கும் வடக்கு மீனவர்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். இந்தத் திட்டமிட்ட சதிச்செயல் தொடர்பில் இருநாட்டு அரசும் முறையாக விசாரணை நடத்தி உண்மையான குற்றவாளி களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-100)



## கூட்டுறவாளர் தினம் யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச்சபை நடத்திய 101 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றன.

கூட்டுறவுச் சபையின் தலைவர் க.மகாதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் முதன்மை விருந்தினராக பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி தேவநந்தினிபாபு. கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-17-27)



## தமிழ்மொழிப் பாடசாலைக்கு ஆஸி. அரசால் விருது!

யாழ்ப்பாணம், ஓக. 27

மேற்கு அவுஸ்திரேலிய அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் சிறந்த சமூக மொழி ஆசிரியருக்கான விருதை இந்தாண்டு ஆஸியிலுள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் பணியாற்றும் திருமதி பூர்ணிமா மயூரதன் வென்றுள்ளார்.

இந்த விருதுக்கு பல்வேறு மொழிகளைச் சேர்ந்த 21 சமூக மொழிப் பாடசாலைகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன.

இந்நிலையில் கடந்த 43 ஆண்டுகளாக மேற்கு அவுஸ்திரேலியா மாநிலத்தில் இளையோருக்குத் தமிழ்மொழியைத் தன்னார்வ அடிப்படையில் கற்பித்து பல்கலைக்கழகத் தெரிவுக்கு தமிழ் மொழியை மேலதிக பாடமாக எடுக்கும் மாணவர்களைத் தயார்ப்படுத்தி வந்த பாடசாலை விருதுக்குத் தெரிவாகியுள்ளது.

தமிழ்மொழிப் பாடசாலை ஒன்றுக்கு இந்த விருது கிடைக்கப்பெற்றமை இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வாழ்வாதார மேம்பாடு; விசுவமடுவில் தையலகம்

முல்லைத்தீவில் பொருளாதாரம் நலிவுற்றோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் பெண் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்கிலும் வி.பி.பவுண்டேசன் அமைப்பால் தையலகம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் நிறுவுநர் தெ.இந்திரதாஸின் இரண்டு மில்லியன் ரூபா நிதியுதவியில் விசுவமடு 10 ஆம் கட்டை பகுதியில் இந்தத் தையலகம் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் சிறப்பு அதிதியாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் வி.பி.பவுண்டேசன் அமைப்பின் நிறுவுநர் தெ.இந்திரதாஸ் ஆகியோர் பங்கேற்று தையலகத்தை திறந்து வைத்தனர்.

முதற்கட்டமாக சுமார் 10 பெண்களின் வாழ்வாதாரத்துக்கான தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டதுடன் தைக்கப்படும் ஆடைகளை விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ச-ரி2-19)



## வறட்சியை எதிர்கொள்ள குளங்களை ஆழமாக்குக

பளை மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 27

வறட்சியால் வறண்டு போயுள்ள குளங்களை ஆழமாக்கி எதிர்காலத்தில் வறட்சியை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பளை விவசாயிகளும் கால்நடை வளர்ப்பாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

பளைப் பிரதேசத்தில் பல குளங்கள் நிலவும் கடுமையான வெப்பமான காலநிலை காரணமாக வறண்டு போயுள்ளன. அதனால் அந்தக் குளங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

குளத்தின்நீரை நம்பி விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் குளங்களில் நீர்வற்றியதால் விவசாயத்தை தொடர முடியாது திண்டாடுகின்றனர். குளங்களில் நீர் வற்றியதால் கால்நடைகளும் தண்ணீருக்காக அலைந்து திரிகின்றன.

இந்தக் காலப்பகுதி வறண்ட குளங்களை ஆழமாக்குவதற்கு சந்தர்ப்பமாக அமைந்துள்ளதால் மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன் குளங்களை ஆழமாக்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் எதிர்காலத்தில் வறட்சியை எதிர்கொள்ள முடியும்- என்றனர். (ச-9)



## ஐ.ஈ.எல்.ரீ.எஸ். பணிப்பாளர் யாழ்ப்பாணத்தில் கலந்துரை

யாழ்ப்பாணம், ஓக. 27

வடக்கு மாகாண மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதில் 'பிரிட்டிஷ் கவுன்சில்' நிறுவனத்தின் பங்களிப்புத் தொடர்பில் பிரிட்டிஷ் கவுன்சிலின் 'ஐ.ஈ.எல்.ரீ.எஸ். பரீட்சைப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் வருகைதந்து கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார்.

கலந்துரையாடலில் இலங்கையிலிருந்து பலர் புலம்பெயர்ந்த நாடுகளுக்குச் செல்கின்ற நிலைமை காணப்படுகிறது. அவ்வாறு செல்வோர் கட்டாயம் ஆங்கில மொழியில் தேர்ச்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

'ஐ.ஈ.எல்.ரீ.எஸ்' ஆங்கிலக் கற்கையை.கற்று பரீட்சையில் சித்தியெய்தினாலேயே வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும்.

இதற்கு இலங்கையில் பிரிட்டிஷ் கவுன்சில் பல நிறுவனங்களுடன் இணைந்து இந்தச் சேவையை வழங்குகின்றது என 'ஐ.ஈ.எல்.ரீ.எஸ். பரீட்சைப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஐ.ஈ.எல்.ரீ.எஸ். கற்கை நெறியை பெறுவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார். (ச-ரி2-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சின்னம் மடு

## அமெரிக்கத் தூதுவர் புகழாரம்

மன்னார், ஓக. 27

**மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆகியோரை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்றுச் சந்தித்துள்ளார்.**

சந்திப்புத் தொடர்பில் ஜூலி சங் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் இந்தக் கலந்துரையாடலில் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதில் மதத் தலைவர்களின் பங்கு குறித்து ஆராயப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மடு மாதா ஆலயத்துக்குச் சென்றேன். பல நூற்றாண்டுகள் மற்றும் மன்னாரில் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சக்தி வாய்ந்த சின்னம் என்று மடு மாதா ஆலயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் ஆயரை, ஆயர் இல்லத்திலும் மடுத் திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் புதிய பரிபாலகர் எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோரை மடு திருத்தலத்திலும் ஜூலி சங் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,56)





## கௌரி தவராசாவின் நினைவேந்தல் நேற்று



கிளிநொச்சி, ஓக. 27

ஜனாதிபதி சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் கிளிநொச்சியில் அமைந்துள்ள வன்னிவிழிப்புலனற்றோர் சங்கத்தின் அலுவலக வளாகத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

அவரது திருவுருவப்படத்துக்கு மலர்மாலை மற்றும் மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஈகச்சுடரும் ஏற்றப்பட்டது. தொடர்ச்சியாக கௌரிசங்கரி தவராசாவின் ஆவணப்படமும் காட்சிப்படுத்தப்பட்டது.

விழிப்புலனற்றோருக்கான உணவுப் பொதிகள் மற்றும் பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கான காலணியும் கௌரிசங்கரி தவராசாவின் ஞாபகார்த்த அறக்கட்டளையால் வழங்கப்பட்டது

ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ,113,125,214)

## நித்திரையிலிருந்தவரை எழுப்பி கொள்ளையிடுவதற்கு முயற்சி!!

### அயலவர்கள் விழித்துக்கொண்டதால் தப்பியோடிய கொள்ளையர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 27

திருநெல்வேலி, பாற்பண்ணையிலுள்ள வீடொன்றுக்குள் நேற்று புகுந்த கொள்ளைக்கும்பல் அயலவர்கள் எழும்பியதால் தப்பியோடியுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டின் கூரையைப் பிரித்து முகமூடி அணிந்தவாறு வீட்டுக்குள் புகுந்த மூவரடங்கிய கும்பல் வீட்டில் உறக்கத்தில் இருந்தவரை தட்டி எழுப்பி இரண்டு கைகளையும் கயிற்றால் கட்டி, கழுத்தில் கத்தியை வைத்து 'எங்கே நகை?' என மிரட்டியுள்ளது. அந்த நபர் கூக்குரல் எழுப்பியதும் அயலவர்கள் வீட்டுமின்விளக்குகளை ஒளிர விட்டனர். இதனையடுத்து கொள்ளைக்கும்பல் கொண்டு வந்த கத்தியையும் விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குற்றத்தடுப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேபோன்று கிறிஸ்தவ மத குருவை கத்தியைக் காட்டி அச்சுறுத்திப் பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் இந்த வீட்டுக்கு அண்மையாக 3 தினங்களுக்கு முன்னர் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,26,27)

## தேசிய மீலாத்துன் நபிதினம் இம்முறை மன்னாரில்

மன்னார், ஓக. 27

39ஆவது தேசிய மீலாத்துன் நபிதின விழாவை மன்னாரில் இம்முறை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதில் கலந்துகொள்ளவுள்ளார்.

இது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவலர்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் பங்கேற்போடு மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

முசலி பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற இருக்கும் இவ்விழாவை முன்னிட்டு சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விழா நடக்கும் இடத்திலுள்ள வீதியைப் புனரமைத்தல், மின்சாரம், சுகாதாரம், போக்குவரத்து, இவ்விழாவில் கலந்து கொள்ள வரும் அதிகாரிகளின் தங்குமிட வசதிகள், மீலாத்துன் நபி தின விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்தப்பட வேண்டிய போட்டிகள் போன்ற முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இவ்விழா நடைபெறும் நாள் மற்றும் நேரம் போன்றவை ஜனாதிபதியை சந்தித்து அவரின் ஆலோசனைக்கு அமைய அறிவிக்கப்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ,60,213)

## முழு இலங்கையையும் தாயகமாகக் கருதுங்கள்!

### தமிழர்களிடம் குணவங்ச தேரர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 27

வடக்கு - கிழக்கு மட்டுமல்ல முழு இலங்கையும் தமது தாயகம்தான் எனக்கருதி இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளார் தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர். நாட்டு வளங்களைப் பாதுகாப்பதற்கான போராட்டமே 2ஆவது சுதந்திரப் போராட்டம் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு தமது தாயகம் என தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கூறிவருகின்றனர். ஏன் இரு பகுதிகளை மட்டும் தாயகமாகக் கருத வேண்டும்? முழு நாடும் எமது எனக் கூறுங்கள், அதற்கு நாம் எதிர்ப்பு இல்லை. நாம் அனைவரும் இலங்கையர்கள். யாழ். நாகதீப எமது பகுதி என்று நாம் உரிமைகோரவில்லையா? அதுபோல தமிழ் மக்களும் முழு இலங்கையும் தமக்கானது என எண்ணவேண்டும்.

இன்று எமது நாட்டு வளங்கள் சுரண்டப்படுகின்றன. தேசிய சொத்துகள் விற்கப்படுகின்றன. சொந்த நாட்டிலேயே வாடகைக்காரர்கள்போல் வாழ வேண்டிய நிலை எமக்கு. வளங்களைக் காப்பதற்கான 2ஆவது சுதந்திரப் போராட்டத்துக்கு அனைத்து இன மக்களும் ஆதரவு வழங்கவேண்டும், ஒன்றிணையவேண்டும். எமது அனைத்துத் தலைவர்களும் இணைந்துதான் சுதந்திரத்தைப் பெற்றனர் என்பதை மறந்துவிடக் கூடாது.

தொல்பொருள் என்பது ஒரு இனத்துக்குரியது அல்ல. ஒரு பழமையான ஆலயம் இருந்தால் அனைவரும் அதைப் பாதுகாக்கவேண்டும். வடக்கு - கிழக்கில் உள்ள தொல்பொருள்களை பாதுகாக்குமாறு தமிழ் மக்களிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம். கடந்த 75 ஆண்டுகளாக தமிழரோ, சிங்களவர்களோ வெற்றி பெறவில்லை. மாறாக வெட்டிக்கொண்டோம். வடக்கு - கிழக்கில் உள்ள விகாரைகளில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன். வடக்கிலும், தெற்கிலும் உள்ள அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்குள் சிக்கிவிடவேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார். (அ-ஒ,44)

## பிரதம செயலரின் பரிந்துரையில் வடக்கில் உள்ளக இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 27

வடக்கு மாகாண பிரதம செயலரின் பரிந்துரைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தினுள் திணைக்களத் தலைவர்கள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலராக இருந்த பொ.வாகீசன், மகளிர் விவகார அமைச்சுக்கும், மகளிர் விவகார அமைச்சின் செயலராகவிருந்த திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதிப் பிரதம செயலர் நிர்வாகத்துக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். அதேபோல் பிரதிப் பிரதம செயலாளராக இருந்த பொ.குகநாதன் உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலராக மாற்றப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றங்களுக்கான பரிந்துரை வடக்கு மாகாண பிரதம செயலரால் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் அமிர்தலிங்கம் ஜனனதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 27

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவரான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது ஜனனதின நிகழ்வு வலி காமம் மேற்கு பிரதேசசபை முன்றி லில் அமைந்துள்ள அவரது திருவு ருவச்சிலை வளாகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

அமரர் அமிர்தலிங்கத்தின் அக வையை நினைவுறுத்தும் வகையில் கேக் வெட்டி, திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சித் தலைவருமான ஈஸ்வரபாதம் சர வணபவன் மலரஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து பண்ணாகம் கிராம அபி விருத்திச் சங்கம் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றம் ஆகியவற் றின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளிர் அணிச் செயற்பாட்டா ளர், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற் றனர். (ச-125)

### கிராக்கி அதிகரிக்கலாம் என்பதால்

# நெல்லை விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வமில்லை!

### முல்லைத்தீவில் இந்தநிலை

முல்லைத்தீவு, ஓக. 27

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல்கொள்வனவுக்கென 50 பில்லியன் ரூபா நிதியொதுக்கப்பட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையால் நெல்கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் நெல்லை சந்தைப்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். பரணீகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்,

நெல் சந்தைப்படுத்தல் சபை முதற்கட் டமாக 50 பில்லியன் ரூபாவை நெல் கொள்வனவுக்காக முல்லைத்தீவு மாவட் டத்துக்கு ஒதுக்கியுள்ளது.

முல்லைத்தீவில் வெள்ளை நாட்டு நெல் லின் அளவு மிகக் குறைவாகவும் சிவப்பு நாட்டரிசி நெல்வகையே அதிகமாகவும் காணப்படுகிறது.

வெள்ளை நாடு நெல்லை கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் முதல் கட்ட அனு மதி வழங்கப்பட்டது. சிவப்பு அரிசிக்கு அனுமதி கிடைக்கவில்லை.

இந்தநிலையிலேயே நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதால் விவசாயிகள் நெல்லை சந்தைப்படுத்துவதற்குத் தயக்கம் காட் டுகின்றனர்.

ஒரு கிலோகிராம் கீரிச் சம்பா நெல் 105 ரூபாவுக்கும் சம்பா 100 ரூபாவும் நாட் டரிசி 95 ரூபாவுக்கு வெள்ளை அரிசி வகை விலை நிர்ணய அடிப்படையில் கொள்வனவு இடம்பெறுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-246)





நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-ரி2)

### கேரளாவில் விபத்து

## இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியோர் சாவு

கொச்சி, ஓக. 27

இந்தியாவில் கேரள மாநி லம் வயநாடு அருகே பள் ளத்தாக்கில் ஜீப் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பெண் தொழிலாளர்கள் பரி தாபமாக உயிரிழந்துள்ள னர்.

இந்த விபத்து நேற்றுமுந்தி னம் பி.ப. 3.30 மணியள வில் இடம்பெற்றுள்ள நிலை யில், உயிரிழந்தவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர் கள் என தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

தேயிலைத் தோட்ட தொழி லாளர்கள் வயநாடு அருகே ஜீப்பில் சென்றுக் கொண்டி ருந்தபோது, மானந்தவாடி பகுதியில் 25 அடி பள்ளத் தில் எதிர்பாராத நேரத்தில் கவிழ்ந்துள்ளது. விபத்தில் 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் 4 பேர் படுகாயமடைந்துள் ளனர்.

உயிரிழந்த 9 பெண்களும் இலங்கையில் இருந்து தாய கம் திரும்பிய தமிழர்கள் எனப் பொலிஸாரின் முதற் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள் ளது. (அ-ஒ.இ)

# யோகா கற்கைநெறி புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 27

வடக்கு மாகாணக் கல்வி அமைச் சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகாக்கலை கற்கைநெறி யின் புதிய பிரிவு அடுத்தமாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத் தில் பிரதி சனி, ஞாயிறு தினங் கள், அரச விடுமுறை தினங்க ளிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை இந்தக் கற்கைநெறி இடம்பெறும். ஆர்வ முள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி பங்கேற்கலாம்.

3 மாத காலங்களைக் கொண்ட இந்தக் கற்கைநெறியை பூர்த்தி செய்வோருக்கு கல்வி அமைச் சால் அங்கீகரிக்கப்பட்ட சான் றிதழ் வழங்கப்படும் என்று வட மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பயிலவிரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று கல்வி அமைச்சு, வட மாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கமூடா கப் பெற்றுக்கொள்ளலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள் ளார். (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதி கரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமத மாகும். குழப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளின் இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாம தம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரி யங்கள் வெற்றிகரமாகும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரிய வர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர் பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும். நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்தபணம்கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிக வும் அவசியம். அதேபோல் செலவுகளி லும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்க டங்களைச் சமாளிக்கவேண்டி வரும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


PFIRC

# பிரசாந்த்

குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

No.77, Harrington Road, Chetpet, Chennai – 600 031, Tamilnadu, India.

INTERNATIONAL ACCREDITED CLINIC




medicare

இலவச மருத்துவக் கண்காட்சி!

8th, 9th, 10th SEPTEMBER 2023

VEERASINGHAM HALL, JAFFNA

Stall No. L1

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை நேரில் சந்தித்து உங்களது குழந்தையின்மைப் பிரச்சினைகள் பற்றிய இலவச ஆலோசனைகளைப் பெறலாம்

35 years MEDICARE FOR WOMEN

25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தம்பதியரின் குழந்தைக் கனவுகளை நனவாக்கி வரும் மருத்துவமனை

விபரங்களுக்கு: 0760155883

## பிரசாந்த்

மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகளுக்கு சிறப்புச் சலுகைகள்!!



# GLOBAL EDUCATION EXPO IN JAFFNA

by Edlocate



UP TO 100% Scholarships*

SEPTEMBER 09TH

நேரம்: காலை 9 முதல் மதியம் 1 மணி வரை

இடம்: யாழ் இந்துக்கல்லூரி, சபாலிங்கம் அரங்கு

Australia New Zealand Canada England Ireland Malaysia Vietnam

edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

மேலதிக தகவல்களுக்கு
077 2223178 | 021 5700750

Follow Us On

ENTRANCE FREE

Over 100 Universities | Over 2500 Student | We will handle Visa | 23 Years of excellence | All our services are free of professional fee

*T&C APPLY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் தங்கிநின்று வீட்டுவேலை செய்வதற்கும் குழந்தையை பராமரிப்பதற்கும் உகந்த பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு : 077 3083 007

## தேவை

காணி மீள் நிரப்ப இடிபாட்டு மண் தேவை. (CS/51831) AH-1

076 159 6912 - சாவகச்சேரி

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 0127 134

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1982 ல் பிறந்த சுயதொழில் புரியும் 7 இல் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

077 2719 104

## வேலை வாய்ப்பு

சில்வர் கடைக்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் விற்பனை உதவியாளர் தேவை

சிவன் மாளிகை பிரைவேட் லிமிட்டெட்
166, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம்.
021 222 2996, 0779861709

## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லதுரை வீதியில் காணிகள் விற்பனைக்கு உண்டு. 6 பரப்பும், 3 பரப்பும் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்தது.

தரகர் தேவையில்லை : 074 0106595


# மரண அறிவித்தல்



மண்ணில்
14 . 09 . 1943

விண்ணில்
26 . 08 . 2023

## சுவாம்பிள்ளை இம்மானுவேல் யேசுரத்தினம் (ஜெயம்)

ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை இம்மானுவேல் யேசுரத்தினம் (ஜெயம்) அவர்கள் நேற்று (26.08.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெனடிற் சுவாம்பிள்ளை சுவாம்பிள்ளை லிவ்வினம்மா தம்பதியரின் அன்பு மகனும். மேரி நீற்றா அவர்களின் அன்புக் கணவரும். சுவாம்பிள்ளை இராசரத்தினத்தின் அன்புச் சகோதரனும். ஒஸ்மன் ஜெறி (அரச கணக்காய்வு உத்தியோகத்தர். முல்லைத்தீவு). டன்சிக்கா எழிலி (ஆசிரியர்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி). லொயலின் லினெற்றா (தாதி. அவுஸ்திரேலியா). மொறின் கொன்செப்ரா (இலங்கை வங்கி-நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தந்தையும். ஜெ.அனோஜி. செ.ஜேம்ஸ் மில்பேட். நி.நிஷாங்கன் அருள்பாலன். ஆ.டொமினிக் பிறேமானந் ஆகியோரின் அன்பு மாமனாரும். பிரியாந்தி டெலிசியா. நிறோமி ஆதனா. கபிஸ்ரன். செபஸ்ரன். சுபிக்கா. கெல்வின் அன்ரோ. அனிக்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி 29.08.2023 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

58, தவசிக்குளம், மிருசுவில். 0777 250 887, 077 884 4311

(CS 26096)A-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
29 . 07 . 1980

உதிர்வு
28 . 07 . 2023

கடந்த (28.07.2023) வெள்ளியன்று சிவபதமடைந்த எமது சகோதரி

## அமரர் செல்வி சிவகஜந்தி சிவப்பிரகாசம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 27.08.2023 மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாதமொன்று சென்ற போதும் நம்பவில்லை உன் மறைவை
வருடங்கள் பலசென்றாலும் மறக்காது உன் நினைவு
ஏன் மறைந்தாய் கஜந்தி. எங்குசென்று மறைந்தாய்
மாங்காத நினைவுகளுடன் வாடுகின்றோம் உனை நினைத்து.
"உனது ஆத்மா இறைவனடியில் சாந்திபெற துதிக்கின்றோம்."

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!

123, கோயில் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(CS 26095)A-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## திருமதி டாக்டர் அன்னபூரணம் ஞானசம்பந்தர்



எமை ஈன்றெடுத்த எம் அன்புத் தாயே
உங்கள் இன்முகம் தான் எங்கேயம்மா
இவ்வுலகில் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு இரண்டு ஆனதே அம்மா

பாசத்தை நமக்கு ஊட்டி வளர்த்த
பண்பான எம் அன்னையே
கண்ணின் இமையானீர் அன்று
எம் கண்ணீரின் கதையானீர் இன்று

எங்கள் பாச ஒளிவிளக்கே
ஈராண்டு மறைந்தாலும் உங்கள் முகம்
எம்நெஞ்சை விட்டு என்றும் அகலாது அம்மா
தெய்வமே எமை விட்டு சென்றதெங்கே

ஏங்கித் தவிக்கின்றோம். ஏமாந்து போகின்றோம்
மீண்டும் ஓர் பிறப்புண்டேல்
உமக்கே பிள்ளைகளாய் பிறப்போம் அம்மா
வாரும் அம்மா ஒருமுறையேனும் எங்களிடம்.......

அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

தாய் மடியினில்
09.09.1933

அரன் அடியினில்
16.09.2021

திதி: 27.08.2023

தொடர்புகளுக்கு:
மாலதி - + 447 908 020 084
சந்திரகுமார் + 1(613)2660411

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# தனிப் பல்கலையாகின்றன கல்வியியற் கல்லூரிகள்!

## கல்வியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 27

**நாட்டிலுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளையும் இணைத்து பல்கலைக்கழகமாக உருவாக்கும் திட்டம் தொடர்பில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி நிர்வாக சேவை, போதனா ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோசனை சேவை, ஆசிரியர் சேவை என ஐந்து சேவைகள் தனித்தனியே உள்ளன. அடுத்த ஆண்டின் பின்னர் தற்போதுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளை ஒன்றிணைத்து ஒரு பல்கலைக்கழகமாக அமைத்து அதில் பீடங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பல்கலைக்கழகத்தினூடாக பயிற்றுவிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கி பாடசாலைகளுக்கு நியமிக்க எதிர்பார்க்கிறோம்- என்றார். (ச-இ)

# போலியான ஸ்டிக்கர்களுடன் 6,000 மதுப்போத்தல்கள் மீட்பு

## மதுவரித் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஓக. 27

இந்த மாதத்தில் நாடுமுழுவதும் நடத்திய சுற்றிவளைப்புகளில் போலியான ஸ்டிக்கர்களுடன் கூடிய சுமார் 6 ஆயிரம் மதுபானப் போத்தல்கள் மதுவரித் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன. அதற்கமைய போலியான ஸ்டிக்கர்களுடனான மதுபானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை உடன் இரத்துச்செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாறான மோசடியை கண்காணிப்பதற்கு திட்டமொன்றை தயாரிக்குமாறும் மதுவரித் திணைக்களத்துக்கு குழு பரிந்துரைத்தது. (ச-இ)

# ஏ-9 வீதியில் விபத்து பொலிஸ் படுகாயம்!

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- லொறி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து முறிகண்டிக்கும் இரணைமடுவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

வீதியைக் கடக்க முற்பட்ட மாட்டுக்கு இடம்கொடுத்து முன்னே செல்ல முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர், கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியுடன் மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

# தகவல்களை வழங்குவதற்கு பொலிஸ்திணைக்களம் மறுப்பு

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் தகவல் அறியும் ஆணைக்குழு எச்சரிப்பு

கொழும்பு, ஓக. 27

கோரப்பட்ட தகவலுக்கு பொலிஸ் திணைக்களத் தகவல் வழங்கும் அதிகாரி பதில் வழங்கப் பின்னடித்தால் பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டு காலிமுகத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில் குழப்பம் விளைவித்தனரென சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் டயஸ், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நளிந்த டில்ருக் ஆகியோருக்கு எதிராக பொலிஸ்தலைமையகத்தில் இரு முறைப்பாடு களை ஊடகவியலாளர் தரிந்து எரங்கா செய்திருந்தார்.




இதுவரை விண்ணப்பதாரிக்கு பொலிஸ் திணைக்களத்திடமிருந்து எதுவித பதிலும் வழங்கப்படவில்லை.

அதனையடுத்து முறைப்பாட்டாளரான ஊடகவியலாளர் தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்தார்.

அதற்கமைய தரிந்துவின் மேன்முறையீடு தொடர்பாக தகவல் அறியும் ஆணைக்குழு பொலிஸ் திணைக்களத்திடம் தகவல் கோரப்பட்ட போதும் தகவல் வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் பொலிஸ் திணைக்களம் உரிய காலத்தில் பதிலளிக்காது விட்டால் பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸ் திணைக்கள தகவல் அதிகாரிக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் அறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவி...

மிருசுவில் - தவசிக்குளத்தைச் சேர்ந்த இமானுவேல் யேசுரத்தினம் (வயது-79) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அவர் தேவாலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது, பனை ஓலையிலிருந்து வீழ்ந்த குளவி இவரைக் கொட்டியுள்ளது. அதில் காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ஒ,2627)

# பொதுஜன பெரமுனவில் முற்றுகிறது முறுகல்

## சாகரவை நேரடி விவாதத்துக்கு அழைக்கிறார் நிமல் லான்சா

கொழும்பு, ஓக. 27

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம், இலங்கையின் வரலாறு குறித்து தவறான கருத்துக்களைக் கூறிவருவதற்கு கண்டனம் வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, உண்மையான வரலாறுகள் குறித்து கலந்துரையாட நேரடி தொலைக்காட்சி விவாதமொன்றுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

சாகர காரியவசம், புதிய கூட்டணிக்கு எதிராகவும் தனிப்பட்ட ரீதியில் தனக்கு எதிராகவும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். இது போன்ற குற்றச்சாட்டுகளுக்குப் பகிரங்கப் பதில் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டபோது இல்லாதவர்கள் தற்போது அதற்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். இவர்கள்தான் கட்சியின் வரலாற்றைத் திரித்து பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். தேசியப் பட்டியலில் வந்தவர்கள் வரலாற்றைத் திரித்துப் பேசுவதற்கு அவர் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

நிமல் லான்சா தலைமையிலான குழு, பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்குபவர்களை ஒருங்கிணைத்து பெரும் கூட்டணியொன்றை அமைக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

(அ-ஒ.இ)

### குடாநாட்டில் பரவலாக

## போதைப்பொருள்களுடன் 5 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று சனிக்கிழமை போதைப்பொருள்களுடன் 5பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். திருநகர், கொய்யாத்தோட்டம், யாழ். நகர் பகுதிகளில் 50 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் 3 இளைஞர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காந்தி கிராமத்தில் 3 லீற்றர் கசிப்புடன் 48 வயதான ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

குப்பிளான் தெற்கில் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் 29 வயதான இளைஞரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-ஒ.125)

## விடைபெறுகிறார் கோபால் பாக்லே

கொழும்பு ஓக. 27

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இடமாற்றம் செய்யப்படவுள்ளார். கோபால் பாக்லேயின் இடத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதராக உள்ள சந்தோஷ் ஜா பதவியேற்கவுள்ளாரென்றும், கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளாரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மூத்த இராஜதந்திரியான கோபால் பாக்லே, கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,இ)


## தேடல்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட **பெந்தர ஹபுருகல** (Benthara, Haburugala) பிரதேசத்தில் 1979, 1980 களில் சேவையாற்றிய **வைத்தியர் சின்னத்தம்பி தர்மலிங்கம்** அவர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றோம். அவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ் தரப்பட்ட தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளவும். அவரது உறவினர்கள் அவரைத் தொடர்புகொள்ள விரும்புகின்றனர்.

**தொடர்பு:071 404 0640**
**வைத்தியர் சஜிதரன்**

## வேலை வாய்ப்பு
### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

மேற்படி விற்பனை நிலையத்திற்கு
**முகாமையாளர்**
**கணினி இயக்குநர்**
**விற்பனையாளர்கள் உடன் தேவை**
தொடர்புகளுக்கு :
077 4949 683, 077 077 6469
**212, K.K.S Road, Jaffna**
(CS 26088 A)M-1

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 3 அட்டாச் பாத்ரூமுடன் 3 Room A/C வசதியுடன் சொகுசு வீடு வாடகைக்கு உண்டு. (யாழ். போதனா வைத்தியசாலை. யா/வேம்படி மகளீர் கல்லூரி, பஸ்த்தரிப்பிடம் அனைத்திற்கும் நடந்து செல்லலாம்.)

**077 674 0469**
(CR 40029)A-1

## விற்பனைக்கு
### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

மேற்படி விற்பனை நிலையத்தில்
**மின்சார துவிச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு**
ஒரு முறை சாஜ் செய்தால் 30 km தூரம்
25 km வேகத்தில் சவாரி செய்யலாம்.
ஓர் அரிய வாய்ப்பு உடனே பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 077 4949 683
**212, K.K.S Road, Jaffna**
(CS 26088 A)M-1

## வேலையாட்கள் தேவை

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள விடுதிக்கு கீழ்காணும் வேலையாட்கள் தேவை

* Manager
* Cleaner
* Security (Night)
* சமையல்காரர்
* வரவேற்பாளர் (கணினி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்)

அனுபவம் உள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் Mob. No : 077 607 8888

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாவட்டத்தில் K.K.S.வீதி, மற்றும் பிரதான வீதிகள் அத்துடன் அவ்வீதிக்கு அண்மித்த சிறந்த குடிமனைகள் அமைந்துள்ள பகுதியில் சாதாரண வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.

**077 935 2274, 077 5124 361**


## மரண அறிவித்தல்



**தோற்றம்: 23.09.1950** **மறைவு : 26.08.2023**

### திருமதி பத்மநாதன் செல்வநாயகி

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் கொத்தத்துறை கோட்டைகாடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"பத்மவாசம்"**
**கனகரட்ணம் வீதி, வட்டுக் தென்மேற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(CS 26099) A-1

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 12.01.1954 இறப்பு 26.08.2023

எமது பிராந்தியக்காரியாலய அமைய ஊழியர் திரு.ந. பிரசாந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்லையா நமசிவாயம்**

அவர்களின் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கிறோம்

**பிராந்திய முகாமையாளரும் சக ஊழியர்களும், வட பிராந்திய காரியாலயம்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.**
(CS 26098)M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 238 சிங்களவர்...

குச்சவெளிப் பகுதியில் இந்தப் புதிய விகாரைகளை அமைக்கும் திட்டத்துக்கான அனுமதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

10 கிராம சேவகர் பிரிவுகளில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் ஒன்பது விகாரைகளும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் 14 விகாரைகளும் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மதத் தலங்களை போட்டி போட்டுக்கொண்டு அமைக்கவேண்டாம் என்று தெரிவித்திருந்தார்.

திருகோணமலையில் தமிழர் பகுதியில் அமைக்க முற்பட்ட விகாரை ஒன்றை கிழக்கு ஆளுநர் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## கஜேந்திரகுமாருக்கு...

நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின், கொழும்பு பம்பலப்பிட்டி, ராணி வீதியிலுள்ள வீட்டுக்கு முன்னால் நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் தலைமையில் அந்தக்கட்சி உறுப்பினர்களின் பங்கேற்புடன் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கஜேந்திரகுமார் வீட்டைச்சூழ நேற்றும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், கலகம் அடக்கும் பொலிஸார்அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். விமானப் படையினரும் வந்திருந்தனர். நீர்த்தாரை பிரயோக வாகனங்களும் வரவழைக்கப்பட்டிருந்தன.

கம்மன்பில தலைமையில் பேரணியாக வந்தவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். கஜேந்திரகுமாரின் வீடு அமைந்துள்ள பகுதியில் இருந்து சுமார் 20 மீற்றர் தொலைவில் போராட்டக்காரர்கள் தடுக்கப்பட்டனர். போராட்டக்காரர்களை வீட்டுக்கு அருகில் செல்வதற்கு இடமளிக்கவில்லை. பாதுகாப்பு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. நீதிமன்ற தடை உத்தரவையும் பொலிஸார் பெற்றிருந்தனர்.

சுமார் ஒரு மணிநேரம் அங்கிருந்து கோஷங்களை எழுப்பிவிட்டு பின்னர் கம்மன்பில அணியினர் கலைந்து சென்றனர்.

போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குடும்பம் 4 தலைமுறைகளாக கொழும்பில் வாழ்கின்றது. அவர்களுக்கு நாம் இடையூறு விளைவிக்கவில்லை. அவர்கள் தெற்கில் அனுபவிக்கும் சுதந்திரம், எமக்கு வடக்கில் இருக்கவேண்டும். ஆனால், குருந்தூர் மலைக்கு வந்து கஜேந்திரகுமார் குழப்பம் விளைவிக்கின்றார். யாழில் விகாரைகளை எதிர்க்கின்றார். அவரின் இனவாத நடவடிக்கைக்கு முடிவு கட்டப்பட வேண்டும் - என்றார்.

கஜேந்திரகுமார் வீட்டுக்கு முன்னால் நேற்றுமுன்தினமும் போராட்டம் நடைபெற்றது. ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்லை சீலரதன தேரர் தலைமையிலான குழுவொன்று போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.44,100)

## இந்தியாவுக்குப்...

இதற்கிடையில் திருகோணமலையில் கேபிள் கார் திட்டத்தை முன்னெடுக்கும் யோசனையை சீன நிறுவனம் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## தவறான...

முடியாத இக்கட்டுக்குள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு சிக்கியுள்ளது.

முன்னைய ஆளுநர் ஜீவன் தியாகராஜா காலத்தில் மன்னார் மன்னார் மாவட்டச் செயலரின் கணவர் குறித்த பாடசாலைக்கு அதிபராக, நியமிக்கப்பட்டிருந்தார். அவர் நியமிக்கப்படும்போது அவர் ஓய்வுபெற வெறும் 6 மாதங்களேஇருந்தன. இதனை இலங்கை ஆசிரியர் சங்கம் அப்போதே எதிர்த்திருந்தது.

புதிதாக அதிபராக நியமிக்கப்படுபவர் தான் நியமிக்கப்படும் பாடசாலையில், மூன்று வருடங்கள் கட்டாயம் சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனை இருக்கதக்கதாக இந்த நியமனம் மேற்கொள்வது தவறானது என்று ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்த நிலையில் அதிபராக நியமிக்கப்பட்டவர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி ஓய்வுபெற்றச் செல்லவுள்ளார். அதற்கு முன்னதாக அவர் மூன்று மாத விடுப்பு எடுத்துள்ளார்.

புதிய அதிபருக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றிருந்தாலும், ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் நியமிக்க முடியாத நிலைமை காணப்படுவதால் பாடசாலை தற்போது அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது. (அ-ஒ.5)

## மாநகரசபைக்...

பொருளாதார நெருக்கடி மற்றும் நிதி விடுவிப்பில் இருந்த இழுபறி காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், திறைசேரியுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார். இதனையடுத்து 500 மில்லியன் ரூபா நிதியை விடுவிக்க திறைசேரி இணங்கியுள்ளது. (அ-ஒ.26)

## ஈ.பி.எப்...

போராட்டம் நடத்தவுள்ளன. இது தொடர்பில் விடுத்துள்ள ஊடகக் குறிப்பில்;

கடந்த ஜுலை முதலாம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்குப் பயன்படுத்த அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்த முனைவதன்மூலம் ஈ.பி.எப்., ஈ.ரி.எப். நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பை அவர்களின் அனுமதியின்றிப் பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் இந்தக் கணக்குகளின் மீது சுமத்தப்படும் போது அனைத்து ஊழியர்களினதும் சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமற் போகும் அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசாங்கம் முற்படுகின்றது. இதன் மூலம் ஈ.பி.எப், ஈ.ரி.எப்., அங்கத்தவர்களுக்கு நிதிரீதியான உடனடிப்பாதிப்பும் நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாய நிலையும் உள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டம் நடத்தப்படவுள்ளதால், அரச, அரச மருவிய மற்றும் தனியார் துறை சார்ந்த அனைத்து தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும், மக்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ஒ.இ)

## ஐ.நா.வில்...

மாதம் மூன்றாவது வாரத்தில் அமெரிக்காவுக்கு செல்லவுள்ளளார்.

இதேவேளை- கியூபாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கியூபாப்பயணத்தை நிறைவு செய்து கொண்டு ஜனாதிபதி ரணில் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## யாழ்ப்பாணமெங்கும்...

யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பட்டிமன்ற நிகழ்வில் நடுவராகப் பங்கேற்றிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'நானும் பாரதி பாஸ்கரும் 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்ததன் பின்னர் இப்போதுதான் வந்திருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் நிறைய மாற்றங்களை அவதானித்திருக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் விளம்பரப் பலகைகள் முன்பு தமிழில் அதிகமாகக் காணப்பட்டன. இப்போது ஆங்கிலத்தில் அதிகம் காணப்படுகின்றன. அல்லது தமிழ் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று முன்னர் துவிச்சக்கர வண்டிப் பாவனை அதிகமாக இருந்தது. இப்போது மோட்டார் சைக்கிள் பாவனை அதிகரித்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழர்களின் அடையாளமான நகரம் யாழ்ப்பாணம். இங்கிருந்து கிளம்பிப் போனவர்கள் பூமிப்பந்து எங்கும் பரந்து வாழ்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் சிலருடன் எப்போதும் தொடர்பில் இருப்போம் என்று கூறிய ராஜா இதன்போது 'பிரபாகரன்' என்ற பெயரை உச்சரித்தார். அப்போது அரங்கம் எங்கும் பெரும் கரவொலி எழுந்தது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனைக் குறிப்பிடவில்லை என்றபோதும் அந்தப் பெயரைக் கேட்டதும் அரங்கிலிருந்தவர்கள் பெரும் கரவொலி எழுப்பியதுடன் அது அடங்குவதற்கு நீண்ட நேரம் எடுத்தது. (அ-ஒ.5)

## நாளை...

அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்ட பயனாளிகள், முதற்கட்டமாக பலன்களைப் பெற வாய்ப்பு ஏற்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலப் பயன் சபைத் தலைவர் ஜி.விஜேரத்ன இராஜினாமா செய்ததால், பணத்தை விடுவிப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக சலுகைகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக நலன்புரிப் பலன்கள் சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ-ஒ.இ)

## கோழி...

கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)


**வீடு விற்பனைக்கு**

யாழ். ஈச்சமோட்டைப் பகுதியில் 2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு.

**077 949 1161**

**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோவிலுக்கு மிக அருகாமையில் மாநகர சபைக்கு முன்பாக வங்கிகள். தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற வாகன தரிப்பிட வசதி கொண்ட 6 அறைகளுடன் கூடிய வீடு நீண்டகால வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்பு:- **075 598 1489**

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி மருத்துவபீட பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

**077 209 8826**

(CS/26070)AH-1

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு பின்வரும் பணி வெற்றிடங்கள் உள்ளன.

1. AO
2. Accountant
3. Accounting Clerk
4. Receptionist

குறிப்பு : பட்டதாரிகள் மற்றும் தகைமை உடையவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு : 28.08.2023 (திங்கட்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி
இடம் : நியூ சன்றைஸ் மெடி கிளினிக் 580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : **0769767447/ 0762555529**

**காணி விற்பனைக்கு உண்டு**

* யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **33 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

**நிலப்பரப்பு**

**பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு

**076 755 8606, 077 8743 204, 077 2880 152.**

(CS 26087)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINGER®

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

# 50% வரை விலைக்கழிவு !

நல்லூர் திருவிழாவிற்கு வருகை தரும் உங்களை
சிங்கருக்கு அன்போடு அழைக்கின்றோம்.



* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

BOC CARDS UNSTOPPABLE YOU
பான் ஏஷியா வங்கி
Sampath Cards The responsible choice
HSBC
COMMERCIAL BANK
HNB
LOLC FINANCE
NDB bank
SEYLAN BANK PLC

தொடர்பு
021 222 5408


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> குன்றினைப் போல் உடல்வன்மை வேண்டும்!
> கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்!
> தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
> அன்றன்று வாழ்வின் புதுமை காண வேண்டும்!
>
> - பாரதிதாசன்

மலை : 33 ...வர் ஆண்டு : 2052 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை (27.08.2023) சிகரம் : 165



# தமக்கு தாளம் போடமாட்டேன் என்பதால் நான் மீண்டும் துணைவேந்தராவதை சிலர் விரும்பவில்லை!

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா

○ நேர்கண்டவர்: ஜெயச்சந்திரன் சுலக்சன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனும் அரியணையில் மீண்டும் அமர்ந்திருக்கும், கணிதவியல் பேராசிரியரான சி.சிறிசற்குணராஜாவை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நேர்கண்டோம். அதன் போது அவர் தெரிவித்த கருத்துகள் இங்கு பிரசுரமாகின்றன.

**கே: யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இரண்டாவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இந்த இரண்டாவது பதவிக்காலத்தில் என்னென்ன புதிய திட்டங்களை பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளீர்கள்?**

ப: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது யாழ்ப்பாண அன்னையின் அறிவுத்திருக்கோயில் என்றால் மிகையன்று. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் குடும்பத்தை 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2026 ஆம் ஆண்டு வரை தலைமைதாங்கி வழிநடத்தும் நிர்வாகப்பொறுப்பு என்பால் வழங்கப்பட்டுள்ளது. வலுவான தலைமைத்துவம் மற்றும் தெளிவான தந்திரோபாயத் திசைப்படுத்தலினை வழங்குவதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலத்தை வடிவமைத்தல் என்பதே எனது தூரநோக்கமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பன்மைத்துவமானதும், முழுமையானதுமான விருத்தியே எனது குறிக்கோளாகும். இவற்றினை அடிப்படையாக வைத்துக்கொண்டு பின்வரும் அம்சங்களை மையப்படுத்தியதாகவே அடுத்துவரும் மூன்று வருடச் செந்நெறி அமையும்.

- நிர்வாகம் பரவலாக்கப்பட்டதும் அதேசமயம் சுயநிர்ணயம் மிக்கதுமான தொழிற்பாடுகளின் வழி சேவை முன்நிலைப்படுத்தலைக் கொண்ட பேண்தகு நிர்வாகத்தைக் கட்டமைத்தல்.
- இலத்திரனியல் கட்டமைப்பு மாற்றங்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் நுண்ணறிவினை மையப்படுத்தியதான கற்றல் – கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை விரிவுபடுத்துவதுடன் அனைத்துச் சமூக மட்டங்களிலும் நல்லாட்சியைச் செயற்படுத்தும் எதிர்காலச் சமுதாயத்தை நனவாக்கும் நோக்கில் செயற்படுதல்.
- கற்றல் – கற்பித்தல் முனைப்பான மனப்பாங்கு மாற்றத்துடன்கூடிய சமுதாயத்தைக் கட்டமைக்கும் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அறிவுத்திறன் கொண்ட தொழில்சார் வல்லுநர்களை உருவாக்கும் வகையிலான மாணவர்மையக் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளை வலுப்படுத்துதல்
- ஆய்வு – சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் எதிர்நோக்கப்பட்டுவருகின்ற பிரச்சினைகளை முன்நிறுத்தி அவற்றினது தாக்கங்களைக் கட்டுப்படுத்துதல், மேலும் தீர்க்கும் வகையிலான கோட்பாடு மற்றும் பிரயோகம்சார் ஆராய்ச்சிகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஊக்குவிப்பதற்கான கொள்கை மற்றும் தொழிற்பாடுசார் கட்டமைப்புகளை அனைத்து மட்டங்களிலும் உள்ள பங்குதாரர்களை இணைப்பதன் ஊடாக வலுப்படுத்துதல்
- சர்வதேசக் கூட்டிணைவு உலகளாவிய பார்வையிற் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும், போட்டித்தன்மைமிக்க எதிர்காலத் தலைவர்களை வெளிக்கொணர்வதற்குமான நிறுவன அளவிலான புரிந்துணர்வுகளைச் சர்வதேச ஒத்துழைப்புகளுடன் மேற்கொள்வதன் வழி சர்வதேச திறமைச் சுழற்சிக்கான மையமாக மாற்றுதல்
- சமூக இடைவினை – இன, மத மற்றும் பால்நிலை என்றெல்லாம் சொல்லப்படும் சமமற்ற தன்மைகளைக் கடந்து சமானம் மற்றும் சமத்துவம் என்பவற்றினை முன்நிலைப்படுத்திச் சமூக மட்டத்தில் செயலாற்றுவதுடன் பன்மைத்துவச் சமூகங்களை வழிப்படுத்தி வலுப்படுத்தும் அறிவியல் மையமாக எமக்கேயான சமூக, பிராந்திய, கலாசார அடையாளத்துடன் தேசிய மற்றும் சர்வதேச அளவில் இணைந்து செயற்பட்டு சமூக நிலைபேண் தன்மையினை உறுதிப்படுத்துதல்"
- நிதி வலுவான நிதிமூலங்களில் இருந்து கிடைக்கப்பெறும் பொதுநிதியைப் பாதுகாத்து வினைத்திறனான நிதி ஒதுக்கீடுகளின் வழி ஒருங்கிணைந்த நிதிப் பயன்பாட்டினை நிர்வகிப்பதன் மூலம் நிலையானதும் தன்னாட்சி மிக்கதுமான நிதிநிர்வாகத்தைச் செயலூக்கப்படுத்துதல்
- உட்கட்டமைப்பு வசதிகள் திறன் வலுவூட்டலை முன்னிலைப்படுத்தி உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற உட்கட்டமைப்பு மாற்றங்களிற்கு இயைபுபட்டதான பௌதீகக்கட்டமைப்பு மாற்றங்களைப் புத்தாக்கங்களின் மூலம் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்துதல்
- மனிதவளம் பல்கலைக்கழகச் சமூகத்தினை வழிப்படுத்துதல் என்பதோடு மிக முக்கியமாகக் கல்வி மேம்பாடு, சேவை நோக்கிய நிர்வாகம், மாணவர்களை மையப்படுத்திய கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த கல்விசாராச் செயற்பாடுகள், சமூகப்பொறுப்புணர்ந்த ஆராய்ச்சிகள் என்பவற்றை மேற்கொள்ள உவப்பான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு முதிர்ச்சியுடைய மனித வளத்தின் இருப்பினை உறுதிப்படுத்துதல்

இவ்வாறான பிரதானப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுடன் கூடவே காலத்தின் தேவைகருதிய இதர செயற்பாடுகளின் எளிதாக்கல் தன்மையை முன்னிறுத்திச் செயற்படத் திட்டமிட்டுள்ளேன்.

**கே: 'சமுதாயச் சமையலறை' என்ற செயற்றிட்டம் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களிலேயே, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஒரேயொரு பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மாற்றிக்காட்டியுள்ளீர்கள். எப்படி இதனைச் சாத்தியமாக்க முடிந்தது?**

## யாழ்.பல்கலைக்கழகத்தை சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துவதற்காகவே மீண்டும் துணைவேந்தரானேன்

ப: ஆம். இந்தச்செயற்றிட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தான் கருவுருவாக்கம் பெற்றதுடன், கடந்த ஒருவருடம் மற்றும் இரண்டு மாதங்களாக வாரஇறுதிநாட்கள் தவிர்ந்த ஒவ்வொருநாளும் இடையறாது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டும் வருவதாகும் என்பதே. இது தேசிய அளவில் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்காகவும் உருவாக்கப்பட்ட திட்டம் அல்ல. மாறாக எங்களால், குறிப்பாக விரிவுரையாளர்களால் எங்களது மாணவர்களது இக்கட்டான சூழல்நிலையை அறிந்து எங்களிடமிருந்த வளங்களை ஒருங்கிணைத்தும் பயன்படுத்தியும், எங்களால் மட்டும் இற்றைவரை நிலைபேறாக நடத்தப்பட்டுவரும் செயற்றிட்டமே இதுவென்பதை நாம் புரிந்துகொள்ளல் வேண்டும். இப்பொழுது இந்தச்செயற்றிட்டத்தினது தொடர்ச்சியான சாத்தியப்பாடு தொடர்பில் சிந்தித்தால், குறித்த செயற்றிட்டத்தினது கருவுருவாக்கத்துக்கு பின்னால் இருந்த மனித நேயப் பிரச்சினை, அதனைத்தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்ற செயற்றிட்டக் கருத்தியல் மாதிரி ஆகிய இரண்டும்தான் இதன் வெற்றிக்குக்காரணம் என நம்புகிறேன். கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கை கொவிட்- 19 தொற்றின் எதிர்மறை விளைவுகள்,

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# என் மீதுள்ள வன்மத்தைக் காட்ட 'சமுதாயச் சமையலறை' போன்ற நல்ல திட்டங்கள் தொடர்பிலும் சிலர் அவதூறு பரப்பினார்கள்



பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட கையறுநிலை என இரட்டைத்தாக்கங்களுக்கு ஏககாலத்தில் முகம்கொடுக்கவேண்டியிருந்தது. அந்தக்காலத்தில் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தமது கல்விச்செயற்பாடுகளை நிறுத்தியும், நிகழ்நிலையில் நடத்தியும் செல்வது தொடர்பில் சிந்தித்திருந்தவேளை எனது நோக்கமாக இருந்தது தாமதமின்றி மாணவர்களது கற்றல் செயற்பாடுகளை முடிவுறுத்தி அவர்களைப் பட்டச்சான்றிதழ் பெறவைப்பதே. அதன் நிமித்தம் நேரடியான விரிவுரைகள் நடைபெற்றபோது பல மாணவர்கள் தமது கல்வி தொடர்ச்சியாக நடைபெறுவதையிட்டுத் திருப்தியடைந்த அதேசமயம் மறுபுறம் மூன்று நாள்களாக வெறும் தேநீருடன் மட்டுமே அவர்கள் பரீட்சைகளுக்குச் சமுகமளிக்கும் நிலையும் காணப்பட்டிருந்தது.

ஒரு கட்டத்துக்கு மேல் சில மாணவர்கள் உணவுத் தேடலில் தோல்வியுற்றுப் போயிருந்தமையினால் கல்வியையே இடைநிறுத்திச் செல்லும் முடிவுக்கும் வந்திருந்தனர். உணவின்மை ஒருவனின், அதிலும் குறிப்பாக முதலாம் தலைமுறையினராகப் பல்கலைக்கழகம் வந்த பல மாணவர்களின் எதிர்காலத்தைத் தடைப்படுத்திவிடக்கூடாது என்ற உத்தம நோக்கத்தின் பின்னணியில் குறித்த பிரச்சினைக்கான தற்காலிகத் தீர்வாக ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்தச்செயற்றிட்டம். ஆகவே மாணவர்களின் தலைமுறைக் கல்விக்கான தடையாக உணவு இருந்ததனை நகமும் சதையுமாக உணர்ந்ததன் வெளிப்பாடே இந்தச்செயற்றிட்டத்தின் இற்றைவரையான நிலைத்திருப்புக்கு முக்கியமான காரணம் ஆகும்.

இரண்டாவது விடயமான செயற்பாட்டு மாதிரி தொடர்பில் பேசுவதாயின் நல்லாட்சி என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். நல்லாட்சி என்பது அரசு, தனியார் மற்றும் சிவில் சமூகக் கட்டமைப்புகளை ஒன்றிணைத்து வகைகூறல், வெளிப்படைத் தன்மை, பொறுப்புணர்வு, பங்குபற்றல், சட்டத்தின் ஆட்சி, வினைத்திறன் மற்றும் விளைதிறன், சமானம் மற்றும் சமத்துவம், ஒருங்கிணைவு ஆகிய எட்டுத் தத்துவங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படுவது என்பது வரையறை.

இந்தச்செயற்றிட்டமோ இவ்வரையறையைப் பின்பற்றி நடத்தப்படவேண்டுமென்ற வகையில் கட்டமைக்கப்பட்டிராதபோதும் செயற்றிட்டத்தினது தொடர்ச்சியான செயற்பாடானது குறித்த நல்லாட்சி மாதிரியை மறைமுகமாகப் பிரதிபலிப்பதாகவே அமைந்துவிட்டது. செயற்றிட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் இந்தத்தத்துவங்களைப் பிரதிபலிப்பதனால் இது ஒரு நல்லாட்சியின் மிகச்சிறந்த பிரயோகத்தளமாக காணப்பட்டு வருகின்றமையே இதன் நிலைபேறான சாத்தியப்பாட்டுக்கான மற்றைய காரணமாகும்.

குறிப்பாகச் செயற்றிட்ட வெற்றிக்கும் நிலைத்திருப்புக்குமான சில முக்கியமான செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்கலாம்.

- ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்களின் அத்தியாவசிய உணவுத் தேவை என்பது வெறுமனே எழுத்துருவில் வைத்துவிட்டுக் கடந்துசெல்ல முடியாத பிரச்சினையாக உள்ளமையும் அதனைப் பல்கலைக்கழகம் நன்கு உணர்ந்தமையும்.
- பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் என்ற வகையில் அரசினுடைய பங்காளர்களும் கொடையாளர்கள் என்ற வகையில் தனியார் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றிணைந்த செயற்பாடும்.
- தொண்டு அடிப்படையில் எதுவித எதிர்பார்ப்புகளுமின்றிச் செயற்பட்டுக்கொண்டேயிருக்கின்ற பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தன்னிகரற்ற அர்ப்பணிப்பான சேவை.
- உள்ளூர் தொடக்கம் சர்வதேசம் வரையான கொடையாளர்களின் தடையற்ற கொடை.
- நாளாந்தக் கொள்வனவு, சமையல், உணவுப் பரிமாற்றம், துப்புரவாக்கல் போன்ற செயற்பாடுகளின் வகைகூறல் தன்மை.
- நிதிவருகை, பொருட்கள் சேவைகளுக்கான பெறுகை மற்றும் கொள்வனவு என்பவற்றில் உள்ள வெளிப்படைத் தன்மை.
- பல்கலைக்கழக பொதுவான கணக்குக்கு மட்டுமே நிதி அன்பளிப்புகளை வைப்பிட்டு அவற்றை உரிய நிதியியற் கோவை நடைமுறைகளுக்கூடாக மீளெடுத்துச் செலவு செய்து கணக்குக்காட்டும் முறைமை.
- பொருள் அன்பளிப்புகளையும் நிதிசார் மதிப்பீட்டுக்கு உட்படுத்திப் பெற்றுக்கொண்டு பயன்படுத்தும் முறைமை.
- இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கணக்கு விபரங்களை அனைத்துப் பங்குதாரர்களுடனும் பகிர்ந்துகொள்வதுடன் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ கட்டமைப்புகளாகிய நிதியியல் குழு மற்றும் பேரவைக்குச் சமர்ப்பித்தல்.
- கொடையாளர், தொண்டர், நலன்விரும்பிகள், பயநர்கள் என்ற வேறுபாடுகளையோ பிரிப்புக்களையோ உருவாக்கிக்கொள்ளாது அனைவரும் அனைத்திலும் பங்குபற்றவும் செயற்பாடுகள் தொடர்பில் உடனுக்குடன் அறியவும் எற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டிணைந்த தகவல் பரிமாற்றக் கட்டமைப்பு.
- கொடையின் அளவு அல்லது சேவையின் தரம் என்பவற்றைப் பாராது அனைவரையும் ஒரேமாதிரியாக மதித்து அவர்களது பங்களிப்புக்குச் சான்று வழங்கி மதிப்பளிக்கும் முறைமை.
- கொடையாளர்களை முடிந்தவரை ஒருமுறையாவது சமுதாயச் சமையலறைக்கு அழைத்துச்சென்று நடைபெறும் செயற்பாடுகளைக் காண்பித்தலும் கொடையாளர் விரும்பின் அவர்களின் பிரசன்னத்துடனேயே அன்றைய உணவு வழங்கலை மேற்கொள்ளலும்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது அனைத்துப் பீடங்களிலும் குறிப்பாக வேறுவேறு இடங்களில் உள்ள பீடங்களில் உள்ள தேவையான மாணவர்களுக்கும் உரிய நேரத்தில் உணவினைப் பரிமாறுகின்ற செயற்பாடு.
- நாளாந்த செலவுக்கான நிதியீட்டம் என்பதையும் தாண்டி நிலையான கணக்கில் ஒருதொகை பணத்தினை வைப்பிலிட்டு அதன் வட்டிப்பணத்தில் காலாகாலமாக சமுதாய சமையலறையினூடாக உணவு வழங்குவதற்கான முயற்சியை ஆரம்பித்துக் கணிசமாக அடைவினை எட்டியுள்ளமை.
- கொடையாளர்கள் சார்ந்து எந்த ஒரு கட்டளைகளையும் முன்வைக்காமல் எதுவாயினும் ஏற்றுக்கொண்டு அவர்களை மதிப்பளிக்கும் தன்மை.
- தொடர்பாடல் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் தன்மை. குறிப்பாக நான் விருந்தினராக அழைக்கப்படும் அனைத்து இடங்களிலும் அவர்களிடம் சொல்லும் விடயம் யாதெனில் நான் உங்கள் நிகழ்வில் கலந்து கொண்டதில் மகிழ்ச்சியடைகிறேன் . அதேபோன்று 'எமது பல்கலைக்கழகத்தில் சமுதாய சமையலறை என்று ஒன்று செயற்படுகின்றது. அதனை ஒருமுறையாவது தாங்கள் நேரடியாக வருகைதந்து பார்த்தால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கும்' என்பதாகும்.
- அத்தோடு மட்டுமன்றித் துணைவேந்தரைச் சந்திக்கப் பல்கலைக்கழகம் வருகின்ற பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், சிவில்சமூக அமைப்புகளின் தொண்டர்கள், எனது நண்பர்கள் என அனைவரையும் நேரடியாகச் சமுதாய சமையலறைக்கு அழைத்துச்சென்று காண்பிப்பேன். இதனைக் கடந்த ஒரு வருடமாகத் தவறாது செய்துவருகின்றேன். மேலும் அவர்கள் சம்மதத்துடன் எமது தொடர்பாடல் வலையமைப்பில் அவர்களையும் இணைத்து அனைத்துச் செய்திகளையும் பரிமாறுகின்றோம். இவ்வாறான தொடர்பாடலும் உறவுப்பாலங்களுமே பல கொடையாளர்களை இங்கு கொண்டுவந்து சேர்த்துள்ளமை மிகவும் பிரதானமானதாகும்.

இவை ஒருசில செயற்பாடுகளே. இவ்வாறு எத்தனையோ நல்ல விடயங்கள் இங்கு தினமும் நடைபெறுகின்றன. இந்தச்செயற்றிட்டம் பல தடவைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் பல அவைகளிற் சுட்டிக்காட்டப்பட்டு ஏனையவர்களாலும் மேற்கொள்ளப்படவேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனைச் சிறந்த மானிட நல்லிணக்கச் செயற்பாடு எனக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் தேசிய நாளிதழ்கள் பலவும் இந்தச் செயற்றிட்டத்தைப் பாராட்டிச் செய்திகளை வெளியிட்டுள்ளன. பயனடைந்த பல மாணவர்களால் பல கொடையாளர்கள் இந்தச்செயற்றிட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். பல பெற்றோர் நேரடியாக நன்றி தெரிவித்துவருகின்றனர். இவை அனைத்தும் புகழ்ச்சிக்கானதாக இங்கு பகிரப்படவில்லை, மாறாகத் தேவையறிந்த ஒரு விடயத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன, மத, பேதம் இன்றி இக்கட்டான சூழலில் ஆரம்பித்து இற்றைவரை நடத்திவருகின்றது என்பதை உணர்த்துவதற்காகவும், இந்தச்செயற்றிட்டத்தில் இணைந்து பயணிக்க விரும்புவோரை அழைப்பதற்காகவுமே ஆகும்.

**கே: நீங்கள் துணைவேந்தராக மீண்டும் வரக்கூடாது என்று சில வெளிச்சக்திகள் தீவிரம் காட்டியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அவை உண்மையா? உண்மையெனில் ஏன் அந்த வெளிச்சக்திகள் உங்களுக்கு எதிராக இயங்கின என நினைக்கிறீர்கள்?**

ப: (சிரிக்கிறார்) ஆம். அவ்வாறு தான் நானும் பல கதைகளைக் கேள்விப்பட்டேன்; கேள்விப்பட்டுக் கொண்டும் இருக்கின்றேன்.

இதில் வெளிச்சக்தி, உட்சக்தி என்று வேறுபடுத்திப் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை. ஆசைதான் இதற்கெல்லாம் காரணம். இங்கு ஆசை உடையோரை இரண்டு வழிகளிற் பார்க்கலாம். ஒன்று, பதவிக்கு தாம் வரவேண்டுமென்ற ஆசை உடையோர். இரண்டு, தமது ஆசைக்குரியவற்றை நிறைவேற்றக்கூடியவர்கள் பதவிக்கு வரவேண்டுமென்ற ஆசை உடையோர். இதில் முதலாவது ஆசை என்பது தகைமையின் அடிப்படையில் அடையப்படத்தக்கப்படவேண்டியதே அன்றி, வெறும் ஆசையினை வைத்திருப்பதனால் மட்டும் அடையப்படக்கூடியதன்று. இரண்டாவது ஆசை, என்பது மிகவும் விபரீதமானது. ஏனெனில் தகைமையுடன் பதவிக்கு வந்தவரைக்கூட தமக்கேற்றாற்போல ஆடச்செய்யுமளவுக்கு வீரியமானது.

இவ்வாறான சூழலில் இவ்விரு ஆசைஉடையோரும் ஒன்றிணைந்தால் தாங்கள் ஆசைப்படுவதற்கெல்லாம் தாளம்போடாத ஒருவரைப் பதவியில் விட்டு வைத்துப் பலனில்லை என்ற முடிவுக்குத்தானே வருவார்கள். அதனடிப்படையில் எனது கடந்த மூன்று ஆண்டுகால நிர்வாகத்தினை நன்கு அவதானித்தவர்கள் தங்களுக்கு வசதியில்லாதவர் ஒருவர் பதவிக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகப் பொய்யுரைத்தார்கள் பழி போட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

அந்த வசைமொழிகளில் ஒன்று, தாங்கள் வினாவிய முதற்கேள்வியோடு தொடர்புபடுவதால் இங்கு அதனைப் பிரத்தியேகமாகச் சொல்ல விளைகிறேன். அதாவது ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு அன்னமிட்டு ஆதரவளிக்கும் சமுதாயச் சமையலறை தொடர்பில் தாங்கள் என்னை முதலில் வினாவினீர்கள் தானே. அதன் அவசியத்தை எங்கோ அறிந்துகொண்டதனாற்தானே அதைப்பற்றிக் கேட்டீர்கள்? பின்னர் நான் வழங்கிய பதிலின் வாயிலாக அதன் தொழிற்பாடுபற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். குறித்த அந்தச் செயற்றிட்டத்தினைப்பற்றியே அவதூறாகப்பேசித் தமது வன்மத்தைக் கொட்டித்தீர்த்தார்கள் என்றால் வேறென்ன சொல்லமுடியும்?

உண்மை எது என்பது உலகறிந்த விடயம். உண்மை என்றும் அழியாது. அது இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. துணைவேந்தராக நான் எமது மாணவர்களுக்காகவும் சமூகத்துக்காகவும் ஆற்றவேண்டிய பணிகள் பல இருக்கின்ற நிலையில் இவ்வாறான விடயங்களைப் பேசுவதைத் தவிர்த்து செயலாற்றுவதே உத்தமம். அவர்களது நல்வாழ்வுக்காகவும் நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கே: துணைவேந்தராக உங்களது முதலாவது பதவிக்காலத்தில் நீங்கள் சவால்கள், நெருக்கடிகள் பலவற்றை எதிர்கொண்ட போதும், மீண்டும் துணைவேந்தராக வரவேண்டுமென முடிவெடுத்ததன் பின்னாலுள்ள காரணம் என்ன?**

ப: கடந்த மூன்று வருடங்கள் என்பது இலங்கை வரலாற்றில் மிகவும் இக்கட்டான காலப்பகுதியே. ஏற்கனவே கூறியதுபோல கொவிட் 19 தொற்றினால் நாடே முடக்கப்பட்டிருந்தது. பின்னர் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளால் பல்கலைக்கழகத்தினது நாளாந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டிருந்தது. இவ்வாறான சூழலிலும்கூட பேரவை, மூதவை, பீடச்சபைகள் என்பவற்றின் ஏகோபித்த ஒத்துழைப்புடனும், கல்வி சாரா ஊழியர்களின் உற்சாகமான பங்களிப்புடனும் பல்கலைக்கழகத்தில் பல புதிய முன்னுதாரணச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. இந்தநடைமுறைகள் அனைத்தும் நிறுவனமயப்படுத்தப்பட்டு , ஒரு இயங்குநிலை ஒழுங்குக்குக் கொண்டுவரப்படவேண்டிய தேவை என்னால் உணரப்பட்டிருந்ததோடு மட்டுமன்றிப் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் நான் இவ்வாறு ஒரு முடிவெடுக்க நேரிட்டது. அத்தகைய செயற்பாடுகளுட் சிலவற்றை மட்டும் தங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

- தகுதிகாண் விரிவுரையாளர்களாக பல்கலைக்கழகத்துக்கு உள்ளீர்க்கப்படும் விரிவுரையாளர்கள், குறித்த காலத்தில் தமது துறைசார்ந்து விசேட புலமையை விருத்திசெய்துகொள்ளவேண்டிய கட்டாயம் உள்ளது. அதற்குத் துணைபுரியும் வகையிலும் தமது அறிவு மற்றும் சர்வதேச மட்டத்தில் தொடர்பாடல் ஆளுமைத்திறனை விருத்திசெய்யும் வகையிலும் ஆங்கிலத்தில் தமது புலமையை நிரூபிக்கும் முகமாக ஐ.ஈ.எல்.ரி.ஸ். பரீட்சையில் குறித்த தகைமையைப் பெற்றிருக்கவேண்டுமென்பது நிபந்தனையாக்கப்பட்டது. இந்த நிபந்தனை பல தகுதிகாண் விரிவுரை யாளர்களுக்கு சர்வதேச தரத்திலான மேற்படிப்பு வாய்ப்புகளை இலகுவாகப் பெற்றுக்கொடுத்துவருகின்றது. குறிப்பாக ஆங்கில மொழிமூலமல்லாது தமிழ் மொழிமூலம் பட்டக்கல்வியைப் பயின்ற பலருக்கு இது ஒரு ஆங்கிலமொழிசார் மேற்படிப்பினைத் தொடரத் திறவுகோலாக அமைந்துள்ளது.
- ஆராய்ச்சித் துறைசார்ந்து போலியான ஆய்வுகளும், அறிக்கையிடல்களும், பிரசுரிப்புக்களும் புலமைப்பாரம்பரி

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யத்துக்கே சவால்விடும் அளவில் மூன்றாம் உலக நாடுகளில் அதிகரித்துச்செல்லும் இந்தச்சூழமைவில் . ஆராய்ச்சிகளின் போலித்தன்மையை இழிவளவாக்கும் நோக்குடன் இலங்கையில் உள்ள அனைத்து உயர்கல்வி நிலையங்களுக்கும் முன்னுதாரணமாக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன்வழி போலியான ஆய்வுகள் தொடக்கம் பிரசுரிப்புகள் வரை கட்டுப்படுத்தப்படுவதனால் ஒரு ஆரோக்கியமான ஆராய்ச்சிச்சூழல் உருவாக்கப்பட்டிருப்பதுடன் ஆளுமையான ஆராய்ச்சியாளர்களும் அதிகம் உருவாக ஆரம்பித்துள்ளனர். இது எமது பல்கலைக்கழகத்தினையும் ஆய்வாளர்களையும் ஆராய்ச்சிசார்ந்து சர்வதேச தரத்துக்கு உயர்த்திச் செல்ல வழிகோலியுள்ளது.

- பல்கலைக்கழகத்துக்கான விண்ணப்பத்தகுதி பெற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப்பெற்றிராத. கற்றலில் ஆர்வமுடைய எமது பிராந்திய மாணவர்களுக்கான வெளிவாரிப் பட்டக்கல்வியை வெளிவாரி,உள்வாரி என்ற வேறுபாடு புலப்படாதவகையில்பெறும் வகையில் கலைத்திட்ட சீரமைப்புகளை மேற்கொண்டதோடு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கட்டமைப்பு விருத்தியினூடாகத் தொலைக்கல்வியை வினைத்திறனாகக் கற்றுக்கொள்வதற்கான வசதிப்படுத்தல்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி மையத்தினூடாக வலுவூட்டியமை. மேலும் வயது பேதமின்றி அனைவரும் தமக்குத் தேவையான அறிவுப்பரப்புகளில் புலமை பெறும் வகையில் குறுங்காலக் கற்கைநெறிகளை மேற்படி மையத்தின்வழியாக ஆரம்பித்து வழங்கி வருகின்றமை.
- மேலும் 1980 களில் நான் ஒரு முன்னணி விளையாட்டு வீரனாக திகழ்ந்து, 1990 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக இருந்தவன் என்ற நிலையில் விளையாட்டுத்துறைசார் வசதிகள் சார்ந்து மாணவர்கள் முகங்கொடுக்கும் பல இடர்பாடுகளை நன்கு அறிவேன். அதிலும் குறிப்பாக உள்ளக விளையாட்டுக்களுக்கான பயிற்சிக்கூடங்கள் போதாமையால் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகளின்போது முகம் கொடுத்து வந்த சவால்கள் பற்பல. அவற்றினை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கைச் சர்வதேச தரத்திலான வசதிகளுடன் அமைத்துள்ளமை. இன்று அனைத்துப்பீட மாணவர்களும் பயிற்சிபெற்று போட்டிகளில் பங்குபற்ற ஏதுவாக உள்ளக விளையாட்டரங்கு காணப்படுவதுடன், வருடந்தப் பொதுப்பட்டமளிப்பு விழாவையும் பலரது பங்குபற்றலுடன், குறிப்பாகப் பட்டம்பெறும் மாணவர்களின் குடும்பத்தாருடன் அங்கு கொண்டாட முடிகின்றமை சிறப்பு.
- வருடாந்தப் பொதுப்பட்டமளிப்பு விழாவானது கடந்த கொவிட் 19 காலப்பகுதியில் நேரடியான மாணவர்களின் பிரசன்னத்தோடு நடத்தப்படமுடியாத நிலையில் நிகழ்நிலையிலாவது நடத்தி மாணவர்களுக்குத் தாமதமின்றிப் பட்டச்சான்றிதழ் வழங்கவேண்டுமென்ற உந்துதலின் பயனாக உருவானதே துணைவேந்தர் ஊடகம். குறித்த ஊடகம் வழியாகப் பொதுப்பட்டமளிப்பு விழாவானது நிகழ்நிலையில் மிகச் சிறப்பாக நிகழ்த்தப்பட்டிருந்தது. இவ்வாறு கருக்கொண்ட துணைவேந்தர் ஊடகம் என்பது இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது புலமைசார் செயற்பாடுகளைச் சர்வதேச மட்டத்தில் அனைவரிடமும் கொண்டு சென்று சேர்ப்பிப்பதில் அளப்பரிய சேவையாற்றுவதை நிச்சயம் நாம் மறுக்கமுடியாது. முக்கியமாக இவ்வாறான ஒளிபரப்புகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கான பெரும் வெளிப்படுத்துகையை சமூகமட்டத்தில் ஏற்படுத்துவ்தோடு மட்டுமல்லாது மறைமுகமாக ஆவணப்படுத்தல் ஒன்றையும் எமது சமூகம் சார்ந்து மேற்கொண்டுவருகின்றமையையும் நாம் உணர்ந்துகொள்ளல் வேண்டும். இதற்கும் மேலாகப் பல்கலைக்கழகத்தினது செய்தித்தொடர்பாடல் ஊடகமாகவும் இது தொழிற்படுவதனால் அனைத்து உள்ளூர் மற்றும் தேசிய ஊடகங்களோடு சிறந்த உறவினைப் பேணிவருகின்றமையும் மிகவும் முக்கியமானதாகும்.

இவை ஒரு சில உதாரணங்களே. இவ்வாறாகப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாதகமான பல மாற்றங்களை மேலும் வலுப்படுத்தி,நிறுவனமயப்படுத்தி, ஒரு ஒழுங்குநிலைக்குக் கொண்டுவரவேண்டியது காலத்தின் பிரதான தேவையாக என்னால் மட்டுமன்றிப் பலராலும் உணரப்பட்டிருந்ததனாலும் தற்காலத்தில் ஆய்வு சார்ந்தும், புத்தாக்கம் சார்ந்தும் உயர்வுபெற்றுவரும் எமது பல்கலைக்கழகத்தின் தரத்தை இலங்கையில் மட்டுமன்றிச் சர்வதேச மட்டத்திலும் நிலைநிறுத்த வேண்டும் என்ற தூரநோக்கமே மீண்டும் துணைவேந்தராகும் முடிவுக்கு வித்திட்டது என்றால் மிகையன்று.

**கே:** **நீங்கள் ஒரு கணிதவியல் பேராசிரியராக இருந்தாலும் தமிழ், ஆன்மீகம், கலை என்று எல்லாத் தறைகளிலும் சரளமாகவும், புள்ளிவிவரங்களோடும், ஓர் தேர்ந்த பேச்சாளர் போல ஜனரஞ்சகமாக நீங்கள் நிகழ்த்தும் உரைகள் பலரையும் ஆச்சரியப்படவைத்துள்ளன. எப்படி வாய்த்தது இந்தவரம்?**

**ப:** ஒரு தமிழனாகத் தமிழை ஆராதிப்பதொன்றும் அதிசயமல்ல. செம்மொழியான எம் தமிழ்மொழியை ஆராதிப்பது என்பது எம் ஒவ்வொருவரதும் கடைமையன்றோ! அடுத்து உலக வாழ்வியலின் உண்மைத் தன்மைகளை உணர்த்தவல்லது ஆன்மீகம்தான் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளதனால் ஆன்மீகத்தை ஆராய்ந்து ஆராய்ந்து மகிழ்கின்றேன். தமிழனாகவும், ஆன்மீகத்தின் மீது நாட்டமுள்ளவனாகவும் இருப்பவனிடம் கலைத்தாகம் இல்லாதிருப்பதுதான் அதிசயமேயன்றி அது நிறைந்து கிடப்பது யதார்த்தமானதே.

**நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட திருவாய்மொழியானது**

*'நாடீர் நாள்தோறும்*
*வாடா மலர்கொண்டு*
*பாடீர் அவன்நாமம்*
*வீடே பெறலாமே'*
*என்றும்*
*திருநாவுக்கரசரால் அருளிச்செய்யப்பட்ட*
*திருத்தாண்டகமானது*
*'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*

*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அனல்புனல்சேர் செஞ்சடையெம் ஆதீ*
*யென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே'*
*என்றும்*

வீடுபேறு அடைதலிற்கான வழிகளை இலகுவாகக் கூறி நிற்கின்றது. அதாவது 'பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே' என்றும் "ஆரூரா என்றென்றே அலறா நில்லே' என்றும் பாடியிருப்பதன் வழியாக இறைநாமம் பேசுவதாலும், இறைபுகழ் பாடுவதாலும் வீடுபேறு எனும் முக்தியை ஒருவன் அடையமுடியுமென்றால் அதைத்தான் நானும் செய்கின்றேன். அதன் நிமித்தம் என்னால் மேற்கொள்ளப்படும் உபாசனைகள் ஜனரஞ்சகமாக, நல்லோருக்கும் அமைந்திருக்கின்றன என்பதற்கான காரணம் சிறுவயது முதல் அன்னை அபிராமியையும், செல்லக் கண்ணனையும் இடையறாது பஜனைகளால் பாடிவரும் மரபினால் ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சொல்வாண்மை எனும் கலைவெளிப்பாடாக இருக்கலாம். இவ்வாறாகவே என்னிடம் தமிழும் அதனைச் சார்ந்த கலையுணர்வும் அவற்றின் ஊடான ஆன்மீகப் பற்றுதலும் கட்டமைப்புப் பெற்றிருப்பதாக நான் உணர்கிறேன்.

மேலும் எனது பேச்சுகள் புள்ளிவிவர ரீதியாக அமைந்திருப்பதாகக் கூறினீர்கள். அவ்வாறு இருப்பதனாற்றானோ என்னவோ அவை மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆதாரங்களைச் சுட்டாது அல்லது தொடர்புபடுத்தாது வெறுமனே கதைகளைக் கூறுவது தற்காலத்தில் ஏற்புடையதாக இருக்குமா என்பது வினாவுக்கு உரியதே. இந்தப் புள்ளிவிவர அல்லது ஆதார அடிப்படையிலான எனது பேச்சுகளுக்குப் பிரதான காரணம் நான் ஒரு கணிதப்பேராசிரியராக இருப்பதாகும் என எண்ணுகிறேன். ஒரு விஞ்ஞானப் பின்னணியுடைய ஒருவர் எதுவாக இருந்தாலும் அதனைப் பரிசோதனைக்குட்படுத்தி அல்லது ஒன்றோடு ஒன்றைத் தொடர்புபடுத்தி உய்த்தறிந்து பார்க்கும் பழக்கம் மிக்கவராக இருப்பது இயல்பு. அதன் வழியே நானும் மெஞ்ஞானத்தினால் உணர்த்தப்பட்டிருந்த விடயங்களை அவை விஞ்ஞானமாகாது எனப் பலரும் வாதிடுகின்ற சூழலில் அம் மெஞ்ஞானக் கருத்துக்களை விஞ்ஞானம் சார்ந்து காரண காரியத் தொடர்புடன் கூறி வருவதனால் அது ஆதாரபூர்வமான உண்மைத்தன்மையை அண்மிப்பதாக மாறிவிடுகின்றது. அதனால் எனது பேச்சுகள் அனைத்துமே புள்ளிவிவரம் அல்லது காரண காரியத் தொடர்புபடுத்தல் மிக்கனவாக அமைந்துபோய்விடுகின்றன.

மேலும் காலாகாலமாக மரபுரீதியான ஆன்மீகக் கருத்துகளைக் கேட்டும், வாசித்தும் வருகின்றவன் நான். குறிப்பாக மேற்குறிப்பட்ட திருத்தாண்டகத்திற் கூறப்பட்டது போன்று தினமும் புலர்வதன் முன் எழுந்து, பூப்பறித்து ,ஸ்ரீ மகாகணபதி ஆலயத்துக்குச் சென்று அபிஷேகம் மற்றும் அர்ச்சனை செய்து தியானம் செய்து வரும் நிலையில் இவை அனைத்தும் இந்த எல்லாம் வல்ல இறைவனால் அனுக்கிரகிக்கப்பட்டதாகவே எண்ணுகிறேன். தாங்கள் அனைவரும் எனது உரைகளைச் செவிமடுப்பதற்கும் தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கும் மிக்க நன்றி. என்றும் இறைவன் தங்களைப்போன்ற நல்லுள்ளங்கள் அனைவருக்கும் துணைநின்று ஆசீர்வதிப்பாராக!

(நேர்காணலின் இறுதிப் பகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெட்டிக்கடைக் கல்வியும் கெட்டழியும் மாணவர்களும்

பொறியியலாளர் சூரியசேகரன்

இப்போது எமது கல்வியானது தனியார் ரியூட்டரிகளில் விற்பனைப் பொருளாக மாறியுள்ளது. மாணவர்கள் கல்விச் சந்தையில் சிக்கித் தவிக்கிறார்கள். பெற்றோர் ரியூட்டரிக் கட்டணங்களைச் செலுத்த முடியாமல் திண்டாடும் அவலமும் எழாமலில்லை.

இலவசக்கல்வியும் இலவச மருத்துவ வசதியும் இலங்கையின் மணிமுடியில் உள்ள இரத்தினக்கற்கள் எனலாம். கியூபா , இலங்கை போன்ற ஒரு சில நாடுகளில் மாத்திரமே இப்படி கல்வியும், மருத்துவமும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் அதையும் திருடும் நோக்கோடு தனியார் கல்வி வியாபாரிகளும் தனியார் மருத்துவகூடங்களும் முனைப்போடு இறங்கியிருக்கிறார்கள்.

பெட்டிக்கடைகள் போல மூலை முடுக்கெல்லாம் தகரக் கொட்டில்களில் பாடசாலை ஆசிரியர்களும், முன்னாள் பாடசாலை ஆசிரியர்களும் கல்வி விற்பனையில் ஈடுபடுவது கல்வியையும்,கல்வித் தெய்வமாக நாம் வழிபடும் சரஸ்வதியையும் ஏளனம் செய்து அவமதிப்பதற்குச் சமமானதே.

சுயசிந்தனையுள்ள,ஆளுமையுள்ள, கற்பித்தல்திறனுள்ள அறிவையும், சமூக உணர்வையும் உடல் , உள வளர்ச்சியையும் கொண்டவர்களாக, சமூகத்துக்குச் சேவை செய்யக் கூடியவர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கம். ஆனால் இவற்றில் எதையுமே ரியூஷன் வாத்தியார்கள் கொடுப்பதில்லை. மாறாக இவற்றை எல்லாம் தடுப்பதே இவர்களின் கடமையாக உள்ளது.

குறைந்த செலவில் கொள்ளை இலாபத்தைப் பெறுவதுதான் தனியார் கல்வி நிறுவனங்களின் தாரக மந்திரம். ஒரு வகுப்பில் 100 க்கும் மேலான மாணவர்கள்.சப்புப்பலகையில் செய்த 6 அங்குல வாங்குகள், அதேபோன்ற மேசைகள் , காற்றோட்ட வசதியற்ற தகரக் கொட்டில்கள் . இவைதான் பெரும்பாலான ரியூட்டரிகளின் வகுப்பறைகள்.

இந்த ரியூட்டரிகளில் குடிதண்ணீர் வசதி இல்லை, மலசலகூடங்கள் இல்லை,முதலுதவிப்பெட்டி இல்லை. வெறுமனே ஒரு வாத்தியாரும், பிள்ளைகளை சட்டவிரோதமாகத் தண்டிக்க பிரம்பு, தடி போன்ற ஆயுதங்களும் ஒரு 'மைக்'கும் தான் இவர்களின் மூலதனம்.இப்படி மிகக் குறைந்த முதலீட்டில் பெறுகின்ற கொள்ளை இலாபத்துக்கு இவர்கள் வருமான வரி கூடக் கட்டுவதில்லை.

ஒரு பிள்ளை படித்தால் அவர்களின் சகோதரர்களும் அதே ரியூட்டரியிலேயே கற்க வேண்டும் என்ற எழுதப்படாத கட்டாயவிதியும் உண்டு. அதற்குமாறாக சகோதரர்கள் வேறு ரியூட்டரிக்குப் போனால், பல்வேறு விதங்களில் பழிவாங்குவார்கள். சுகயீனம், வைபவங்கள் என்று ஒருநாள் கூட மாணவர்கள் லீவு எடுக்க முடியாது. அப்படி லீவு எடுத்துவிட்டால் , 'வேறு ரியூசனுக்குப் போய்விட்டார்களோ?' என்ற கோணத்தில் தான் ஒவ்வொரு ரியூட்டரிகளும் சந்தேகப்படுகின்றன. அந்தளவுக்குப் பயங்கரமான வியாபாரப்போட்டி!

இப்படி மாணவர்களிடம் பணம் கறப்பதையே தொழிலாகக் கொண்ட வாத்திமார்கள், இலவசமாகவே பாடசாலைக்கல்வியும் பல்கலைக்கல்வியும் மருத்துவ வசதியும் பெற்றவர்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருந்தும். தமது கல்விக்கான நிதியை வரிகள் மூலம் செலுத்தியவர்களின் பிள்ளைகளையே இந்த ரியூசன் வாத்திமார் சுரண்டி, செல்வந்தராக வளர்கிறார்கள். தங்களிடம் படிக்க வரும் மாணவர்கள் பரீட்சையில் 70,80,90 போன்ற உயர் புள்ளிகளுக்கு குறையாமல்தான் பெறுகிறார்கள் என்ற வதந்தியைப் பரப்பவும் இவர்கள் தவறுவதில்லை. யாழில் ஒரு மிகப் பெரிய பெட்டிக்கடை(ரியூசன்) வாத்தியாருக்கு 2000 மாணவர்கள் இருக்கிறார்கள். தன்னிடம் கற்ற 200 மாணவர்கள் பரீட்சையில் சாதனை படைத்ததாக அதே ரியூசனில் பெரிய விளம்பரத்தட்டி மூலம் பறைசாற்றுகிறார். ஆனால் அதே வாத்தியாரிடம் கற்ற மிகுதி 1800 மாணவர்கள் பரீட்சையில் பெற்ற படுமோசமான பெறுபேற்றை, அவர் இந்த 200 பேரின் சாதனைப் பெறுபேற்றுக்குள் மூடி மறைத்துவிடுகின்றார். அரசியல்வாதிகளைவிடவும் ஏமாற்றுவதில் இந்த ரியூட்டரி வாத்திமார் கெட்டிக்காரர்கள். ஆனால் பாவம், பல பெற்றோருக்கு இந்த ஏமாற்றுக்காரர்களின் வித்தைகள் தெரிவதில்லை. இந்த ரியூசன் வாத்திமார்களில் பலர் பாடசாலைகளில் கற்பிப்பவர்களே. ஆனால் எல்லா வசதிகளும் உள்ள பாடசாலைகளில் இந்த வாத்திமார்கள் ஒழுங்காகக் கற்பிப்பதில்லை. முக்கியமாக நகர தேசியப் பாடசாலைகளில் நன்றாக ஓய்வெடுத்து விட்டு, ரியூட்டரியில் கொள்ளைக் காசுக்காக தொண்டை கிழியக் கத்திக் கத்திக் கற்பிப்பார்கள். அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் இவர்கள் துரோகம் செய்கிறார்கள் .

ஒரு மனிதன் நாளொன்றுக்கு 8 மணித்தியாலயங்கள் மட்டுமே வேலை செய்யவேண்டும் என்பதே உலக நியதியும் சட்டமும் ஆகும். ஆனால், எமது பிஞ்சுக் குழந்தைகளை நாளொன்றுக்கு 14 மணித்தியாலங்கள் கல்விச்சித்திரவதைக்குள்ளாக்குவதை சமுதாயம் எப்படி ஏற்றுக் கொள்கிறது? இது சிறுவர் துஷ்பிரயோகமல்லவா? இதனால் மாணவர்கள் நோயாளியாதல், உள அழுத்தங்களுக்குள்ளாதல், வன்செயலில் ஈடுபடுதல், போதைப்பழக்கத்துக்கு அடிமையாதல் போன்றவற்றுக்கு உட்படும் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. வருங்கால இளைஞர்களை வழிநடத்த நாம் தவறுகிறோம் அல்லவா? பாடசாலைக்கல்வியின் தரத்தை உயர்த்துவதன் மூலமே ரியூட்டரிகளின் ஆதிக்கத்தைப் படிப்படியாக ஒழிக்க முடியும்; ஒழிக்க வேண்டும்.

வெள்ளி ,ஞாயிறுகளில் தரம் - 9 வரையான மாணவர்களுக்கு ரியூஷன் வகுப்பு வைப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் தடை விதித்தமை ஒரு ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். தரமான மனிதவளத்தை உருவாக்கி, எமது பிரதேசத்தையும்,நாட்டையும் வளமுள்ளதாக்க இந்தச் செயற்பாடு மிகவும் அவசியம் .இந்த மாற்றத்துக்கு மக்களின் ஆதரவு பெருமளவுள்ளது. மாற்றம் வர வேண்டும் விரைவில்.




# பிறிக்ஸ் மாநாட்டு முடிவுகளும் இலங்கையின் எதிர்பார்ப்பும்

அ.நிக்ஸன்

உலகின் ஒன்பது பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளில், ஆறு நாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்பில் புதிதாக இணைந்துள்ளன. இதன்மூலம் உலகின் எண்ணெய் வளத்தை பிறிக்ஸ் நாடுகள் கட்டுப்படுத்த முடியும். இதனால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதை எவரும் மறுப்பதற்கில்லை.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளைக் கொண்ட வலுவான கூட்டமைப்புத்தான் பிறிக்ஸ். சென்ற இருபத்து நான்காம் திகதி வெள்ளிக்கிழமை வரை மூன்று நாள்கள் தென்னாபிரிக்கத் தலைநகர் ஜொஹன்ஸ்பெர்க்கில் இடம்பெற்ற பதினைந்தாவது உச்சி மாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆர்ஜென்டினா, ஈரான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, எத்தியோப்பியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளை பிறிக்ஸ் கூட்டமைப்பில் சேர்த்துக்கொள்ளத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் உறுப்பு நாடாகச் சேர்க்கப்படாமை இந்தியாவுக்குப் பெரும் ஆறுதல். ஆனாலும் ஏனைய தீர்மாணங்கள் சிலவற்றில் முரண்பாட்டோடு இந்தியா இணங்கியுள்ளது.

இந்தியாவுக்கு அமெரிக்க உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய முகம் இருந்தாலும், பாகிஸ்தான் அமெரிக்கச் சார்பு நிலையில் செயற்படுவதைச் சீனா விரும்பவில்லை. இது பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் இந்தியாவுக்குச் சாதகமான தன்மையை உருவாக்கியிருக்கிறது.

பிறிக்ஸ் கூட்டமைப்பில் இருந்து இந்தியாவை வெளியே எடுப்பதற்குரிய பல விமர்சனங்களை மேற்கு மற்றும் ஐரோப்பிய ஊடகங்கள் பகிரங்கமாகக் கடந்த ஒருமாதமாக முன்வைத்து வந்தன. ஆனால் ரஷ்ய - இந்திய உறவு பிறிக்ஸ் கூட்டமைப்பில் இருந்து இந்தியாவை வெளியே எடுக்க முடியாத சூழலை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் பிறிக்ஸில் அமெரிக்க எதிர்ப்பு நாடுகளை உறுப்பு நாடுகளாகச் சேர்க்க ரஷ்யாவும் சீனாவும் வகுத்த தந்திரோபாயத்துக்குப் பதிலாக, இந்தியா வேறு பரிந்துரைகளை வழங்கியிருந்தது. அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் பிறிக்ஸில் இணைந்து விடக்கூடாது என்ற சிந்தனை இருந்தாலும், பாகிஸ்தான் இணைந்து விடக்கூடாது என்பதில் மாத்திரமே இந்தியா கூடுதல் கவனத்தைச் செலுத்தியிருந்தது.

இந்தியாவின் இந்த உள்ளக்கிடக்கையை அறிந்து கொண்ட சீன அரசு, பாகிஸ்தானைத் தற்காலிகமாக விலக்கி எண்ணெய்வள நாடுகளை பிறிக்ஸில் இணைக்க முடிவு செய்திருக்கிறது. இதனாலேயே இந்திய நிலைப்பாடு இறுதி நேரத்தில் மாற்றமடைந்து பிறிக்ஸ் கூட்டமைப்பின் பல தீர்மானங்களுக்கு புதுடில்லி உடன்பட்டிருப்பதாக 'த ஒன்இந்தியா' ஆங்கில இணையத்தளம் விபரித்துள்ளது.

பிறிக்ஸ் மாநாடு ஒரு முக்கியமான புவிசார் அரசியல் காலகட்டத்தில் நடந்துள்ளது. ரஷ்ய - உக்ரைன் போர், ரஷ்ய - அமெரிக்க மோதல், அமெரிக்க - சீன மோதல் ஆகியவற்றுக்கு மத்தியிலும் கொரோனாத் தொற்றுநோய்க்குப் பின்னர் முதன் முறையாக நேரிலும் இந்த மாநாடு இடம்பெற்றிருக்கிறது.

அத்துடன் பிறிக்ஸ் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இந்தியாவின் சந்திராயன் நிலாவில் கால் பதித்திருக்கிறது.

பிறிக்ஸ் மாநாட்டை குழப்பவும் இந்தியாவை பிறிக்ஸில் இருந்து வெளியே எடுக்கும் நோக்கிலும் அமெரிக்க உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் பெரும் முயற்சிகள் எடுத்திருந்த நிலையில், இந்தியாவின் சந்திராயன் நிலாவில் கால்பதித்தைச் சீன அரசின்'குளோபல் ரைம்ஸ்' ஆங்கில செய்தித் தளம் பாராட்டியுள்ளது.

அத்துடன் சீனா,ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைப் பிரதான மையமாகக் கொண்ட பிறிக்ஸ் கூட்டமைப்பை அமெரிக்காவினால் வெற்றிகொள்ள முடியாது என்ற தொனியிலும் அந்த செய்தித்தளம் விமர்சித்துள்ளது. ரஷ்யா, சீனா, இந்தியா ஆகியவைதான் உலகப் பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிப்பதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ராமபோசா , பிறிக்ஸ் மாநாட்டின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டதாக'ஜியோபொலிற்றிக்கல் மிரர்' (geopoliticalmonitor) என்ற ஆங்கில ஆய்வுத் தளம் கூறுகிறது.

அதேநேரம் எண்ணெய்வள நாடுகள் பிறிக்ஸில் இணைவது பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு உதவியாக இருக்குமென 'ரைம்ஸ் ஒப் இந்தியா' நம்புகிறது. -ஏறாத்தாழ இந்தியாவைத் தவிர்த்து பிறிக்ஸ் கூட்டமைப்பில் புதிதாக அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகள் அனைத்தும் அமெரிக்கா எதிர்ப்புத் தன்மை கொண்டவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எதிர்வரும் காலங்களில் பிறிக்ஸ் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் புதிய நாணயத்தைப் பயன்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கவுள்ளன.

இது அமெரிக்க டொலரின் வீழ்ச்சியாகப் பார்க்கப்படும். இதனால் உலக அரசியலே மாறும். எண்ணெய்ப் பொருட்கள் டொலருக்குப் பதிலாக பிறிக்ஸ் நாணயத்தில் கொள்வனவு செய்யப்படும். சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இது எழுச்சியையும் கொடுக்கும்.

இதனால் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அதிர்ச்சியில் உறைந்துள்ளன. எண்ணெய்வள ரீதியாக மட்டுமல்லாது பொருளாதார ரீதியாகவும் உலக நாடுகளை பிறிக்ஸ் நாடுகள் இனிக் கட்டுப்படுத்தும் நிலை உருவாகும். முக்கியமாக பிறிக்ஸ் நாடுகளின் இந்த முடிவு மேற்கு உலக நாடுகளுக்கு மிகப்பெரிய சவாலாக அமையும்.

முன்னர் ஐந்து உறுப்பு நாடுகளாக இருந்து தற்போது பதினொரு உறுப்பு நாடுகளாக விரிவடைந்துள்ள பிறிக்ஸ் கூட்டமைப்பில் இணைவதற்கு மேலும் இருபத்து மூன்று நாடுகள் விண்ணப்பித்துள்ளன. இவை பரிசீலிக்கப்பட்டு அடுத்த மாநாட்டில் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படுமானால், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இது பெரும் சவாலாகவே அமையும் என்பது பகிரங்கம்.

இந்தப் பின்னணியில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய முகம் கொண்ட இந்தியாவின் நிலைப்பாடு ரஷ்ய- சீன கூட்டுக்குள் நிரந்தரமாக மட்டுப்படுத்தப்படுமா அல்லது மேற்கு ஐரோப்பிய முகம் தொடர்ந்து நீடிக்குமா என்பதைத் தற்போதைக்கு அனுமானிக்க முடியாது.

பாகிஸ்தான் பிறிக்ஸில் இணைய விரும்பியுள்ளது. பாகிஸ்தான் அமெரிக்கச் சார்பு நிலையில் இருந்தாலும் பாகிஸ்தானைத் தன் பக்கம் ஈர்க்க முடியுமெனச் சீனாவுக்கும் நம்பிக்கை உண்டு. ஆகவே சீனாவுடன் எல்லைப் பிரச்சினையில் சிக்குண்டுள்ள

## வடக்கு - கிழக்கில் பௌத்த மயமாக்கல் தொடரும்

இந்தியா, பிறிக்ஸ் மற்றும் ரஷ்ய உறவு போன்ற காரணங்களின் அடிப்படையில் சீனாவுடன் முரண்பாட்டில் உடன்பாடாக ஒத்துச் செல்லுதல் என்ற புதிய கோட்பாட்டை வகுத்துள்ளது.

ஆனாலும் அமெரிக்க முகம் கொண்ட இந்தியாவினால் சீனாவுடன் எவ்வளவு காலத்துக்கு ஒத்துச் செல்ல முடியும் என்ற கேள்விகள் இல்லாமலில்லை. பாகிஸ்தான் பிறிக்ஸில் இணையுமாக இருந்தால் நிச்சயமாக பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் இந்தியா முரண்படும். அல்லது இந்தியாவை பிறிக்ஸில் இருந்து முற்றாக வெளியேற்றும் வியூகங்களை அமெரிக்கா தீவிரப்படுத்தும்.

இந்தியாவின் மிகச் சமீபத்திய இரட்டை நிலைப்பாடு மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளினால் பிறிக்ஸ் பற்றிச் சந்தேகிக்க ஒரு காரணமாக அல்லது பிறிக்ஸ் கூட்டமைப்பை குறைமதிப்புக்கு உட்படுத்தும் ஒரு முக்கியமான புள்ளியாகப் பயன்படுத்தப்படக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

ஆனாலும் கடந்த பதினேழு வருடங்களாக பிறிக்ஸ் வளர்ச்சியடைந்து வருகின்றது. இது பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வெற்றிகரமான ஒருங்கிணைப்பு மற்றும் கருத்தொற்றுமையை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிப்பதாக 'குளோபல் ரைம்ஸ்' செய்தித் தளம் சுட்டிக்காட்டியுள்ளது. சீனாவும் இந்தியாவும் ஒருவரையொருவர் எதிர்க்கவோ அல்லது தடுக்கவோ மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளினால் தயாரிக்கப்பட்ட புனைகதைகள் எதுவுமே பயனற்றுப் போயுள்ளன என்றும் அந்தச் செய்தித் தளம் விபரிக்கிறது.

பிறிக்ஸ் மாநாட்டின் பின்னர் சீனா ஊடகங்கள், சீன - இந்திய முரண்பாட்டை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை என்பது புரிகிறது. இந்திய எல்லைகளில் சீனாவுடன் ஏற்படும் சர்ச்சைகளுக்கு விரைவில் சுமுகமாகத் தீர்வு காணக்கூடிய ஏற்பாடுகள் இருப்பதாக 'குளோல் ரைம்ஸ்' செய்தித் தளம் கூறுகிறது.

இந்திய ஊடகங்களும் பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் இந்தியா மேலோங்க வேண்டும் என்றும் வாழ்த்துகின்றன. சீன ரஷ்ய உறவின் மூலமாக சர்வதேசச் சந்தையில் இந்தியாவின் பொருளாதாரம் உயர்வடையும் என்று 'இந்துஸ்தான் ரைம்ஸ்' நம்புகிறது. ஆகவே இந்தப் பின்னணியில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும் இந்தியத் தீர்மானம் வகுப்போரும் மேற்கு ஐரோப்பிய முகத்தைத் தொடர்ந்தும் பேண முடியுமா அல்லது வேறு மாற்று வியூகங்கள் மூலமாக அமெரிக்காவைத் திருப்திப்படுத்தும் நகர்வுகள் கையாளப்படுமா என்பதைப் பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இனிமேல் அமெரிக்கா மாத்திரமே எதிரி என்றும், இந்தியாவுடன் எல்லைப் பிரச்சினை மாத்திரமே இருப்பதாகவும் பிறிக்ஸ் மாநாட்டின் பின்னர் சீன ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

இந்த இடத்தில் பிறிக்ஸ் கூட்டமைப்பில் இலங்கையும் இணைய வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும் தீவிர பௌத்த தேசியவாதியுமான உதய கம்மன்பில ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த வெள்ளிக்கிழமை கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா ஊடாக பிறிக்ஸ் பொருளாதாரக் கொள்கைக்குள் இலங்கையும் இணையும் என்று கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் இந்த அரசியல் பத்தியில் ஏற்கனவே விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டி ருந்தது. ஆனால் உதயகம்மன்பிலவின் கோரிக்கை என்பது சீனாவின் மேலாதிக்க வளர்ச்சியின் பின்னணியைக் கொண்டது.

உதயகம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உறுமயக் கட்சியும் அந்தக் கட்சியில் அங்கம் வகிக்கும் பௌத்த குருமாரும் மற்றும் மகாநாயக்க தேரர்களும் ஒருபோதும் இந்தியாவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பது பட்டவர்த்தனம். உதய கம்மன்பிலவின் கொள்கையோடுதான் மகாநாயக்க தேரர்களும் பயணிக்கின்றனர் என்பதும் பகிரங்கம். ஆகவே பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் இலங்கை இணைய வேண்டும் என்ற கோரிக்கையின் பின்னால் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியத் தலையீட்டைத் தடுத்தல் மற்றும் இலங்கைத்தீவில் அதுவும் வடக்கு- கிழக்கில் சீனத் தளங்களுக்கு இடமளிக்கும் தந்திரோபாயங்களே அதிகமாகவுள்ளன. தமிழர் விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சிங்கள ஆட்சியாளர்களும் மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்கும் நிலையில் இல்லை என்பதும் நிதர்சனம்.

ஈழத்தமிழர்களின் எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்டங்களின்போது எடுக்கப்பட்ட தீர்வு முயற்சிகள் குழம்பிய பின்னணியும் எவருக்கும் புரியாததல்ல. அதேநேரம் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பலவீனமான அரசியல் பொருளாதாரச் செயற்பாடுகளும் 'ஜீ- 7' நாடுகளின் மத்தியில் எழுந்துள்ள முரண்பாடுகளும் தொடர்ந்து நீடிக்குமானால் பிறிக்ஸ் கூட்டமைப்பில் சீன - ரஷ்யக் கூட்டு வலுப்பெற்று அதற்குள் இந்தியா முழுமையாக முடங்கக்கூடிய வாய்ப்புகளும் அதிகம்.

ஆனாலும் பிறிக்ஸ் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் பற்றிய செயற்பாடுகளின் பின்னணியில் மாறவுள்ள உலக அரசியல் ஒழுங்கும் மற்றும் ரஷ்ய - உக்ரைன் போர், அமெரிக்க - ரஷ்ய மோதல், அமெரிக்க - சீன மோதல் போன்ற புவிசார் அரசியல் பொருளாதார மற்றும் இராணுவ வியூகங்களின் வேகங்களுக்கு மத்தியில் இந்திய நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்ற சந்தேகம் உலக அரங்கில் இன்னமும் தொடருகிறது.

இந்தப் பின்னணியில் சிறிய நாடான இலங்கைத்தீவு கூடுதல் நன்மைகளைப் பெறும். அந்த நன்மைகள் ஊடே வடக்கு - கிழக்கில் ஈழத்தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை சீன - இந்திய அரசுகள் தத்தமது தேவைக்கு ஏற்ப பகிர்ந்துகொள்ளும் ஆபத்துகளும் விஞ்சிக் காணப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் பௌத்த மயமாக்கல் மேலும் தொடரும் என்ற தகவல் உறுதியாகியுள்ளது: குறிப்பாக கொழும்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டின் முன்பாக பௌத்த குருமார் நடத்திய போராட்டம் குறித்து சிங்களக் கட்சிகள் கூடக் கண்டிக்கவில்லை. சிங்கள, ஆங்கில ஊடகங்கள் செய்திகளை வெளியிடவில்லை. கொழும்பில் உள்ள அமெரிக்க இந்திய, சீனத் தூதரகங்கள் கூடக் கண்டிக்கவில்லை. அதேநேரம் இந்தோ - பசுபிக் பிராந்திய போட்டியினால் குறிப்பாக அமெரிக்க வியூகங்களைத் தடுக்க ஒட்டுமொத்த இலங்கைத்தீவும் சீன - இந்திய அரசுகளின் ஏட்டிக்குப் போட்டியான- அதுவும் புது வகையான - உத்திகளுக்குள் முடங்கும் ஆபத்துகளும் தென்படுகின்றன. இது பௌத்த சிங்களத் தேசியவாதம் எதிர்பார்க்கும் இலங்கையின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கும் என்பதிலும் ஐயமேயில்லை. ஆகவே இந்தப் புவிசார் அரசியல் பொருளாதார வியூகங்களும் ,போட்டிகளும் ஈழத் தமிழர்களை ஒருமித்த குரலில் ஒரு தேசமாகத் திரள வேண்டிய கட்டாயத்தையே கனகச்சிதமாகக் காண்பிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறிக்கப்படும் மேய்ச்சல் தரை

நிலாந்தன்

அண்மைக் காலங்களில் இனமுரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள - பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளின் முன்னணியில் பௌத்த பிக்குகள் காணப்படுகிறார்கள். அப்படியொரு சம்பவம் கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறத்தில் இடம்பெற்றது. அங்கே மயிலத்தனைமடு - மாதவனையில் காணப்படும் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்க முற்படும் சிங்கள விவசாயிகளுக்குத் தலைமை தாங்கிய ஒரு தேரர் , அங்கு நிலைமைகளை அவதானிக்கச் சென்ற பல்சமய ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவை நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் முற்றுகையிட்டு வைத்திருக்கிறார்.

மயிலத்தனைமடு - மாதவனை மேய்ச்சல் தரை எனப்படுவது மட்டக்களப்பின் எல்லையில் மதுறு ஓயாவின் கிளையாகிய மாந்தரி ஆற்றை எல்லையாகக் கொண்ட ஒரு செழிப்பான மேய்ச்சல் நிலம் ஆகும். இங்கே கிட்டத்தட்ட 25,000 ஹெக்டேயர் பரப்பளவான மேய்ச்சல் தரை உண்டு. தமிழ்மக்கள் அதில் பத்தாயிரம் ஹெக்டேயரைத்தான் கேட்கிறார்கள். அந்த மேய்ச்சல் தரையை நம்பி சுமார் 996 குடும்பங்கள் உள்ளன.

கடந்த நூற்றாண்டில் 1977இலிருந்து அந்த மேய்ச்சல் தரையை தமிழ்ப் பண்ணையாளர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எனினும் போர்க்காலங்களில் அது கைவிடப்பட்டிருக்கிறது. 2009 ஆம் ஆண்டு மாவட்டத்தின் அரச அதிபர் அந்த மேய்ச்சல் தரையை தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு வழங்கியுள்ளார். 2012ஆம் ஆண்டிலிருந்து சிங்கள விவசாயிகள் அந்த மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். எனினும், தமிழ்ப் பண்ணையாளர்கள் வழக்குகளைத் தொடுத்து அதன் மூலம் அந்த ஆக்கிரமிப்பை ஓரளவுக்கு கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்திருக்கிறது.

குறிப்பாக ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆளுநராக இருந்த காலகட்டத்தில் அவர் தமிழ்ப் பண்ணையாளர்களை ஒப்பீட்டளவில் பாதுகாத்திருக்கிறார். ஆனால் கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்ததும் அங்கே ஆக்கிரமிப்பு ஒப்பீட்டளவில் அதிகரித்திருக்கிறது. குறிப்பாக கோத்தாவின் மூளை என்று கருதப்பட்ட சிந்தனைக் குழாமாகிய "வியத்மக" அமைப்பைச் சேர்ந்த அனுராதா யகம்பத், கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பின் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டதாக பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். எனினும் பண்ணையாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் துணையோடு வழக்குகளைத் தொடுத்து வழக்குகளில் தமக்குச் சாதகமான ஆணைகளையும் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சிங்கள விவசாயிகள் தொடர்ச்சியாக அவமதித்து வருகிறார்கள். குறிப்பாக கடந்த ஜுன் மாதத்தில் இருந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. மேலும் இப்பொழுது நிலவும் வறட்சியும் கால்நடைகளைப் பாதிக்கின்றது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு முன்பு தலைமை தாங்கிய ஒருவர், நீதிமன்ற நடவடிக்கைகளின் விளைவாகப் பின்வாங்கி விட்டார். இப்பொழுது அங்கு நிலப்பறிப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு பெண்ணே தலைமை தாங்கி வருவதாகப் பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். நடுத்தர வயதைக் கொண்ட அந்தப்பெண் அம்பாறை, தெகிவத்த கண்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், புதையல் தோண்டுவதற்கும், காட்டை அழிப்பதற்கும் தேவையான கனரக வாகன வளங்களோடு அவர் காணப்படுகிறார் என்றும் தமிழ்ப் பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். சுற்றிவர மின்சார வேலி அமைக்கப்பட்ட பாதுகாப்பான தற்காலிகக் கொட்டிலில் அவர் அங்கே ஏறக்குறைய நிரந்தரமாகத் தங்கியிருக்கிறார். அவருக்குப் பலமான ஆளணிகள் உண்டு. அரச உயர் மட்டத்திலும் அவருக்குச் செல்வாக்கு அதிகம். கைபேசி அழைப்பின்மூலம் அவர் அரசு அதிகாரிகளைக் கையாளக்கூடியவராக உள்ளாரென பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். அந்தப் பெண் முன்பு ஆளுநராக இருந்த அனுராதாவுக்கு நெருக்கமானவர் என்றும் தமிழ்ப் பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். கடந்த வாரம் பல்சமய ஒன்றியப் பிரதிநிதிகளை முற்றுகையிட்டவர்கள் மத்தியில் அப்பெண்ணின் மகன் காணப்பட்டாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்திருக்கும் சிங்கள விவசாயிகள் ஏழைகள் அல்லர். அவர்களிடம் முச்சக்கர வண்டி, டிராக்டர், காடுகளை அழிக்கத் தேவையான கனரக வாகனங்கள் உள்ளிட்ட பெறுமதியான சொத்துகள் உண்டு. அவர்களிடம் துப்பாக்கிகளும் உண்டு. தவிர படையினரின் ஆதரவும் மகாவலி அதிகாரசபையின் பக்கபலமும் உண்டு. இதுவரையிலும் 2000 ஹெக்டேயருக்கும் குறையாத மேய்ச்சல்நிலம் அவர்களால் எரித்தழிக்கப்பட்டிருக்கிறது. காட்டையழித்து அதில் அவர்கள் சோளம், கௌபி போன்ற தானியங்களைப் பயிர்செய்கிறார்கள். தமிழ்ப் பண்ணையாளர்களின் மாடுகள் உள்நாட்டு இனங்களைச் சேர்ந்தவை. அவை உள்நாட்டுத் தானியங்களை விரும்பி உண்ணும். மேய்ச்சல் தரைக்குள் பயிர் செய்தால் என்ன நடக்கும்? மாடுகள் அந்தப் பயிர்களை மேயாமல் உண்ணாவிரதமா இருக்கும்?

இவ்வாறு தமது மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்திருக்கும் பயிர்களை மாடுகள் மேயும் பொழுது அல்லது மாடுகள் காடுகளுக்குள் செல்லும் பொழுது சிங்கள விவசாயிகள் மாடுகளை சுருக்கு வைத்துப் பிடிக்கிறார்கள் அல்லது கொல்கிறார்கள் என்று பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். இதுவரையிலும் சுமார் 5000 மாடுகள் அவ்வாறு கொல்லப்பட்டு விட்டன. மேலும் மாடுகளைப் பிடித்து வைத்துக்கொண்டு தமிழ்ப் பண்ணையாளர்களிடம் பல லட்சம் பணத்தை தண்டமாக அறவிடுகிறார்கள்.

ஒருபுறம் மேய்ச்சல் தரை சுருங்கிக் கொண்டு வருகிறது. இன்னொரு புறம் கால்நடைகள் கொல்லப்படுகின்றன, அல்லது காணாமற் போகின்றன. இப்பொழுது வறட்சியும் வாட்டுகின்றது. இவற்றின் விளைவாக அந்த மேய்ச்சல் தரையை நம்பி வாழும் குடும்பங்கள் நிச்சயமற்ற ஓர் எதிர்காலத்தை நோக்கிச் செல்கின்றன.

கிழக்கில் ஒரு லீற்றர் பால் கிட்டத்தட்ட 100 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருநூற்று இருபது ரூபா .கிழக்கில். குறிப்பாக மயிலத்தனை மாதவனை மேய்ச்சல் தரையில் கிடைக்கும் மாட்டு எருவை மலையகத்தைச் சேர்ந்த விவசாயிகள்தான் அதிகம் பயன்படுத்துகிறார்கள். அந்த மாட்டெரு வியாபாரத்தை ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவர முடியவில்லை. அதனால் சிங்கள வியாபாரிகள் மாட்டெருவை அறா விலைக்குக் கொள்முதல் செய்வதாக பண்ணையாளர்கள் முறைப்பாடு செய்கிறார்கள். அந்த மேய்ச்சல் தரை சுருங்கிக் கொண்டே போனால் அது கிழக்கின் பொருளாதாரத்தைப் பாதிக்கும். இது தொடர்பில் கிழக்கில் உள்ள, அரசுக்கு விசுவாசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறப்பது குறைவு.

கிழக்கில் உள்ள, அரசுக்கு விசுவாசமான அரசியல்வாதிகள் வடக்கை விரோதியாகப் பார்க்கின்றார்கள். ஆனால் தமது மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமிக்கும் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு விசுவாசமாகவும் பணிவாகவும் காணப்படுகிறார்கள்.

மட்டக்களப்பில் இப்பொழுது ஏழுக்கும் குறையாத கால்நடைப் பண்ணையாளர் சங்கங்கள் உண்டு. இந்தச்சங்கங்களில் மொத்தம் ஆறு லட்சத்துக்கும் குறையாத கால்நடைகள் உண்டு. மயிலத்தனைமடு மாதவனை மேய்ச்சல் தரையில் மட்டும் இரண்டு லட்சத்திலிருந்து நாலு லட்சம் வரையான மாடுகள் உண்டு. ஆனால் இவற்றில் 90 ஆயிரம் மாடுகளுக்குத்தான் காதுப்பட்டி அணிவிக்கப்பட்ட பதிவு உண்டு. காதுப்பட்டி உள்ள மாடுகளுக்குத்தான் அரச திணைக்களங்களில் பதிவு இருக்கும். பதிவு செய்யப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேய்ச்சல் தரை ஒதுக்கப்படும். இந்தவிடயத்தில் தமிழ்ப் பண்ணையாளர்கள் மாடுகளுக்கு உரிய பதிவுகளை மேற்கொள்ளத் தவறி விட்டார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மேய்ச்சல் தரையை ஆக்கிரமிப்பது என்பது கிழக்கின் பொருளாதாரத்தை அழிக்கும் ஒரு நடவடிக்கை மட்டுமல்ல. அதற்குமப்பால் அதற்கு ஒரு பரந்தகன்ற, நீண்டகால நோக்கிலான நிகழ்ச்சி நிரல் ஒன்று உண்டு. அது பல தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ்மக்களின் மரபு வழித் தாயகம் என்ற கருத்துருவத்தை சிதைப்பதன்மூலம் தமிழ்மக்களின் தேசிய இருப்பை அழிப்பதே அந்த நிகழ்ச்சி நிரல்.

முதலில் அது திட்டமிட்ட குடியேற்றங்களில் இருந்து தொடங்கியது. அதன் விளைவாக இப்பொழுது திருகோணமலை பெருமளவுக்கு சிங்கள - பௌத்தமயப்பட்டு விட்டது. கிழக்கில், அம்பாறையின் நிலைமையும் அப்படித்தான். இரண்டாவதாக, கிழக்கில் தமிழ் - முஸ்லிம் முரண்பாட்டை ஊக்குவிப்பது. அதில் அவர்கள் கணிசமான அளவுக்கு முன்னேறி விட்டார்கள். மூன்றாவதாக, வடக்குக் - கிழக்கை சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பிரிப்பது.

மூன்றாவதாக, அவ்வாறு வடக்கு? கிழக்கைப் பிரித்து கிழக்கைத் தனிமைப்படுத்தி. அங்கே தமிழ்மக்கள் ஒப்பீட்டளவில் செறிவாகக் காணப்படும் மட்டக்களப்பைத் தனிமைப்படுத்திச் சிதைத்து விடுவது. இவ்வாறு வடக்கு - கிழக்கைப் பிரித்து தமிழ்மக்களின் தாயக ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் வேலைத் திட்டத்துக்கு உதவி செய்யும் அரசுக்கு விசுவாசமான கிழக்கு மைய அரசியல்வாதிகள் தமது மேய்ச்சல் தரைகள் பறிக்கப்படுவதற்கு எதிராக துலக்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருந்த ஒரு பின்னணியில், தமிழ்த் தேசிய நிலைபாட்டைக் கொண்ட அரசியல்வாதிகள் அந்த விடயத்தில் ஒப்பீட்டளவில் அதிகம் அக்கறை காட்டுகிறார்கள். ஆனாலும் அவர்கள் பலமாக இல்லை என்பதைத்தான் அண்மைக்கால நிலைமைகள் உணர்த்துகின்றன.

குறிப்பாக செந்தில் தொண்டமான் கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பின் பண்ணையாளர்கள் மத்தியில் ஏதோ சிறிய அளவுக்கு நம்பிக்கை தோன்றியிருக்கிறது. அண்மையில் செந்தில் தொண்டமான் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களைச் சந்தித்திருக்கிறார். இச்சந்திப்பின்போது மேய்ச்சல் தரை விடயம் தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது என்பதனால் அதில் தான் நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறியிருக்கிறார். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் ஒரு செந்தில் தொண்டமானை மட்டும் வைத்து இந்த விவகாரத்தை மதிப்பிட முடியாது. கடந்த மாதம் நடந்த மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செந்தில் தொண்டமான் மேய்ச்சல் தரை விவகாரம் உட்பட மூன்று விடயங்களில் சட்டத்தை அமுல்படுத்துமாறு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதற்கமைய மாவட்ட அரச அதிபர் மூன்று விடயங்களில் சட்டத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அதன்படி நாவலடி என்ற பகுதியில் சட்டவிரோதமாக நிலத்தைப் பிடித்து வைத்திருந்த முஸ்லிம்களை பொலிஸார் அகற்றியிருக்கிறார்கள். அது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான முறுகலை அதிகப்படுத்தியுள்ளது. அதேசமயம் அரச அதிபர் குறிப்பிட்டிருக்கும் மூன்று விடயங்களில் ஒன்றாகக் காணப்படும் மேய்ச்சல் தரை விடயத்தில் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, இந்தக்காலப் பகுதியில்தான் பிக்குவின் தலைமையிலான சிங்கள விவசாயிகள் பல்சமய ஒன்றியப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை சுற்றி வளைத்திருக்கிறார்கள்.

அதாவது ஆளுநர் செந்தில் தொண்டமான் தமிழ் மக்களுக்கு ஆதரவாக முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கைதான் ஒப்பேற்றப்பட்டிருக்கிறது. சிங்கள நிலப்பறிப்பாளர்களுக்கு எதிரான நடவடிக்கையில் அவர் இன்றுவரை வெற்றி பெறவில்லை. செந்தில் தொண்டமான் நியமித்த அதே அரசாங்கத்துக்குள்தான் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராகப் பேசும் நசீர் மொஹமட் காணப்படுகிறார். அதே அரசாங்கத்துக்குள்தான் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டும் பிள்ளையானும் வியாழேந்திரனும் காணப்படுகிறார்கள். இதில் ரணில் யாருக்கு உண்மையாக இருக்கிறார்?

சிங்கள- பௌத்த நிலப்பறிப்பாளர்கள் மேய்ச்சல் தரை விடயத்தில் செந்தில் தொண்டமானை எவ்வளவு காலத்துக்கு சகித்துக் கொள்வார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஏனெனில் மேய்ச்சல் தரை விவகாரம் எனப்படுவது இந்தக்கட்டுரையில் முன்பு கூறப்பட்டது போல தமிழ் மக்களின் மரபு வழித் தாயகத்தைச் சிதைக்கும் பரந்தகன்ற நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதிதான். அதை ஒரு தமிழ் ஆளுநர் எந்தளவுக்கு மாற்றியமைக்கலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி வீடு




○ ரஜிதா அரிச்சந்திரன்

சிலர் அனுதாபப்பட்டனர், சிலர் 'இவளுக்கு வேணும் 'என்றார்கள். சிலர் அவளின் நிலையினை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். எல்லாவற்றினையும் சகித்துக் கொண்டாள். மனதில் சொல்லொணாத் துயரங்களைச் சுமந்தவளுக்கு அதைச் சொல்லி அழ யாரும் இல்லை காலமெனும் கொடியவன் பல துயரங்களை அள்ளித் தந்தாலும் அவளுக்கு ஆறுதலுக்காக சுதாவினை அனுப்பி வைத்தான். ஆனந்தியை விட இரண்டு வயது குறைந்தவன் சுதா. ஆனந்தியின் அலுவலகத்தில் கடமையாற்றி வந்தான். அவனுடனான நட்பு அவளுக்கு அளவில்லா மகிழ்வைத் தந்தது. நல்ல நண்பனாக இருப்பான் என நம்பி அவனுடன் நெருங்கிப் பழகினாள். இருவரது நெருக்கத்தினையும் பலரும் தவறாகக் கதைத்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்களுடைய நட்பை விடவில்லை. நட்பு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து முற்றி காதலாகவே மாறி விட்டது.

ஆனந்தியின் நிலையில் மாற்றம் கண்ட ஷோபாவும் இவளை கொஞ்சம் கொஞ்சமாக வெறுக்க ஆரம்பித்தாள். ஆனாலும் ஆனந்தி அதுபற்றி எந்தக் கவலையும் கொள்வதாக இல்லை. அவள் காதல் கடலில் நீந்திக் கொண்டிருந்தாள். எல்லை மீறினார்கள், எல்லாம் இன்பமாகவே இருந்தது. தொடர்ந்த காதலில் ஆனந்தி மூழ்கியிருக்கையில் ஷோபா தனிமையில் விடப்பட்டாள். அவள் தன் தனிமையை அழுகையில் கழித்தாள். படிப்பிலும் பின்தங்கிப் போனாள். தாய் என்றாலே வெறுப்புக்குள்ளானாள். ஷோபாவின் நிலை கண்ட நண்பர்கள் பலரும் அவளுக்குதவியாக இருந்தார்கள். தாயிடம் பலமுறை சண்டை போட்டாள். அவளோ கேட்பதாக இல்லை. சுதாவினை வீட்டுக்கே கூட்டி வந்து கூத்தடிக்க ஆரம்பித்தாள். இரவு பகலாக சுதாவும் அவர்கள் வீட்டிலேயே இருந்தான். பலரும் பலவிதமாகக் கதைக்க ஆரம்பித்தார்கள். ஷோபாவைக் கூட நண்பர்கள் சேர்க்காமல் தவிர்த்துவிட்டார்கள். ஷோபாவின் காதுபடவே தாயின் நடத்தை குறித்துப் பேசினார்கள்.

"என்னடி உன்ர கொம்மாவுக்கு வயது குறைந்தவர் வேணுமாம். உனக்கு எப்படி? " என்றெல்லாம் கேட்டதால் ஷோபா வெட்கத்தில் வெளியிலேயே செல்லாமல் ஒதுங்கினாள். இவ்வாறாகப் போய்க் கொண்டிருந்த இவர்கள் வாழ்வில் சுதாவும் ஓரங்கமாகி விட்டான். அவன் ஷோபாவை அப்படி இப்படிப் பார்ப்பதும் உரசுவதுமாக இருந்தான்.

அது ஷோபாவுக்குப் பிடிக்கவில்லை. அவள் தன் தாய்க்கு சொன்னாலும் அவள் அதைக் கேட்பதாக இல்லை. காதல் மயக்கம் ஆனந்திக்கு உண்மையை உணரவிடவில்லை. ஷோபாவுடன் தொடர்ச்சியாகவே சுதா சேட்டை புரிந்து வந்தான். அவள் கேவலமாகப் பேசியும் அவன் கேட்பதாகவில்லை. ஒருநாள் சாராயம் கொண்டு வந்து ஆனந்திக்கும் கொடுத்து குடித்தான். ஆனந்தி மயங்கியதும் ஷோபாவின் ரூமுக்கு சென்றவன் ஷோபாவிடம் அத்துமீற முயன்றான். தாங்கமுடியாத ஷோபா 'ரோர்ச் லைட்டால்' அடித்தாள். அவன் மயங்கிவிட்டான். ஷோபா வீட்டிலிருந்து தப்பியோடத் தொடங்கினாள்.மழை கொட்டிக் கொண்டிருந்தது.

* * * * *

வீட்டை விட்டு வந்த ஷோபா, அந்த மழையில் எங்கு போவதெனத் தெரியாமல் வீதியிலேயே நின்றாள். அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அசோக் அவளைக் கண்டதும் வாகனத்தினை நிறுத்தி விட்டு வந்து

" ஷோபா ஏன் இங்கை நிக்கிறாய்?" என்று கேட்டபடி வந்தான். ஆனாலும் அவனிடம் உண்மையைச் சொல்ல அவளுக்கு விருப்பம் இல்லை.

" ஷோபா, என்ன யோசனை பலமாக இருக்கிறது. என்னைத் தெரியவில்லையா?" என சத்தமாக அவன் கேட்டதும் , சுய நினைவுக்கு வந்தவள் ,

" சும்மா நிற்கிறன்" என்றாள்.

"சரி வா உன்னை நான் வீட்டில் விட்டு விடுகிறன்" என்றவனுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் ஷோபா மீண்டும் யோசித்தாள். அவன் அவளின் நிலையைப் புரிந்து கொண்டவன் போல,

"சரி ஷோபா நீ வா உன்னை நல்ல லேடீஸ் கொஸ்ரல்ல சேர்த்து விடுறன்" என்றதும் அவனை நன்றி உணர்ச்சியுடன் பார்த்தாள். உடனேயே அவளை ஒரு மகளிர் காப்பகத்தில் சேர்த்துவிட்டு பாதுகாவலராக தன்னையே நியமிக்குமாறு கூறி அவளுக்கு உடுப்புக்களும் வாங்கிக் கொடுத்தான் அசோக்.

"சரி ஷோபா நீ இங்கேயே இரு.நான் உன்னைப் பிறகு சந்திக்கிறன்" அசோக் போய்விட்டான்.

* * * * *

வெறி தீர்ந்ததும் எழும்பிய ஆனந்தி ஷோபாவைத் தேடினாள். அவளின் ரூமுக்குச் சென்றாள். அங்கே சுதா இருப்பதைக் கண்டதும் பயந்து விட்டாள். சுதாவை எழுப்பினாள். சுதா எழும்பவில்லை . அவனுடைய தலையிலிருந்து வழிந்த இரத்தத்தில் கட்டில் முழுதும் தோய்ந்துபோயிருந்தது. ஆனந்தி செய்வதறியாது திகைத்தாள். பழைய நினைவு வந்தது. ஷோபா தன்னிடம் பலமுறை சுதா தவறாக நடக்க முயலுவதாகச் சொன்னதை நான்தான் கேட்கவில்லை என்ற குற்றவுணர்ச்சி எழுந்தது.

" நாயே , என்ர மகளை கெடுக்கவாடா பார்த்தாய்?" எனக் கத்தினாள். பின்னர்

"ஷோபா எங்கே போய்விட்டாய்? அம்மா தப்புச் செய்து போட்டேன். எங்கம்மா நீ போனாய் ?" எனக் கதறினாள்.. ஒரு தாயாக சுதாகரித்துக்கொண்டு அவளே பொலிஸக்கு போன் பண்ணி , "நான் கொலை ஒன்று செய்துவிட்டேன் " என்று அறிவித்தாள். பொலிஸார் விரைந்து வந்தனர். அம்புலன்ஸுக்கு கோல் பண்ணி சுதாவின் சடலத்தை ஏற்றினார்கள். ஆனந்திக்கு கைவிலங்கிட்டு ஜீப்பில் ஏற்றி வீட்டுக்கு 'சீல் 'வைத்தார்கள்.

ஆனந்தி வெளியுலகத்தை பார்க்கும் திராணியற்றவளாக முகத்தைச் சேலையால் மறைத்துக்கொண்டிருந்தாள். பொலிஸ் ஜீப்பைக் கண்டதும் ஊரில் அனைவரும் கூடி விட்டார்கள். அவர்கள் தங்களுக்கு தெரிந்ததையெல்லாம் இட்டுக்கட்டிக் கதைத்தார்கள். ஒன்றுமே செய்யமுடியாது . உப்புத் தின்றவள் தண்ணீர் குடிக்கத் தான் வேண்டும்.

(தொடரும்)




# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

### 1945 பெப்ரவரி 02

யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கியின் இரண்டாவது கிளை C.லோகநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

### 1945 பெப்ரவரி 15,16

1945 பெப்ரவரி 15,16 திகதிகளில் இலங்கைக்கு புதிய அரசியல் யாப்பு உருவாக்கும் நோக்கத்துடன் சோல்பரி பிரபு தலைமையிலான குழுவினர் சகல தரப்பினரினதும் அபிப்பிராயங்களை கேட்டறிந்தனர்.

சுதந்திர இலங்கையின் அரசியல் யாப்பு சோல்பரி அரசியல் யாப்பு எனவும் அழைக்கப்படுகிறது.

1945 பெப்ரவரி 15,16 திகதிகளில் கொழும்பு நகரமண்டபத்தில் இடம் பெற்ற சோல்பரி ஆணைக்குழு விசாரணையின் போது ஜீ.ஜீ. பொன்னம்பலம் நூறு பேர் கொண்ட குழுவுடன் சென்று சமபல பிரதிநிதித்துவக் கோரிக்கை தொடர்பாக எட்டு மணித்தியாலங்கள் சாட்சியமளித்தார். இந்தக்குழுவில் இடம் பெற்ற சட்டசபை உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

கோ.நடேசையர்,நாகநாதன்.ஐ.எக்ஸ்.பெரேரா. ஜே.தியாகராஜா. எஸ்.நடேசன். இந்த ஆணைக்குழுவிடம் ஜீ.ஜீ. வழங்கிய சாட்சியம் வருமாறு:

50:50 கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டால் சிறுபான்மையினர் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவம் கிடைக்கும்.இதுவரை இருந்து வந்த குறைகளும் நீங்கும். தென் மாகாணத்திலுள்ள 21,000 முஸ்லிம்களுக்கு ஒரு ஆசனம் கிடைக்கும். தொகுதிவாரிப்பிரதிநிதித்துவம் எனக் கூறப்படுவது ஒரு வகையில் இனவாரிப் பிரதிநிதித்துவமே. மத்தியமாகாணத்தில் தமிழர்கள் அதிகமாக இருந்தாலும் சிங்களவரே தேர்ந்தெடுக்கப்படுவர். சட்டசபையில் பெரும்பாலான பிரேரணைகள் சிங்களவர்களாலேயே நிறைவேற்றப்படுகின்றன. இதிலும் பார்க்க தமிழர்கள் வீடுகளிலேயே இருந்து விடலாம். சட்டசபைக்கு வந்தும் பிரயோசனமில்லை.100 ஆசனங்கள் உள்ள சட்டசபையில் 50 ஆசனங்கள் சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்பட வேண்டும். இதுவரை நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் 66% சனத்தொகையுள்ள சிங்களவர்கள் 78% ஆசனங்களை பெற்றுள்ளனர்.இதனால் அதிகப்படியான பிரதிநிதித்துவம் பெரும்பான்மைச்சிங்களவர்களுக்கு கிடைக்கிறது. உலகில் எங்குமே இந்த மாதிரி இருக்க முடியாது.50:50 கோரிக்கை நாட்டிலுள்ள அனைத்துச் சமூகங்களுக்கும் பாதுகாப்பளிக்கும்.ஓர் இனம் இன்னொரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கும். லண்டன் நிலைமைக்கும் இலங்கை நிலைமைக்குமிடையே பெரும் வேறுபாடு உள்ளது. இலங்கை போன்ற நாட்டுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தை அப்படியே பிரதி செய்து வைக்க முடியாது.ஒரு சிங்களத்தொகுதியில் டாக்டர் கலீல் .வெற்றி பெற்றதாகக்கூறப்படுகிறது இது விஷமத்தனமான கூற்று. உண்மை என்னவென்றால் அந்தத் தொகுதியில் 6 சிங்களவர்கள் போட்டியிட்டனர். அதனால் சிங்கள வாக்குகள் பிளவுபட்டன.கலீல் இலகுவாகத் தெரிவு செய்யப்பட்டார்.100க்கு 60% உள்ள சிங்களவர்கள் 80%ஆசனங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.சனத்தொகை விகிதாசாரப்படி பங்கிட்டால் பறங்கியருக்கு 15:01 என்ற விகிதத்திலேயே ஆசனம் கிடைக்கும்.


நாங்கள் கேட்பதெல்லாம் 65%சிங்களவர்களுக்கு 50 ஆசனங்களைக் கொடுங்கள் மீதி 50 ஆசனங்களையும் ஏனைய சிறுபான்மையினருக்கு ஒதுக்குங்கள் என்பதே. ஒரு நிரந்தரமான பெரும்பான்மைச் சமூகத்தின் சட்டபூர்வ ஆதிக்கத்தை அசைக்கவோ,திருத்தவோ,குறைக்கவோ முடியாதபடி பிரிட்டன் அங்கீகரிக்கப்போகிறதா? வடமாகாணத்திலுள்ள 9 ஆசனங்களில் ஒன்றை முஸ்லிம்களுக்கு ஒதுக்க வேண்டும், மன்னாரில் முஸ்லிம்களுக்கு ஒரு ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும்.கிழக்கு மாகாணத்தில் உள்ள 7 ஆசனங்களில் மூன்று ஆசனங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.சிங்களவர்களிலும் கரையோரச்சிங்களவர்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும் வடமேல் மாகாணத்தில் 14,000 முஸ்லிம்கள் உள்ளனர். அவர்களது பிரதிநிதித்துவத்துக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 18 மாதங்கள் இங்கு வசித்த ( அதிலும் 6 மாதம் தொடர்ச்சியாக வசித்த) இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும்.

இது தான் ஜீ.ஜீ.வழங்கிய சாட்சியம் .இதனை இன்று வரையும் சிங்கள தமிழ்ப் புத்திஜீவிகள் இனவாதக் கோரிக்கை என விமர்சித்து வருவது கவலைக்குரியது.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி
பணிப்பாளர்
போதனா மருத்துவமனை
யாழ்ப்பாணம்




# கொழும்பை அடுத்து யாழ்.போதனா மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்ட என்டோவஸ்குலர் அனூரிசம் கொய்லிங்

## Endovascular Aneurysm Coiling

மூளையில் ஏற்படுகின்ற இரத்தக் கசிவுகளுக்கு என்டோவஸ்குலர் அனூரிசம் கொய்லிங் என்ற நவீன சிசிச்சை முறை இதுவரை காலமும் இலங்கையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கொழும்பு தேசிய மருத்துவமனையை அடுத்து அரச மருத்துவமனை என்ற வகையில் இரண்டாவதாக யாழ். போதனா மருத்துவமனையில் இந்த நவீன சிகிச்சைமுறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

அண்மையில் 2023.08.10 அன்று யாழ். போதனா மருத்துவமனையின் இடையீட்டு கதிரியக்கவியல் மருத்துவ நிபுணர்கள் (Interventional Radiologists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Anaesthesiologist) மற்றும் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் (Neurosurgeon), மருத்துவர்கள், தாதியர்கள், கதிரியக்கவியலாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் முதலான மருத்துவக் குழுவினர் இணைந்து இந்த நுட்பமான நவீன சிகிச்சையை எமது மருத்துவமனையில் வெற்றிகரமாக மேற்கொண்டமை மருத்துவமனை வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். மருத்துவக் குழுவினர் மிகக் குறைந்த வளங்களுடன் இந்த நவீன



## நவீன சிகிச்சை

சிகிச்சையை மேற்கொண்டமை பாராட்டுக்குரியது. அனூரிசம் என்பது இரத்த நாடிக் குழாய்களில் ஏற்படும் பலூன் போன்ற சிறிய விரிவு ஆகும். இது தற்செயலாக அல்லது இரத்தக் கசிவு ஏற்படும் போது ஊடுகதிர்ப்படம்(ஸ்கான்) மூலமும் கண்டுபிடிக்கப்படலாம்.

மூளை போன்ற இரத்த ஓட்டம் கூடிய உடற்பாகங்களில் இவ்வாறான அனூரிசம் இருப்பது ஆபத்தானது. விபத்துகளில் அல்லது சடுதியான இரத்த ஓட்ட மாற்றங்களினால் இவற்றிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். மூளையில் ஏற்படும் இதுபோன்ற இரத்தக் கசிவுகள் உயிராபத்தை ஏற்படுத்தலாம்.

மருத்துவப் பரிசோதனையின் போது இவ்வாறான அனூரிசங்கள் அடையாளம் காணப்பட்டால் இருவகையான சிகிச்சை முறைகள் தற்போது பின்பற்றப்படுகின்றன.

1. சத்திரசிகிச்சை முறை - இது நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மண்டையோட்டில் துவாரத்தை ஏற்படுத்திச் செய்யும் பெரும் சத்திர சிகிச்சையாகும்.

2. காலிலுள்ள நாடியினூடாகச் சிறிய துவாரத்தை ஏற்படுத்தி அதனூடாக நுண்ணிய குழாய் ஒன்றை மூளை வரை செலுத்தி மூளை நாடியில் ஏற்பட்ட விரிவை பிளாற்றினம் உலோகச் சுருள்களால் அடைத்தல் (Endovascular aneurysm coiling) - இது இடையீட்டு கதிரியக்கவியல் மருத்துவ நிபுணர் (Interventional Radiologist) கதிரியக்கவியல் கூடத்தில் மேற்கொள்ளும் நவீன சிகிச்சை முறையாகும்.

விபத்துகளின் போது மூளையின் உட்புறத்தில் ஏற்படும் இரத்தக் கசிவுகளை நிறுத்த இந்த நவீன சிகிச்சை முறையை மேற்கொள்ளத் தீர்மானிக்கும்போது உரிய அளவுடைய பிளாற்றினம் சுருள்கள் கையிருப்பில் இருப்பது மிகவும் அவசியமாகும். தற்போதைய நிலையில் அரசினால் இதனை வழங்க முடியாதுள்ளது. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைத் தாராளமனம் படைத்த நன்கொடையாளர்கள் வழங்க முன்வரும் போது எதிர்வரும் காலங்களில் இத்தகைய நவீன சிகிச்சைகளைத் தொடர்ச்சியாக யாழ். போதனா மருத்துவமனையில் மேற்கொள்ள முடியும். இதற்கு ஏறத்தாழ 5 மில்லியன் ரூபா நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஆளணி எண்ணிக்கை குறைவாக இருப்பினும் மருத்துவமனையானது ஒரு தேசிய மருத்துவமனையுடன் ஒப்பிடக் கூடிய பல்துறை விசேட மருத்துவ நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன் பல்வேறு நவீன மருத்துவ சேவைகளையும் சிறப்பாக வழங்கி வருகிறது. வட மாகாணம், கிழக்கு மாகாணம் மட்டுமன்றி புத்தளம், சிலாபம் முதலான வடமேல் மாகாணத்திலிருந்தும் அநுராதபுரத்திலிருந்தும் நோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வருகிறார்கள். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் இன்று தெற்கிலிருந்து பொதுமக்கள் சிசிச்சையை நாடி யாழ். போதனா மருத்துவமனைக்கு வருகின்றனர். குறிப்பாகக் கண்சத்திர சிகிச்சைக்காகவும், திறந்த இருதய சத்திரசிகிச்சை மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சைக்காகவும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் இந்த மருத்துவமனைக்கு வருகின்றனர். தற்போது சுபாஷ் விடுதியில் இயங்கும் இருதய சத்திரசிகிச்சைக் கிளினிக் பிரிவில் சிகிச்சைபெற அநுராதபுரம், நீர்கொழும்பு, புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு முதலான வடமத்திய, வடமேல்மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து மாதாந்தம் 50 க்கும் அதிகமானவர்கள் வருகின்றனர்.

விபத்துக்களின் போது மூளையின் உட்புறத்தில் ஏற்படும் இரத்தக் கசிவுகளை நிறுத்த இந்த நவீன சிகிச்சை முறையை மேற்கொள்ளத் தீர்மானிக்கும்போது உரிய அளவுடைய பிளாற்றினம் சுருள்கள் கையிருப்பில் இருப்பது மிகவும் அவசியமாகும். தற்போதைய நிலையில் அரசினால் இதனை வழங்க முடியாதுள்ளது. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைத் தாராளமனம் படைத்த நன்கொடையாளர்கள் வழங்க முன்வரும் போது எதிர்வரும் காலங்களில் இத்தகைய நவீன சிகிச்சைகளைத் தொடர்ச்சியாக யாழ். போதனா மருத்துவமனையில் மேற்கொள்ள முடியும்.

இலங்கையில் சிறந்த முறையில் தொலைமருத்துவ சேவை மூலம் சர்வதேச மற்றும் தேசியரீதியில் முன்னிலையில் விளங்கும் துறைசார் விசேட மருத்துவ வல்லுநர்களது ஆலோசனையைப் பெற்று இப்பிராந்தியத்தில் சிகிச்சை பெறும் பொதுமக்களுக்கு மிகச்சிறந்த கிகிச்சையைத் தொடர்ச்சியாக வழங்கிவரும் இலங்கையின் முன்னோடி மருத்துவமனையாகவும் ஒரேயொரு மருத்துவமனையாகவும் யாழ்.போதனா மருத்துவமனையே திகழ்கின்றது. 2019 முதல் தொலைமருத்துவ சேவையை நாம் சிறந்த முறையில் வழங்கி வருகின்றோம்.

இன்று நாம் பல்வேறு நெருக்கடிகளை, பற்றாக்குறைகளை எதிர்நோக்குகின்றோம். கடந்த 3 வருடங்களாக விக்ரோரியா வீதியிலமைந்துள்ள சுபாஷ் விடுதியின் ஒருபகுதியில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக இயங்கிவரும் அனைத்து கிளினிக் அலகுகளையும் வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இடம்மாற்றி அப்பகுதியை உரிமையாளர்களிடம் ஒப்டைக்க வேண்டியுள்ளது. சுபாஷ் விடுதியில் தினமும் 1000 க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். பிரதான மருத்துவமனைக்கு அண்மையில் கிளினிக்கை இயக்குவதற்குப் பொருத்தமான வேறோர் இடத்தைப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் சவால் மிக்கதாகக் காணப்படுகிறது.

1850 ஆம் ஆண்டு இந்த மருத்துவமனையை வட மாகாண அரசாங்க அதிபராக இருந்த பிரித்தானிய அயல்நாட்டுப் பிரதிநிதி சேர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக் ஆரம்பித்தபோது மருத்துவமனையைச் சூழ வயலும் தோட்டங்களுமே காணப்பட்டன. அன்று யாழ்ப்பாண நகரம் விளைநிலமாக இருந்தது. வர்த்தக நகரமாக இருக்கவில்லை. யாழ்ப்பாண நகரும் அதனைச் சுற்றி உருவான வர்த்தக நகரும் இந்த மருத்துவமனையை மையப்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

தினமும் 5000 க்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வடபகுதியின் ஒரேயொரு சிறப்புவகை (Tertiary care) மருத்துவமனையாகிய யாழ்.போதனா மருத்துவமனையானது இப்பகுதியில் வாழும் மக்களுடைய மருத்துவமனை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுந்தும் எழுந்தவர்

## ரி.ஆர்.மகாலிங்கம்



○ கோகுலராகவன்

ரி.ஆர்.மகாலிங்கம் பழைய தென்னிந்திய தமிழ்த் திரைப்பட நடிகர்.
பி.யூ.சின்னப்பாவின் சமகாலத்தவர். இந்த பி.யூ.சின்னப்பாவும் ரி.ஆர். மகாலிங்கமும் 'யார் சூப்பர் ஸ்டார்?' என்ற போட்டியில் இருந்தவர்கள் .
இரண்டு பேரும் சினிமாவில் கொடி கட்டிப் பறந்தவர்கள். அந்தக் காலகட்டத்தில் சூப்பர் ஸ்டாராக இருந்தவர் எம்.கே. தியாகராஜ பாகவதர் மட்டுமே. இலட்சுமிகாந்தன் கொலை வழக்கின் பின் எம்.கே. தியாகராஜ பாகவதர் வீழ்ச்சி அடைய ரி.ஆர். மகாலிங்கம் முன்னுக்கு வருகிறார்.
1951இல் எதிர்பாராவிதமாக பி.யூ.சின்னப்பாவும் மரணமடைய ரி.ஆர்.மகாலிங்கத்துக்கு மேலும் புகழ் கிடைக்க வாய்ப்பாகிறது.
1945 இல் ஏ.வி.எம். மெய்யப்பச்செட்டியார் தயாரித்த "ஸ்ரீவள்ளி" திரைப்படம் ரி.ஆர்.மகாலிங்கத்தை உச்சத்துக்குக் கொண்டு போனது. இதுவே அவர் முதன்முதலில் நாயகனாக நடித்த திரைப்படமாக இருந்தது.ஏற்கனவே சிறுவனாக பல படங்களில் நடித்தவர். ரி.ஆர்.மகாலிங்கத்தின் சிறப்பு என்னவென்றால் தானே பாடி. நடிக்கக் கூடியவர்.உண்மையில் பாடகராக வேண்டியவர் நடிகராகி விட்டமை கவலைக்குரியது.
அந்த நாள்களில் பாடி நடிக்கக் கூடியவர்களே திரைக்கு அழைக்கப்பட்டனர்.
ரி.ஆர்.மகாலிங்கம், நாடக நடிகர் எஸ்.ஜீ. கிட்டப்பாவின் வாரிசாக இருந்தவர் .அவரைப்போலவே பாடக்கூடியவர்.கிட்டப்பாவின் தொடர்ச்சியாக இவரை ரசிகர்கள் கருதினர். கிட்டப்பா எட்டுக் கட்டை சுருதியில் பாடக்கூடியவர் .அதே பாணியில் ரி.ஆர்.மகாலிங்கமும் பாடுவார். திரைப்படங்கள் கால ஓட்டத்தில் காணாமற் போகக் கூடியவை.
ஆனால் அவரது குரல் வளத்தால் ரி.ஆர்.மகாலிங்கத்தின் பாடல்கள் நீடித்து நிற்கின்றன.
திருவிளையாடல் படத்தில் "இசைத் தமிழ் நீ செய்த அருஞ்சாதனை" பாடல் இன்றும் புகழ் பெற்ற பாடல்.
"ஆட வந்த தெய்வம்" படத்தில்



"சொட்டுது சொட்டுது பாரு அங்கே"
என்ற பாடல் மெலடியானாலும் துள்ளிசைப் பாடல் வகையே.
கேட்க கேட்க சலிக்காத குரல் இனிமை.
உச்ச ஸ்தாயியில் பாடும் திறன் கொண்ட பாடகர் தான் ரி.ஆர்.மகாலிங்கம் .
குரலில் பிசிறு இருக்காது.
தாளத்தில் தளம்பல் .முறிவு இருக்காது. இதனால் பாட்டு ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பு ரி.ஆர். மகாலிங்கத்துக்கு இருந்தது.
"என்னமா பாடுகிறாண்டா" என ரசிகர்கள் பேசிக் கொள்வார்கள்.
சீர்காழி கோவிந்தராஜனை விட சுருதி சுத்தமாகப் பாடக்கூடியவர். சீர்காழியும் உச்ச ஸ்தாயிப்பாடகர்தான். சீர்காழி சிலவேளை சுருதியில் மாறி விடுவார் என்ற விமர்சனம் உண்டு.
ரி.ஆர்.மகாலிங்கம் திரைப்படங்களில் தனக்கு மட்டுமே பின்னணி பாடியவர்.மற்றவர்களுக்குப் பாட விரும்பாதவர். ஏனைய நடிகர்களுக்கு பின்னணி பாடி இருந்தால் இன்னும் சில காலம் அவர் திரை உலகில் நீடித்திருக்கலாம்.இதனால் பின்னாளில் பக்திப் பட நடிகராக மாறிப்போனார். பக்திப் படங்களுக்கு வாய்ப்புக் குறைந்த போது. நாடக நடிகராகவும். கச்சேரிப் பாட்டுக்காரராகவும் வாழ வேண்டியவராக அவரைக் காலம் தள்ளி விட்டு விட்டது. திரைப்படத்தில் நடித்தால் பொல்லாத ஆசைகள் வரும் அதிலொன்று திரைப்படத் தயாரிப்பு.இது சிலவேளை பொன்வாத்தை வெட்டிய கதையாகவே முடியும்.
ரி.ஆர்.மகாலிங்கம் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? ஆசை யாரைத்தான் விட்டது?.
அவரது விருப்பத்துக்குரிய நடிகையான எஸ் . வரலட்சுமியை நாயகியாக்க வேண்டும் என்ற ஆசையில் மோகனசுந்தரம். சின்னத்துரை ஆகிய படங்களைத் தயாரித்தார்.படங்கள் ஊத்திக்கொண்டன.பணமும் கரைந்து போக வரலட்சுமியும் மறந்து. பறந்து போனாள்.
அதை விட ரி.ஆர்.மகாலிங்கம் , இந்த இசையமைப்பாளர்தான் வேண்டும்.இந்த நடிகைதான் நாயகியாக வேண்டும் என ரி.ஆர்.மகாலிங்கம் போட்ட நிபந்தனைகளும். தயாரிப்பாளர்கள் அவரைவிட்டு விலகக் காரணமாகி விட்டன.
படங்கள் தோற்றமை,வரலட்சுமி கைவிட்டது எல்லாம் கவலை தர. திரைப்பட நடிப்பே வேண்டாமென்று ஊருக்குத் திரும்பினார்.அந்த வேளை நாடகம் கைகொடுத்தது. அவரது "ஸ்ரீவள்ளி" நாடகம் ஆயிரம் மேடை கண்டது.
"காயாத கானகத்தே" பாடலை ரி.ஆர்.மகாலிங்கம் பாடினால் ரசிகர்கள் துள்ளிக் குதிப்பது வழமை. இப்படி இருக்க. 1958 இல் கவிஞர் கண்ணதாசன் "மாலையிட்ட மங்கை" படத்தைத் தொடங்கினார்.




பதினேழு பாடல்கள் கொண்ட படம்.இதற்கு யார் பொருத்தமான நாயகன்?
ரி.ஆர்.மகாலிங்கத்திடமே கண்ணதாசன் போனார்.
"வேண்டாம் "என்றவரை "என்னை நம்பி வாருங்கள். இரண்டாம் ஆட்டம் தொடங்கலாம்."என்று நம்பிகை கொடுத்து அழைத்து வந்தார் கண்ணதாசன். இரண்டாம் ஆட்டம் தொடங்கியது. படம் வெற்றி பெற்றது.
"செந்தமிழ்த் தேன் மொழியாள்" பாடல் பட்டி தொட்டி எங்கும் கலக்கியது. அது போல இல்லாவிட்டாலும் எழுத்தோட்டப் பாடலான "திராவிட பொன்நாடே "பாடலும் நன்றாக வந்தது.
இந்த வெற்றிக்குப் பின் ரி.ஆர்.மகாலிங்கம் கவனமாகவே இருந்தார். தயாரிப்பு முயற்சியில் ஈடுபடவே இல்லை.
காதலில் விழவுமில்லை. இதனால் கொஞ்சப் படங்கள் நடிக்க முடிந்தது.
1960 இன் பின் மீண்டும் இறங்கு முகம். படங்கள் சரியாக போகவில்லை.
எம்.ஜி.ஆர்., சிவாஜி வரவு பல நடிகர்களைப் பின்னுக்குத் தள்ளியது.அதனுள் ரி.ஆர்.மகாலிங்கமும் அகப்பட்டுக் கொண்டார் .
மீண்டும் 1965 இல் ஏ.பி.நாகராஜன் திருவிளையாடல் படத்துக்காக அழைத்து வந்தார். அநேகமான இசையமைப்பாளர்கள் ரி.ஆர்.மகாலிங்கம் ஒரு காட்சியில் நடித்தாலும் அவரின் குரலுக்காக ஒரு பாடலையாவது வழங்கவே விரும்பினர்.
அந்தப் பாடல்கள் அவரின் குரல் மேன்மையால் இலகுவாகப் பிரபல்யமடைந்தன. 1978 இல் காலமாகும் போது பல நாடகங்கள் அவரின் தினக்குறிப்பு முன்பதிவில் இருந்தன. அவற்றில் நடிக்காமலே காலமாகி விட்டார்.
பி.கு: நடிகர் ரி.ஆர்.மகாலிங்கமும்,
"மாலி " என அழைக்கப்பட்ட புல்லாங்குழல் வித்துவான் TR. ரி.ஆர்.மகாலிங்கம் மகாலிங்கமும் ஒருவரல்லர். முதலெழுத்துக்கள் மட்டும் தான் இருவருக்கும் ஒரேமாதிரி.மற்றபடி வேறு வேறு நபர்கள் தான்.
புல்லாங்குழல் வித்துவான்: திருவிடைமருதூர் இராமசுவாமி மகாலிங்கம்.
நடிகர் [illegible]




○ இராகவன்

பாகம் 2

02

1990 தொடக்கத்தில நான் "இங்கிலீஸ் பள்ளிக்கூடம்" எண்டு சொல்லுற கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு எட்டாம் வகுப்புப் படிக்க. ஒரு புதுமுக மாணவனாகப் போய்ச்சேர்ந்தன். இந்த இங்கிலீஸ் பள்ளிக்கூடத்தில எங்கட பேராசிரியர் கா.சிவத்தம்பி, சிவாப்பெரியப்பா, எழுத்தாளர் தெணியான்,எழுத்தாளர் செ.கதிர்காமநாதன் (இவர் தன்ர வீட்டிலயிருந்து இந்தப் பள்ளி கூடத்து வந்து சேருற சம்பவத்தை வைச்சுத்தான் "ஒரு கிராமத்துப் பையன் பள்ளிக்கூடம் போகிறான்" எண்டொரு 'ரொப்பான' சிறுகதையை எழுதினவர். இந்தக்கதை தமிழ்பாடப்புத்தகத்திலயும் இருக்கு) எண்டு பெரிய தலையள் எல்லாம் படிச்சவை.இதை இங்கிலீஸ் பள்ளிக்கூடம் எண்டு சொல்லுறதுக்குப் பின்னாலயும் ஒரு கதையிருக்கு.
வெள்ளைக்காறன்ர ஆட்சிக்காலத்தில் இந்தப் பள்ளிக்கூடத்தில் அச்சுதம் பிள்ளை, வாசுதேவ பிள்ளை எண்டு மலையாளியள் பிரின்ஸிப்பல்மாராய் இருந்திருக்கினம். அந்தக் காலத்தில் ஒவ்வொரு வகுப்பிலயும் படிக்கிற பொடியள் ஒருத்தரோடயொருத்தர் கதைக்கிற தொண்டால் இங்கிலீஸிலதான் கதைக்க வேணும். தட்டித்தவறித் தமிழில கதைச்சால் அப்படிக் கதைச்சவை அஞ்சு சதம்'பைன்' கட்ட வேணுமாம். நான் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வாறத்துக்கு முதல் ஏழாம் வகுப்பு வரைக்கும் "ஆண்பாடசாலை" எண்டு சொல்லுற கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தான் படிச்சனான். அப்ப அங்கை அதுக்கு மேலை வகுப்புகள் இல்லையெண்டதால தான் இஞ்சை வந்தனான்.
ஆண் பாடசாலையிலயும் பேராசிரியர் கா.சிவத்தம்பி படிச்சிருக்கிறார்.மற்றது எங்கட பெருங்கவிஞன், இளங்கவிஞன் நட்சத்திரன் செவ்விந்தியனும் (அருண் அம்பலவாணர்) எனக்கு இரண்டு வகுப்பு முந்தி ஆண் பாடசாலையில தான் படிச்சவர். அவரின்ர தங்கைக்காரி "அம்பாலிக்கா" என்னோட தான் அங்க படிச்சவா. ஆண் பாடசாலையில படிச்சு 'ஸ்கொலர்சிப்' சோதனை எழுதின அனுபவத்தை "அவன்" எண்ட தலைப்பில 'யானைப்பாகன்' எண்ட பெயரில நட்சத்திரன் செவ்விந்தியன் எழுதி. அப்ப வெளிவந்துகொண்டிருந்த 'சற்றடே றிவியூ' வின்ர வாரப்பத்திரிகையான திசையில வந்ததையும் இந்த இடத்தில சொல்ல வேண்டியிருக்கு. ஆண்பாடசாலையில தொழில்நுட்பப் பாடம் எண்டிருந்தது விவசாய விஞ்ஞானம் மட்டுந்தான். மற்றது கவின்கலைப்பாடங்கள் எண்டிருந்தது சித்திரமும் சங்கீதமும் மட்டுந்தான். நடனம் இல்லை. படிக்க ஆக்களில்லை எண்டபடியால் அந்தப் பாடம் ஒருத்தரும் எடுக்கிறேல்ல.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 070 7013 060

**A/L Chemistry Tamil / English**

ஆசிரியரால் ( BSc, MSc (Chemistry) தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

076 410 5838 (CS/51292) AH-1

**தோட்டக் காணி விற்பனைக்கு**

புத்தூர் நவற்கிரி வீதியில் நவற்கிரியில் 46 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

077 706 6487

**விற்பனைக்கு**

பாவித்த பழைய ஓடுகள் விற்பனைக்கு

077 923 1945

**The Royal College of Jaffna**

O/L, A/L, கலை. வர்த்தக. ஆங்கில வகுப்புக்கள்

Kuberan Building, Chankanai Town.

தொடர்புகளுக்கு

விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.

Tel: 077 675 1649 (CS/51828) AH-1

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

யாழ் நகரில் தனி வகுப்பு

G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு

K.Ganesh B.A 077 766 8725

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Honda ACTIVA மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.

BAH-XXXX

077 813 7727 - Point Pedro (24738)AH-1

**வீடு விற்பனைக்கு**

பம்பலபிட்டி Flats, 1st Floor இல் 3Bedrooms, 2 Bathrooms கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. 26 Million

Contact : 077 865 1001

# Angel International School

## IELTS Classes
## (Academic/ General)
## In Jaffna & Manipay

Ideal for individuals who apply for settlement visa/ student visa.
Admissions available from 4th **September 2023.**

**Course Contents:**

- Reading
- Listening
- Writing
- Speaking

Duration: 03 Months
Call us for more information: 077 306 8997 / 021 225 5628

- SCHOOL ADMINISTRATION

## ஏஞ்சல் சர்வதேச பாடசாலை

**IELTS வகுப்புகள்**
**(Academic/ General)**
**யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும்**

வெளிநாட்டிற்கு குடிபெயரும் / மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு ஏற்றது.

**அனுமதிகளை 4 செப்டம்பர் 2023 முதல் பெற்றுக்கொள்ளலாம்.**
**காலம்: 03 மாதங்கள்**
**மேலதிக விபரங்களிற்கு அழைக்கவும்: 077 306 8997 / 021 225 5628**

**- பாடசாலை நிர்வாகம்**

(CR/40024)AH-1

## சென். ஜோண்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 6 இற்கான மாணவர் அனுமதி 2024

1.அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2023 முதல் பெற்றுக் கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2023 அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.
4. சமாதான நீதவான் ஒருவரால் அல்லது தற்போது கல்வி கற்கும் பாடசாலை அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (2 அங்குலம் × 2 அங்குலம்) புகைப்படம் ஒன்றும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
5. ஒரு படிவத்திற்கானதும். பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 2000.00
6. வயதெல்லைகள்:
தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2013க்கும் 31.01.2014க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
7. தமிழ் அல்லது இருமொழிமூல கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற் கொள்ளப்படலாம்
8. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 21.10.2023 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு :**

தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 6 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

**- அதிபர்கள் -**

(CR/40022)AH-1

## வேலணை - பெருங்குளம்
# முத்துமாரி அம்மன் திருக்கோயில்
# வருடாந்த மஹோற்சவம்
## சோபகிருது வருடம் - 2023



"வேலணை யூராள் விளங்கு பெருங்குளத்தின் பால்
அசைந்து நின்று அருள் பாலிக்கும் சீலத்தாள்
முத்துமாரி அம்மனாம் அந்த மூத்தம்மை தாள்
வணங்கின் சித்திக்கும் எல்லாம் சிறந்து"

# தேர்த்திருவிழா - தீர்த்தத்திருவிழா

- **29.08.2023 -** செவ்வாய்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 9.00மணிக்கு திருத்தேரில் பவனிவருதற்கு அம்மன் எழுந்தருளல்
- **30.08.2023 -** புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அம்பாளின் தீர்த்த உற்சவம்

**அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு தேரில் பவனிவரும் எம் குலதெய்வமாகிய முத்துமாரி அம்மனைத் தரிசிப்பதுடன் மறுநாள் நடைபெறும் தீர்த்தோற்சவத்திலும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.**

**குறிப்பு:-** மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியார்களின் நலன் கருதி 776 - குறிகாட்டுவான், 780 - ஊர்கா வற்றுறை வழித்தடத்தில் ஈடுபடும் பிரயாணிகள் போக்குவரத்து பேருந்துகள் தங்களது அர்ப்பணிப்புடனான பொதுநலத்துடன் கூடிய சேவையை அம்மன் ஆலயம் வரை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வேலணை.**

**தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.**

(cs.26082) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு ஆண் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். (அலுவலகப் பணியாளர்கள், கடைக்குரிய விற்பனையாளர்கள்)

வயது 18 - 35 விரும்பத்தக்கது.

**077 144 5701**

(24735)AH-1

## பாதணிகள் விற்பனைக்கு

**சன் பாதணி விநியோகஸ்தர்**
**(மொத்த விற்பனை நிலையம்)**

சிறுவர், ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கான பாதணிகள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

**விலை 135/- தொடக்கம்**

மின்சார நிலைய வீதி, பொன்னம்பலம் 3 ஆம் ஒழுங்கை.

தொடர்பு: 077 067 4452

(cs 51824)(N-1)

## பணியாளர் தேவை

கண்டியைத் தலைமையகமாகக் கொண்ட Sun Match Company (Pvt) Ltd இன் உற்பத்திப் பொருட்களை வட பகுதியில் விநியோகம் செய்வதற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**விற்பனை பிரதிநிதிகள் (வடக்கு, கிழக்கு மாகாணம்)**

தகைமை
- வயது - 40 வயதுக்கு கீழ்
- நல்ல பொதுசன தொடர்பு தொடர்பாடல் திறன்
- குறைந்தது 3 வருடம் குறிப்பிட்ட துறையில் அனுபவம்.

**விற்பனை உதவியாளர்கள் (வடக்கு, கிழக்கு மாகாணம்)**

தகைமை
- வயது - 35 வயதுக்கு கீழ்
- நல்ல பொதுசன தொடர்பு தொடர்பாடல் திறன்
- க.பொ.த. (சா/த) சித்தி.
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- பாடசாலை விட்டு வெளியேறியவர்களும் விண்ணப்பிக்க லாம்.

சுயவிவரக் கோவையினை பின்வரும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Business Development Manager
Sun Match Company (Pvt) Ltd,
Bamunupolwatte,
Kundasale.
e-mail: applications@sunmatch.lk

## JAFFNA COLLEGE, VADDUKODDAI
## ADMISSION - 2024

**தரம் 1, தரம் 6 ஆகிய வகுப்புக்களுக்குப் புதிய மாணவர்களை அனுமதித்தல்**

01. விண்ணப்பப்படிவங்கள் 04.09.2023 திங்கட்கிழமை முதல் 15.09.2023 வெள்ளிக்கிழமை வரை கல்லூரி அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். எமது பாடசாலைக்குரிய விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
02. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.10.2023 வெள்ளிக்கிழமை ஆகும்.
03. விண்ணப்ப படிவங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பூரணமாகவும், பிழையின்றியும் நிரப்பப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட முடிவுத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
04. ஒரு விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் ரூ.1000/=
05. தரம் 1 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதியும், மொழி பெயர்ப்பும் இணைக்கப் படல் வேண்டும்.
06. தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சைக்கான திகதியும் தரம் 6 இற்கான எழுத்துப் பரீட்சைக்கான திகதியும் பின்னர் அறிவிக்கப் படும்.

**வயதெல்லை**

தரம் 1 இற்கான விண்ணப்பதாரி 01.02.2018 இற்கும் 31.01.2019 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

தரம் 6 இற்கான விண்ணப்பதாரி 01.02.2013 இற்கும் 31.01.2014 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(CR/40021)AH-1

## Vacancy

**Wanted a Female Accountant Urgently for a reputed organization in Jaffna.**

Requirements:
- Degree in Accounting or Finance
- Member or Passed Finalist of CA, CIMA or ACCA
- Minimum 2 years' experience in audit firm.
- Minimum 1 year experience in corporate sector.

➡ Salary negotiable ➡ Forward your CV to:- hireinfo2023@gmail.com

Contact us on (77)766 4909

## கடை வாடகைக்குத் தேவை

சாவகச்சேரி பிரதேசத்தில் (நகர்ப் பகுதியில்) பேக்கரி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய கடை ஒன்று வாடகைக்கு தேவை.

**077 144 5701**

(24736)AH-1

## கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை

- பெண் சமையலாளர்
- அரிசிப் பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள்
- Clerk வேலை (ஆண்)
- கூலி வேலையாட்கள் (ஆண், பெண்)
- சாரதி (Heavy And Light)

தொடர்பு கொள்ள வேண்டிய இல :
**076 119 0267**

நேரம் :- காலை 9.00 am - 5.00pm

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/51808) AH-1

## மணமகன் தேவை

1. K.K.S.. இந்து கௌரவகுலம் (P), 1993, பூரட்டாதி, MBBS, FRCS Reading Phd Reading, Swiss Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33465
2. அல்வாய் - கொக்குவில், இந்து, கௌரவகுலம் (V), 1993, ரோகிணி, Masters in Colambia University, Reading Phd, அழகான சிவந்த நிறமுள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. பெண் இப்பொழுது Canada வில் Assistant Lecturer ஆக இருக்கிறார். விரும்பிய நாட்டுக்குப் போய் வாழ முடியும்.
3. துன்னாலை - புலோலி, இந்து கௌரவகுலம் (V), 1989, மிருகசீரிடம், HND - IT, English Teacher அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33465
4. இளவாலை - காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1990, அவிட்டம், Master of Science in Business and Economics, IT Consultant, Swiss Citizen அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34366
5. அச்சுவேலி, இந்து கௌரவகுலம் (V), 1992, ரேவதி, Maths Degree, Accountant, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33509
6. முல்லைத்தீவு - சாவகச்சேரி, இந்து கௌரவகுலம் (V), 1991, பூரட்டாதி, BA Reading, Teacher அழகான மண மகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33486
7. பண்டத்தரிப்பு, இந்து கௌரவகுலம் (V), 1989, மிருக சீரிடம், Assistant Manager, Swiss Citizen அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33281

www.thaalee.com
Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193

(CS/51795)AH-1

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் ஊரெழு உரும்பிராய் பலாலி வீதிக்கு அருகில் வீடு வாடகைக்கு தேவை

( வாடகை 5000ற்குள் எதிர்பார்க்கின்றோம் )

தொடர்பு : 0777 162608

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றுக்கு காங்கேசன்துறை (K.K.S) மற்றும் திருநெல்வேலியில் வேலை செய்வதற்கு மேசன், கூலித் தொழிலாளர்கள் தேவை.

**077 239 7211**

## வேலையாள் தேவை

வவுனியா நகரத்தில் தாய் இல்லாத சிறு பெண் தனது சொந்தக் கடை நடத்துகின்றார். அவருக்கு உதவியாக பெண் ஊழியர் தேவை.

**070 484 5366**

(cs 25809) (N-1)

## குத்தகைக்கு / விற்பனைக்கு

புதிய JCP (மகேந்திரா) குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு.

**077 016 5913, 077 103 8751**

(CS/5151)AH

## சிறுநீரகம் தேவை

A⁺ குருதி வகையைச் சேர்ந்த நபரொருவருக்கு (46 வயது) சிறுநீரகம் தேவை.

தொடர்பு: **077 915 2361**
**076 188 4401**

## உடன்தேவை

38 வயதுடைய ஆணுக்கு $A^+$, $A^-$, $O^+$, $O^-$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை

**074 112 4703**

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம், லுமாலா சைக்கிள், ஒற்றை இரும்புக் கதவு, முதிரை மரக்கதிரைகள், 20'x10' தகரக் கொட்டகை என்பன விற்பனைக்கு.

தொடர்பு: **076 830 7424**
**077 400 2382**



உ
சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

30.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி. சரஸ்வதி கந்தையா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.08.2023) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 30.08.2023 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 10, அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(cs 51812)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 04 . 1942



மறைவு
24 . 08 . 2023

## திருமதி பாலசுப்பிரமணியம் மகேஸ்வரி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சிறுவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் மகேஸ்வரி கடந்த (24.08.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராஜபூபதி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேஸ்வரி, கண்மணி, நித்தியானந்தம், காலஞ்சென்ற ஆனந்தர் மற்றும் ஏரம்பு, பரதகுலராணி, கமலதேவி, காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், அரியரட்ணம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகேந்திரன் (லண்டன்), ரஞ்சிதமலர் (சுவிஸ்), சந்திரகுமார், நந்தகுமார் (லண்டன்), சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தாயும், ரஜனி, காலஞ்சென்ற சுந்தரசிவம் மற்றும் பவனேஸ்வரி, வாசுகி, ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெரீன், டுசான், கிருசான், ஹெறினா, ஜீவிகா, கிருசானா, தீபிகா, டனுஜன், டனுஜா, துசாந்தன், பவினாஷ், அஜய்காந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜெய்டன், தணிக்கா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரகுமார் (மகன்)

சிறுவிளான், இளவாலை. (CR/40026)AH-1

**077 967 3788, 076 991 0228**

# பெண் உதவியாளர் தேவை

இந்தியாவில் நடனக் கல்லூரியில் பயிலும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட லண்டன் மாணவி (வயது 23) ஒருவருக்கு அவருடன் உதவியாக இருப்பதற்குப் பெண் உதவியாளர் (35 வயதுக்குட்பட்டவர்) தேவை. தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி செய்து தரப்படும். (2 வருடங்களுக்கு மட்டும்)

(CS/51825)AH-1

**076 055 7861**

# மணமகள் தேவை

01. யாழ்ப்பாணம், றோமன் கத்தோலிக்கம், குருகுலம், 1989, மூலம், Master Degree, Engineer, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
02. வடலியடைப்பு - மாவிட்டபுரம், இந்து கௌரவகுலம் (V), 1990, விசாகம், BSc, MBA, Consultant மணமகனுக்கு மணமகள் தேவை.
03. யாழ்ப்பாணம் Town - கொக்குவில், இந்து கௌரவகுலம் (V), 1988, அனுஷம், MBBS (Jaffna) Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.
04. கொக்குவில் - கந்தர்மடம், இந்து கௌரவகுலம் (V), 1992, புனர்பூசம், Bacheloers of Computer System Engineering, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
05. காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1986, சித்திரை, Information and Communication Technology, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
06. கோப்பாய் - சுன்னாகம், இந்து கௌரவகுலம் (V), 1988, பூரட்டாதி, MBA, Financial Analyst, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
07. சண்டிலிப்பாய் - தெல்லிப்பழை, இந்து கௌரவகுலம் (V), 1989, அனுஷம், B.S and Post Graduate, Human Resource Analyst, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
08. கரவெட்டி, இந்து கௌரவகுலம் (V), 1986, திருவோணம், BA (Hons), Accounting and Finance, CIMA, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
09. அச்சுவேலி, இந்து கௌரவகுலம் (V), 1990, சதயம், Software Engineer, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/51794)AH-1

**Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193**

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 05 . 1975



மறைவு
25 . 08 . 2023

## திருமதி பத்மலதா தயாகரன்

(ஆசிரியை - யா/ சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை)

மயிலியதனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மலதா தயாகரன் (ஆசிரியை - யா / சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை) நேற்றுமுன்தினம் (25.08.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுரேந்திரநாதன் தவமலர் தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கநாதன் இராசேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும், திரு.இ.தயாகரனின் (பகுதித்தலைவர் - யா / இணுவில் மத்திய கல்லூரி) அன்பு மனைவியும், செல்வன் அக்ஷயராமின் பாசமிகு தாயும், திரு. சுரேந்திரகுமார் (பொறியியலாளர் - கொழும்பு), திருமதி பத்மகுமாரி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாராணி (இணுவில்), காலஞ்சென்றவர்களான பிரபாகரன், கலைச்செல்வி மற்றும் செல்வி கலையரசி (இணுவில்), கலைமதி (ஜேர்மனி), இலங்கேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை மயிலியதனையிலுள்ள குகன் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாகரன் (கணவர்)

(cs 51830) (N-1)

# மரண அறிவித்தல்

மலர்வு
21 . 01 . 1950



மறைவு
25 . 08 . 2023

## பொன்னம்பலம் சுபாஷ்சந்திரன்

(சங்கீத கலா பூஷணம் அண்ணாமலை பல்கலைக்கழகம், முன்னாள் தயாரிப்பாளர் இசைப்பிரிவு, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்)

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் குளுக்கண்டி ஒழுங்கை கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுபாஷ்சந்திரன் நேற்றுமுன்தினம் (25.08.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் கணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் (முன்னாள் நிகழ்ச்சி தயாரிப்பாளர் - ஓய்வுபெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும், CDO பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சி தயாரிப்பாளரின் அன்புக் கணவரும், சுபாஷ்சந்திரன் துஷ்யந்தன் (வைத்தியர் - உக்கிரேன் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புத் தந்தையும், தமாரா - துஷ்யந்தனின் (Management Consultant) அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான திருஞானம், பாலசிங்கம், மற்றும் பத்மாசனிதேவி, பொன் சுந்தரலிங்கம், சரஸ்வதிதேவி, இளங்கோ ஆகியோரின் அன்புச் சகோதரனும், மணிவாசகன் (மணி), மாலினி (லாலா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 614 6414
077 902 0308

குளுக்கண்டி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு. (cs 26073) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் இன்று சீரான வானிலை

வடமாகாணத்தில் இன்றுசீரானவானிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது: மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யும்.

காற்று தென்மேற்கு திசையில் மணிக்கு 25 தொடக்கம் 35 கிலோமீற்றர் வேகத்தில் வீசும். அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையிலும் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45 தொடக்கம் 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம் – என்றுள்ளது. (ம)


சோழி பிரசன்னம் மற்றும் ஜாதகம் பார்க்கப்படும்!

★ தொழில் முன்னேற்றம் ★ கடன் பிரச்சனை தீர
★ விரைவில் திருமணம் நடக்க
★ செய்வினை தீவினை அகல
★ கணவன் - மனைவி ஒற்றுமையின்மைக்கு
★ வழக்கு விவகாரங்கள்
★ குழந்தையின்மை போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு !!

ஸ்ரீ வராஹி அம்மன் உபாசகர் குருஜி ஆனந்தன் அவர்கள்
பிரபல இந்திய சோதிடர்

சோழி பிரசன்னம் பார்க்க தொடர்புகொள்ள வேண்டிய எண்
00750 786 717


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.02.1959 | 26.08.2023 |

### கிருஷ்ணகுட்டி ஜெயக்குமார் (Mechanic)

மிருசுவிலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணகுட்டி ஜெயக்குமார் நேற்று (26.08.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணகுட்டி- அக்கினேஷ் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - இராசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், காயத்திரி - United Arab Emirates (முன்னாள் செலான் வங்கி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற ஜெய்தீஸ் மற்றும் ஜெயத்திரி (முகாமைத்துவ கணக்காளர்), ரம்மியா (Agricultural Instructor), ரமணியா (University of Peradeniya) ஆகியோரின் அன்புத் தந்தையும், டயான்- United Arab Emirates (முன்னாள் HNB வங்கி உத்தியோகத்தர்), சுரேன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சூரியகுமாரி, தவக்குமார் மற்றும் உதயகுமார், சந்திரகுமார், விஜயகுமாரி, பிறேம்குமார் (Germany), சுகுமார், கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராணி (France), சந்திரா, இருதயராணி, தில்லைநாதன், லோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகலனும், டானிக்காவின் (United Arab Emirates) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (28.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் (OLR Church, 4th Cross Street, Jaffna) ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் யாழ். புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 26093) A-1

தகவல்: குடும்பத்தினர்.


SPECIAL CHILDREN REHABILITATION CENTER

CEYLON STEPS

Our Consultant - Dr. Karthik Rajaram

(Autism, ADHD, Stroke Learning Disability, Head injure, Cerebral parsley and mor)

பற்றிக் கவலைப்படுகிறீர்களா?

Speech Theraph
Occupational Therapy
Applied Behavior Analysis Therapy
Physio Therapy
Special Education

எமது சேவைகளாவன தகுந்த

Psychologists, Physiotherapists, Speech Therapists

இனால் வழங்கப்படும்.



தொடர்புகளுக்கு

Ceylonstepsjaffna@gmail.com
+94 777 34 67 05
+94 77 4197 283
www.ceylonsteps.org
44, Palaly Road, Thirunelvely, Jaffna.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 04 - 1942 | 21 - 08 - 2021 |

### அமரர் இராசையா நாகச்சந்திரா

(Retired District Inspector of Telecom)


திதி : ஆவணி வளர்பிறை சதுர்த்தசி

ஆண்டுகள் இரண்டு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே
மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் ! - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே !
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

நினைவுகளுடன்
குடும்பத்தினர்
Dr.N. கீர்த்தன்

(CS 26085 M-1)

## மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 23.08.1943 | 25.08.2023 |

### கார்த்திகேசு உருத்திரசுந்தரம் (கடவுள்)

(முன்னைநாள் சாலை முகாமையாளர், இலங்கை போக்குவரத்து சபை, காரைநகர்)

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு உருத்திரசுந்தரம் நேற்றுமுன்தினம் (25.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நாகமுத்து தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கண்ணகாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், கோகிலா (ஆசிரியர் - யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), தவபாலன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், கேதீஸ்வரன் (ஆசிரியர் - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), நிரோஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷாந், லக்சயன், கிருஷ்மன் (மாணவர்கள் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), திவக்சன் (மாணவன் - யா / ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான லோகசுந்தரம், தங்கபூரணம், சோமசுந்தரம், விஜயசுந்தரம், சௌந்தரம் மற்றும் யோகராசா, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சோமசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலம் வீதி, கைதடி மேற்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
077 8034 224, 077 7570 076

CS 51832 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org